நம்பகத்தன்மையை மேம்படுத்தல்

ஆண்டறிக்கை
2019



SLAASM3

இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு
நியமங்களின் கண்காணிப்புச் சபை

இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபையானது 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதாகும்.

இந்த சபையின் தொழிற்பாடுகள் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொழில் முயற்சிகள் (பக்கம் 64 இனை பார்க்கவும்) நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு, முன்வைத்தல் மற்றும் கணக்காய்வின் போது அவை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடனும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களுடனும் இணங்குகின்றனவா என்பதனை கண்காணித்தலாகும்

உள்ளடக்கம்

சபையின் உறுப்பினர்கள் 1

2019 நவம்பர் உள்ளவாறு சபையின் உறுப்பினர்கள் 2

சபைக்கான அவதானிப்பாளர்கள் / அழைப்பாளர்கள் 2019 நவம்பர் 29 இல் உள்ளவாறு 5

சபையினால் நியமிக்கப்பட்ட உப குழுக்கள் - 2019 6

சபையின் தற்போதய பதவியணியினர் 7

சபையின் தொழில்நுட்ப பதவியணியினர் 8

செயற்பாடுகளின் மீளாய்வு 2019 9

2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிதிக்கூற்றுகள் தொடர்பான மீளாய்வின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் 17

2019 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொண்ட பணிகள் மற்றும் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் 19

கணக்காய்வுப் பரிசோதனை – 2019 20

இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபையின் செயலாற்றலை மேம்படுத்துவதற்காக பின்பற்றப்பட வேண்டிய குறுங்கால மற்றும் நடுத்தர கால நடவடிக்கைகள் 26

செயலாற்றல் புள்ளிப் படிவம் 28

2019 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன இணங்கக்கூடிய குறித்துரைக்கப்பட்ட வணிக நிறுவனங்களின் (SBE's) பட்டியல் 30

2019 ஆம் ஆண்டின் போது மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கிடையே அவதானிப்புக்களுடன் இணங்கிய அவதானிப்புக் கடிதங்கள் மூலம் தொடர்பு கொள்ளப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளின் பட்டியல் 39

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்காத பட்டியலிடப்பட்ட கம்பனிகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களும் 44

2019 ஆம் ஆண்டின் போது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவத்தினால் நியமங்களை ஏற்படுத்துவதுடன் தொடர்புடைய செயற்பாடுகள் 45

கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை 46

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான தற்போதைய நிலைமை 50

நிதி நிலைமைக் கூற்று 53

நிதிச் செயலாற்றல் கூற்றும் விரிவான வருமானக் கூற்றும் 54

தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று 55

காசுப்பாய்ச்சல் கூற்று 56

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 57

குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் - SBEs 64

சபையின் உறுப்பினர்கள்

ஆர். ஏ.ஏ ஜயலத் *FCA, B Com(SP), MBA, MA Econ* துணை ஆளுநர், இலங்கை மத்திய வங்கி	தலைவர்	
டி.என்.ஆர். சிறிவர்த்தன *BA (Hons.), LLB, LLM, Attorney-at-Law* கம்பனிகள் பதிவாளர் நாயகம்	பதவி வழி உறுப்பினர்	
எ.என். குருகே *BSc , B. Admin* ஆணையாளர் நாயகம் - உள்நாட்டு இறைவரித் திணைக்களம்	பதவி வழி உறுப்பினர்	
வி.பி. விஜயகுணவர்தன *BA (Hons)*, MA (நிதிசார் பொருளியல்) பணிப்பாளர் நாயகம் - இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு	பதவி வழி உறுப்பினர்	
எல்.எல்.எஸ். விக்ரமசிங்க *FCA, FMAAT* பங்காளர், பி.ஆர். த சில்வா அன்ட் கோ முன்னால் தலைவர், ப.க இலங்கை	நியமன உறுப்பினர்	இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (ப.க. இலங்கை)
எ. ஹேரத் *FCA, BSc, MBA, MAFE* பங்காளர், ஏனஸ்ட் அன்ட் யங்	நியமன உறுப்பினர் (2019 மே 25 வரை)	(ப.க. இலங்கை)
எச்.எம்.ஏ. ஜயசிங்க *FCA, FCMA, CIPFA* பங்காளர், ஏனஸ்ட் அன்ட் யங்	நியமன உறுப்பினர் (05 யூலை 2019 மு.அ.வ.)	(ப.க. இலங்கை)
டபிள்யு.டபிள்யு.ஜெ.சி. பெரேரா *FCA, BSc (B.Admin), CFE* பங்காளர் - KPMG, தலைவர் ப.க. இலங்கை	நியமன உறுப்பினர்	(ப.க. இலங்கை)
எ. டீ வாஸ் குணசேகர *FCA, FSCMA* தொகுதி பிரதான நிதி உத்தியோகத்தர், சம்பத் வங்கி பீஎல்சீ	நியமன உறுப்பினர் (2019 மே 25 வரை)	இலங்கை வங்கியாளர் சங்கம்
செல்வி. எ. கால்லகே *BBA (Sp), MBA, FCMA(UK), CGMA, CPA (Australia) Dip. in Com. (Papua New Guinea)* பிரதான நிதி உத்தியோகத்தர் - ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சி	நியமன உறுப்பினர் (05 யூலை 2019 மு.அ.வ.)	
பி.எல்.சி. பீரிஸ் *FCA, Attorney-at-Law* முகாமைத்துவ பங்காளர் - பி எல் சி லோ சேம்பர்ஸ்	நியமன உறுப்பினர்	இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்
செல்வி. என். சிவபிரகாசம் *FCA, FCMA (UK)* பிரதான நிதி உத்தியோகத்தர் எய்கன் ஸ்பென்ஸ் பீஎல்சீ	நியமன உறுப்பினர் (2019 மே 25 வரை)	இலங்கை வர்த்தக சம்மேளனம்
ஏ. பீரிஸ் *ACA, FCMA (UK), CGMA*	நியமன உறுப்பினர் (05 யூலை 2019 மு.அ.வ.)	
எஸ்.என். ஜயசிங்ஹ *FCMA (UK)* தொகுதி பணிப்பாளர், நிதி, சிலோன் பிஸ்கட் தொகுதி கம்பனி	நியமன உறுப்பினர் (2019 மே 13 வரை)	பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகம்
எச். பிரேமரத்ன *BSc (கணனி விஞ்ஞானம்), MBA, FCMA (UK), FCCA (UK), CGMA* குழு நிதிப் பணிப்பாளர் - பிரண்டிக்ஸ் அப்பரல் லிமிடட்	நியமன உறுப்பினர் (05 யூலை 2019 மு.அ.வ.)	
பேரா. செல்வி. எஸ். சேனாரத்ன *BSc (Hons), MBA, PhD (Fin)* கணக்கீட்டில் பேராசிரியர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	நியமன உறுப்பினர் (05 யூலை 2019 மு.அ.வ.)	பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு
திருமதி. எம்.டி.ஜி.எல். பெரேரா *FCA, MBA*	சபையின் செயலாளர்	

* இலங்கை வர்த்தக, கைத்தொழில் கழக சம்மேளனத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பிப்பினர் ஒருவர் சபைக்கு நயமிக்கப்பட்டிருக்கவில்லை.

சனாதிபதியின் பீஎஸ்/எஸ்பீ/எஸ்பி/சுற்றறிக்கை/02/2019 சுற்றறிக்கைக்கு இணங்க 2019 நவம்பர் 29 ஆந் திகதி மேலே குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்கள் சபையிலிருந்து இராஜினாமா செய்திருந்ததுடன் அவ்வாறு இராஜினாமா செய்த உறுப்பினர் மீண்டும் 2020 இல் புதிய சபைக்கு மீள நியமனம் செய்யப்பட்டனர்.

சபையின் உறுப்பினர்கள்

29 நவம்பர் 2019 அன்றுள்ளவாறு



ஆர்.ஏ.ஏ ஜயலத்

FCA, B Com (Sp), MBA, MA (Econ)

திரு. ஜயலத், அவர்கள் சபையின் தலைவர் ஆவார். அவர் இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநராக இருப்பதுடன் வெளிநாட்டு ஒதுக்கீட்டு, முகாமைத்துவம், நிதிக்கொள்கை அமுலாக்கத்தை கண்காணித்தல், உள்நாட்டு வங்கிச் செயற்பாடுகள், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் மற்றும் தகவல் தொழிநுட்பம் என்பனவற்றிற்குப் பொறுப்பாக உள்ளார். அவர் இலங்கை மத்திய வங்கியில் 30 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட சேவை அனுபவத்தையும் கொண்டுள்ளார்.



டி. என். ஆர். சிறிவர்தன

B.A. (Hons), LLB, LLM, Attorney at Law,

திரு. சிறிவர்தன அவர்கள் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் 1988 ஆம் ஆண்டு இணைந்திருந்தார். தற்போது அவர் கம்பனிகள் பதிவாளர் நாயகமாக சேவை புரிந்து வருகின்றார். அவர் 32 வருடங்களுக்கும் மேற்பட்ட சேவை அனுபத்தை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் கொண்டுள்ளார். திரு. சிரிவர்தன இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பதவி வழி சபை உறுப்பினரொருவராகவும், இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராகவும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்றல் ஆணைக் குழுவின் பதவி வழி சபை அங்கத்தவராகவும் உள்ளார்.



எ.என். குருகே

BSc., B. Admin

திரு. குருகே அவர்கள், உள்நாட்டு இறைவரி ஆணையாளராக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் 36 ஆண்டுகளுக்கும் மேலாக சேவை புரிந்து வருகின்றார் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான இவர் வியாபார நிர்வாகமானி பாடத்துறை பட்டத்தையும் வணிகமானியில் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். அதற்கு மேலதிகமாக ஐக்கிய இராச்சியத்தின் கிரீன் விச் ஸ்கூல் ஒப் பிசினஸ் அன்ட் பினான்ஸ் நிறுவனத்தில் தந்திரோயாபாய முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவ டிப்ளோமா பாடநெறியையும் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தில் ஆங்கிலத்தில் தொழில்துறைசார் டிப்ளோமா பாடநெறியையும் வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளதுடன் இலங்கை பொது நிதிக் கணக்காளர் கழகத்தின் (APFASL) உறுப்பினராகவும் உள்ளார்.



வி.பி. விஜேகுணவர்தன

BA (Hons), MA (Financial Economics)

திரு. விஜேகுணவர்தன இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை சபையின் (SEC) பணிப்பாளர் நாயகமாவர். 2015. ஆம் ஆண்டில் பணிப்பாளர் நாயகமாக கடமைகளை பொறுப்பேதற்கு முன்னர், முதலீட்டு பகுப்பாய்வுகள் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பான இவர் எட்டு வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தினை கொண்டிருப்பதுடன், மூலதனச் சந்தையினை அபிவிருத்தி செய்வதற்கும் மீளமைப்பு செய்வதற்கும் தனது தலைமைத்துவத்தின் ஊடாக பல்வேறுபட்ட பிரதான நிகழ்ச்சி நிரல்களை மேற்கொண்டுள்ளார். அத்துடன் இவர் இலண்டன், பிணையங்கள் மற்றும் முதலீட்டு நிறுவனத்தில் இருந்து சர்வதேச மூலதனச் சந்தைகள் தொடர்பான தகைமையைப் பெற்றுள்ளார்.

சபையின் உறுப்பினர்கள்

29 நவம்பர் 2019 அன்றுள்ளவாறு



எல்.எல்.எஸ். விக்ரமசிங்க

FCA, FMAAT

திரு. விக்ரமசிங்க அவர்கள் பீஆர்டீ (BRD) சில்வா கம்பனியின் பங்காளர் ஆவார். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் முன்னால் தலைவராக இருந்ததுடன், கணக்காய்வு, காப்பீடு சேவைகள், தடவியல் புலனாய்வு மற்றும் வரியியல் தொடர்பாக 22 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தை கொண்டுள்ளார். அவர் தற்போது இலங்கை கிரிக்கட் சபையின் பொருளாளராக இருப்பதுடன் கொமஷல் கிரிடிட் மற்றும் பினான்ஸ் பீஎல்சீ இன் சபை உறுப்பினராகவும் உள்ளார்.



ஏ. பீரிஸ்

ACA, FCMA (UK), CGMA

திரு பீரிஸ், காகில்ஸ் (சிலோன்) பீஎல்சீ இன் பணிப்பாளர் ஆவர். இவர் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ மற்றும் வரையறுக்கப்பட்ட காகில்ஸ் பூட்ஸ் (தனியார்) கம்பனி மற்றும் மேலும் பல கம்பனிகளில் மதியுரையாளராக இருக்கின்றார். அவர் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் சந்தைப்படுத்தல், நிதி மற்றும் உற்பத்தி போன்ற துறைகளில் வேறுபட்ட சிறந்த அனுபவத்தையும் கொண்டுள்ளார்.



டபில்யூ. டபில்யூ. ஜே. சீ பெரேரா

FCA, B.Sc (B.Admin.), CFE

திரு. பெரேரா, இலங்கை பட்டயக் கணக்காளர் நிருவகத்தின் உப தலைவரும், இலங்கை மற்றும் மாலை தீவுகளிலுள்ள கே.பி. எம்.ஜி இன் பங்காளருமாவார். கணக்காளர்களின் தெற்காசிய கூட்டவையின் சிறிய மற்றும் நடுத்தர அப்பியாசக் குழு (SAFA) மற்றும் தொழில்சார் ஒழுக்கநெறி மற்றும் சுயாதீனக் குழு அங்கத்தவராகவும் இருக்கின்றார். அத்துடன், ஆசிய மற்றும் பசுபிக் இணைவுறவுக் கணக்காளர் கூட்டமைப்பின் சபையின் பொதுத் துறை நிர்வாக முகாமைத்துவக் குழுவின் (CAPA) உறுப்பினராகவும் இருக்கின்றார்.
இவர் ஐக்கிய அமேரிக்காவின் சான்றுதிப்படுத்தப்பட்ட மோசடி பரீட்சகர் கழகத்தின் சான்றிதழையும் கொண்டுள்ளார்.



செல்வி. ஏ. கால்லகே

BBA (SP), MBA, FCMA(UK), CGMA, CPA (Australia), Dip.in. Com. (Papua New Guinea)

செல்வி ஏ. கால்லகே ஹட்டன் நஷனல் வங்கி பிஎல்சி நிறுவனத்தின் பிரதான நிதி உத்தியோகத்தராகவும் எச் என் பீ இன் ஒட்டுமொத்த நிதிச் செயற்பாடுகளிலும் ஈடுபாட்டினை கொண்டுள்ளார். அவர் வங்கித்துறையில் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் இரண்டு தசாப்த அனுபவத்தை கொண்டுள்ளார். அத்துடன் அவர் எல்வீஎல் எனர்ஜி பன்ட் பீஎல்சீ இன் சபை உறுப்பினராகவும் செயற்படுகின்றார்.

சபையின் உறுப்பினர்கள்

29 நவம்பர் 2019 அன்றுள்ளவாறு



எச். பிரேமரத்ன

BSc (Computer Science), MBA, FCMA(UK), FCCA(UK), CGMA

திரு. பிரேமரத்ன அவர்கள் பிரன்டிக்ஸ் தொகுதியின் தொகுதி நிதிப் பணிப்பாளராகவும் பல கம்பனிகளின் சபைகளில் பணிப்பாளர் அல்லது முகாமைத்துவ பணிப்பாளராகவும் செயற்படுவதுடன் அவர் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் குழு உறுப்பினராகவும் இலங்கை வங்கியின் சபை உறுப்பினராகவும் செயற்படுகின்றார். அவர் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் முகாமைத்துவக் கணக்கீட்டுத்துறை போன்ற பரீட்சைகளுக்கு விரிவுரையாற்றுதலில் 11 வருட அனுபவத்தையும் கொண்டுள்ளார். அத்துடன் CIMA இன் உலகலாவிய நிதி முகாமைத்துவ விருது வழங்கல் 2009 ஆம் ஆண்டிற்கான சிறந்த போதனாசிரியர் விருது வழங்கி வைக்கப்பட்டது.



பேரா. (செல்வி) எஸ். சேனாரத்ன

BSc (Hon), MBA, PhD (Fin)

செல்வி சேனாரத்ன, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கணக்கியல் துறையில் கணக்கீட்டில் பேராசிரியராக உள்ளார். அவர் ஒரு ஆராய்ச்சியாளராக இருப்பதுடன் உயர்மட்ட ஆளுகை, கணக்கீடு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் மற்றும் கணக்கீட்டுக் கல்வி தேசிய மற்றம் சர்வதேச அளவில் ஈடுபட்டுள்ளார். அவர் தனது ஆராய்ச்சி பணிகளை அங்கீகரிப்பதற்கான விருதுகளையும் வென்றுள்ளார் மற்றும் கணக்கியல் கல்வி மற்றும் ஒருங்கிணைந்த அறிக்கையிடல் குறித்த பல்வேறு உள்ளுர் மற்றும் சர்வதேச மன்றங்களில் குழு உறுப்பினராக பங்கேற்றார். அவர் தற்போது இலங்கையில் உலக வங்க நிதியிடல் திட்டங்கள் மற்றும் தேசிய மட்ட கல்வி நிலையங்களில் தொழில்சார் அபிவிருத்தி மற்றும் தர உறுதிப்பட்டு செற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றார்.

சட்டரீதியான தணிக்கை தரநிலைகள் - குழு தலைவர்



பி.எல்.சீ. பீரிஸ்

FCA, Attorney-at-Law

திரு. பீரிஸ், பீஎல்சி சட்ட சம்மேளனத்தின் முகாமைத்துவப் பங்காளராக இருப்பதுடன், அவர் முதலீடு, வங்கியியல், நிதியியல் மற்றும் சட்டம் என்பவற்றில் 24 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவர் சட்டம் மற்றும் நிதித் துறையில் தொழில்சார் நிபுணத்துவம் கொண்டிருந்த போதிலும் அவர் ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவக் கணக்காளர்களின் பட்டயக் கணக்காளர் (CIMA) நிறுவனத்தினால் நடாத்தப்படும் இறுதிப் பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளார். அவர் 2019 இல் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் ஆளுகை சபையில் அங்கத்துவராக பணியாற்றுகின்றார் அத்துடன் தற்போது சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டத்தரணிகள் சபையில் தூதுவ அங்கத்தவராகவும் பணிபுரிகின்றார்.



எச்.எம்.ஏ ஜயசிங்ஹ

FCA, FCMA, CIPFA

திரு.எச்.எம்.ஏ ஜயசிங்ஹ அவர்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன் அவர் ஏனஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தின் சிரேஷ்ட பங்களாராவார். அத்துடன் அவர் அடைவு மற்றும் தொழில் பயிற்சி துறையின் தலைவராகவும் அந்நிறுவனத்தின் வங்கி மற்றும் நிதிச்சேவைகளுக்கான பணிப்பாளராகவும் சேவையாற்றுகின்றார்.

திரு. ஜயசிங்ஹ அவர்கள் 37 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கணக்கீடு மற்றம் கணக்காய்வின் அனுபவத்தை கொண்டுள்ளதுடன், சர்வதேச கணக்காளர்கள் ஒன்றியத்தின் (IFAC) சர்வதேச கணக்கீட்டு கல்வி நியமங்கள் சபையின் உறுப்பினராகவும், தென் ஆசியாவின் கணக்காளர்கள் ஒன்றியத்தின் (SAFA) கணக்கீட்டு நியமங்கள் குழுவின் தலைவராகவும், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் நியதிச்சட்ட கணக்கீட்டு நியமங்கள் குழுவின் தலைவராகவும் உள்ளார்.

சபைக்கான அவதானிப்பாளர்கள் / அழைப்பாளர்கள்

29 நவம்பர் 2019 அன்றுள்ளவாறு

சபைக்கான் அவதானிப்பாளர் - திறைசேரி பிரதிநிதி



கே. சத்தியகுமார்

BBA (Hon.), MBS

திரு. சத்தியகுமார், நிதிப் பொருளியல் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சில் கணக்காளராக பொதுத்துறை சேவையில் 20 வருட அனுபவத்துடன் உள்ளார். அவர் வரையறுக்கப்பட்ட எக்ஸ்பிரஸ்வே டிரான்ஸ்போட் (தனி) கம்பனியின் சபையில் ஒரு உறுப்பினராக செயற்படுகின்றார்

சட்டரீதியான தணிக்கை தரநிலைகள் குழு தலைவர்



டீ.ஜே.எஸ். ராஜகாரியர்

FCA, FCCA, FCMA, CGMA

திரு. ராஜகாரியர் அவர்கள், கே.பீ.எம்.ஜீ. இலங்கையின் பங்காளர், அவர் பொதுக் கணக்கீட்டு நடைமுறைகளில் 32 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவையைக் கொண்டுள்ளதுடன், தற்போது அவர் கே.பீ.எம்.ஜீ இன் கணக்காய்விற்கு தலைவராக செயற்படுகின்றார். அத்துடன் அவர் கே.பீ.எம்.ஜீ இன் கணக்காய்வின் ஆழமான பகுப்பாய்வு மற்றும் தர உறுதிப்பாட்டிற்கு பொறுப்பாக உள்ளதுடன் அவர் இலங்கை ஏசீசீஏ உறுப்பினர் வலையமைப்பின் தலைவராகவும் உள்ளார்.

திரு. ராஜகாரியர் அவர்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் நியதிச்சட்ட கணக்காய்வு நியமங்கள் குழுவின் தலைவராகவும் ஏனைய குழுக்கள் மற்றும் பீடங்களில் கொள்கைகளை உருவாக்குவதற்கு வழிகாட்டல்களை வழங்குபவராகவும் செயற்பட்டு வருகின்றார்.

பதில் பணிப்பாளர் நாயகம்



திருமதி. அனுஷா மொஹொட்டி

FCA, FCMA (UK), CGMA, BBA (Hons,), MBA (Leicester)

இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையின் பிரதி பணிப்பாளரான பதில் பணிப்பாளர் நாயகம் திருமதி அனுஷா மொஹொட்டி அவர்கள் தனது கடமை காலம் பூராகவும் வர்த்தக துறையில் வெவ்வேறு பிரிவுகளில் நிதி மற்றும் வியாபார முகாமைத்துவும் தொடர்பாகவும் கணக்காய்வு தொடர்பாகவும் 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தையுடையவராவார். அவர் 19 ஆண்டுகள் பூராகவும் கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்களுடன் இணங்குவது தொடர்பாக ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதுடன் இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையில் சேவையாற்றி வருகின்றார்.

அவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்தவரொருவராக இருப்பதுடன் ஐக்கிய நாடுகளின் பட்டய முகாமைக் கணக்குகள் நிறுவனத்தின் அங்கத்தவராகவும் உள்ளார். அவர் ஐக்கிய இராச்சியத்தின் லிஸ்டர் பல்கலைக்கழகத்தின் வியாபார நிர்வாகமானி தொடர்பாக முதுமாணி பட்டத்தை பெற்றுள்ளதுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வியாபார நிர்வாகமாணி பட்டதாரியுமாவார்.

சபையினால் நியமிக்கப்பட்ட உப குழுக்கள் - 2019

கணக்காய்வு குழு

திரு. எல்.எல்.எஸ். விக்ரமசிங்க - தலைவர்

செல்வி. என். சிவப்பிரகாசம் - உறுப்பினர் (2019 மே 25 வரை)

திரு. ஏ.டீ. வாஸ் குணசேகர - உறுப்பினர் (2019 மே 25 வரை)

திரு. ஏ. என் குருகே - உறுப்பினர் (2019 யூலை 30 முதல்)

திரு. கே. சத்தியகுமார் - உறுப்பினர் (2019 யூலை 30 முதல்)

ஊதிய குழு

திரு. ஆர். ஏ.ஏ ஜயலத் - தலைவர்

திரு. பீ.எல்.சீ. பீரிஸ் - உறுப்பினர்

திரு. என். ஜயசிங்ஹ - உறுப்பினர் (2019 மே 13 வரை)

திரு. வீ. பீ. விஜயகுணவர்தன - உறுப்பினர் (2019 யூலை 30 முதல்)

தொழில்நுட்ப உப குழு

செல்வி. என். சிவப்பிரகாசம் - தலைவர் (2019 மே 25 வரை)

செல்வி ஏ. கால்லகே - தலைவர் (2019 யூலை 30 முதல்)

திரு. ஏ.டீ. வாஸ் குணசேகர - உறுப்பினர் (2019 மே 25 வரை)

திரு. எஸ்.என். ஜயசிங்ஹ - உறுப்பினர் (2019 மே 13 வரை)

திரு. எச்.எம்.ஏ. ஜயசிங்ஹ - உறுப்பினர்

திரு. ஏ. பீரிஸ் - உறுப்பினர் (2019 யூலை 30 முதல்)

பேரா. (செல்வி) எஸ். சேனாரத்ன - உறுப்பினர் (2019 யூலை 30 முதல்)

தகவல் தொழில்நுட்ப குழு

திரு. ஆர். ஏ. ஏ ஜயலத் - தலைவர்

திரு. ஏ. ஹேரத் - (2019 மே 25 வரை)

திரு. எஸ். என். ஜயசிங்ஹ - உறுப்பினர் (2019 மே 13 வரை)

திரு. டபிள்யூ. டபிள்யூ. ஜே. சி பெரேரா - உறுப்பினர்


திரு. எச். பிரேமரத்ன - உறுப்பினர் (2019 யூலை 30 முதல்)

திரு. டி.என்.ஆர். சிரிவர்தன - உறுப்பினர் (2019 யூலை 30 முதல்)

பணிப்பாளர் நாயகம் SLAASMB - உறுப்பினர்

சபையின் தற்போதய பதவியணியினர்





1. கே. சிவகுமார்
2. திருமதி. ஆஷா அஹமத்
3. திருமதி. அனுஷா ஐ மொஹெட்டி
4 திருமதி. மொனிடா என் பண்டார
5. திருமதி. ஹப்சா பீ ரஸ்ஸாக்
6. திருமதி. இமல்கா இத்தமல்கொட
7. செல்வி. எம். சுரனி டீ பெர்னாந்து
8. திருமதி. ஆர்.ஏ. நதீஷானி மனோதிகா
9. எச்.எஸ்.யூ.பி. ஜயவர்தன
10. திருமதி. எப். ஷிரோமி அபேகோன்
11 திருமதி. டீ.எம். நிலன்தி பீ தன்தனீ
12. கே. ரசிக்க எஸ் பண்டார
13. செல்வி. டப்ளியு. ஜீ. எரங்கா அமரசீ
14. திருமதி. திலின்கா மென்மென்தாரச்சி
15. திருமதி. களனி ஹெட்டிஆரச்சி
16 திருமதி. எம். லக்மாலி ஹேவகே
17. திருமதி எல். வத்சலா மல்லவராச்சி

சபையின் தொழில்நுட்ப பதவியணியினர்

திருமதி. அனுஷா ஐ மொஹொட்டி
FCA, FCMA (UK), CGMA, BBA (Hons,), MBA (Leicester)
பணிப்பாளர் நாயகம் (பதில்)

திருமதி. ஆஷா அஹமத்
FCA
பிரதிப் பணிப்பாளர் நாயகம்

திருமதி. மொனிடா என். பண்டார
FCA, ACA (E&W), BB Mgt (Acc) Sp
பணிப்பாளர், தொழில்நுட்பம்

செல்வி. ஹப்சா பானு ரசாக்
FCA, ACMA (UK), CGMA, MBA (Sri.J)
பணிப்பாளர், தொழில்நுட்பம்

செல்வி. டபிள்யு ஜி. எரங்க அமரசி
FCA, B.Sc (Acc) Sp (Hons.), MBS(Col)
பணிப்பாளர், தொழில்நுட்பம்

செல்வி. மஹேஷா லக்மாலி ஹேவகே
FCA, ACMA(UK), CGMA, MBA (Sri.J)
பணிப்பாளர் தொழில்நுட்பம்

திருமதி. இமல்கா இத்தமல்கொட
ACA, B.Sc (Fin) Sp
பணிப்பாளர், தொழில்நுட்பம்

திருமதி. திலினிகா மனமேன்திராரச்சி
FCA, B.Sc (Acc) Sp (Hons.)
உதவி பணிப்பாளர் தொழில்நுட்பம்

திருமதி. களனி ஹெட்டியாரச்சி
FCA, B.Sc (Acc) Sp (Hons.)
உதவி பணிப்பாளர், தொழில்நுட்பம்

திருமதி. டி எம் நிலன்தி பி. தன்தெனி
FCA, BBA (Acc) Sp (Hons.), AIB(SL)
உதவி பணிப்பாளர், தொழில்நுட்பம்

திருமதி. லலனி வத்சலா மல்லவாரச்சி
FCA, B.Sc (Acc) Sp (Hons.)
உதவி பணிப்பாளர், தொழில்நுட்பம்

திருமதி. ரந்திமா டி சில்வா
FCA, B.Sc (Acc) Sp (Hons.)
உதவி பணிப்பாளர், தொழில்நுட்பம் (01/10/2019 வரை)

திருமதி. கே. ஹிஷாரி எம். சில்வா
FCA, BBA, (Acc) Sp (Hons.) MBA Sri J.
உதவி பணிப்பாளர், தொழில்நுட்பம் (25/09/2019 வரை)

செயற்பாடுகளின் மீளாய்வு 2019

1 முன்னுரை

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபையானது (SLAASMB) 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதாகும். சட்டத்தில் முன்வைக்கப்பட்டிருக்கும் வரையறைகள் மற்றும் கட்டளை விதிகளின்படி சில நிறுவனங்கள் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொழில் முயற்சிகளாக (SBE) இனங்காணப்பட்டுள்ளன. (SBE - இன் விளக்கத்திற்கு 64 பக்கத்தை பார்க்கவும்). நிதிக் கூற்றுகளை தயாரிக்கும்போது மற்றும் அவற்றை விளக்கும்போதும் இந்த SBE கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க அமைய வேண்டும், மற்றும் இந்த SBE களின் கணக்காய்வுகளை மேற்கொள்ளும்போது அவற்றின் கணக்காய்வாளர்கள் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்கவும் வேண்டும். இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்களுடனான இணக்கப்பாட்டினை கண்காணிக்க முடிகின்ற வகையில், இச் சட்டத்தின்படி SBE கள் தமது கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட வருடாந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபைக்குச் (SLAASMB) சமர்ப்பிக்க வேண்டும். பெறப்பட்ட நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல், குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் கணக்காய்வுகளை மேற்பார்வை செய்தல், குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களும் அவற்றின் கணக்காய்வாளர்களும் நியமங்களுக்கு அமைவாக செயற்பட்டுள்ளனரா என்பதை ஆராய்ந்து அவ்வாறு செயற்படாத சந்தர்ப்பங்களில் அவற்றிற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் ஆகிய துறைகளில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்வதன் மூலம், குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொழில் முயற்சிகளின் கணக்காய்வுகளை கண்காணிப்பதன் மூலம், மற்றும் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களும் அவற்றின் கணக்காய்வாளர்களும் நியமங்களுக்கு அமைவாக செயற்பட்டுள்ளனரா என்பதை ஆராய்ந்து அவ்வாறு செயற்படாத சந்தர்ப்பங்களில் அவற்றிற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் SLAASMB தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இச் சட்டத்தின் கீழ், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்கள் பிரகடனப்படுத்தப்படுகின்றன அல்லது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பரிந்துரைகள் செய்வதற்காக மற்றும் நியமங்களை ஏற்றுக்கொள்வதில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்கு உதவி செய்வதற்காக இச் சட்டத்தின் கீழ் கணக்கீட்டு நியமக் குழுவொன்றும் கணக்காய்வு நியமக் குழுவொன்றும் நிறுவப்பட்டுள்ளது. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் சர்வதேச கணக்கீட்டு நியம சபையினால் (IASB) உருவாக்கப்பட்ட சர்வதேச கணக்கீட்டு நியமங்கள் (IAS) மற்றும் சர்வதேச நிதியறிக்கையிடல் நியமங்கள் (IFRS) என்பவற்றின் அடிப்படையில் அமைந்த கணக்கீட்டு நியமங்களையே ஏற்றுக்கொள்கின்றன. அதேபோன்று, ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு நியமங்கள், சர்வதேச கணக்காய்வு மற்றும் உறுதிப்படுத்தல் நியம சபையினால் (IAASB) உருவாக்கப்பட்ட சர்வதேச கணக்காய்வு நியமங்களை அடிப்படையாகக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. தற்பொழுது நிறுவனம் மேற்குறித்த சர்வதேச நியமங்களுடன் ஒருங்கமைந்த சுமார் 38 கணக்காய்வு நியமங்களையும் 42 கணக்கீட்டு நியமங்களையும் ஏற்றுக்கொண்டுள்ளதுடன், இவை குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களினதும் அவற்றின் கணக்காய்வாளர்களினதும் இணக்கப்பாட்டினைக் கொண்டிருத்தல் வேண்டும். குறித்த வருடத்தினுள் தனது சட்டரீதியான செயற்பாடுகளை நிறைவேற்றும் வகையில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான சுருக்கமான விளக்கம் கீழ் குறிப்பிடப்படுகின்றது.

2 நிதிக்கூற்று மீளாய்வு

2.1 மீளாய்வின் போது பின்பற்றப்படும் வழிமுறைகள்

குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் (SBE) இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கப்பாட்டினை உறுதி செய்யும் வகையில் நிதிக்கூற்றுக்களின் மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இணக்கப்பாடு காணப்படாத சந்தர்ப்பத்தில் இணக்கப்பாடின்மைக்கான காரணத்தை அடிப்படையாக வைத்து பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அங்கீகாரம் மற்றும் அளவீடு தொடர்பான விடயங்களுடனும் குறிப்பிடத்தக்க வெளிப்படுத்தல் மற்றும் முன்வைத்தலுடன் தொடர்பான விடயங்களுடனும் தொடர்பான இணக்கப்பாடின்மை தொடர்பில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை கூடுதல் கவனம் செலுத்துகின்றது. நியமங்களுடனான இணக்கப்பாடின்மைக்கான குறிப்பிடத்தக்க காரணங்கள் அவதானிக்கப்படாதவிடத்து, அவ்வாறான நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கப்பாடுடையவை என கருதப்படுகின்றன. நிதிக்கூற்றுக்களில் முக்கியம் எனக் கருதப்படும் எனினும் சட்ட நிபந்தனைகள் பயன்படுத்தும் அளவிற்கு முக்கியமற்ற விடயங்கள் என காணப்படும் சந்தர்ப்பங்களில், அவ்வாறான நிதிக்கூற்றுக்கள் அவதானிப்புகளுடன் இணக்கப்பாடுடையவை எனக் கருதப்படுவதுடன், இவ்வதானிப்புகள், சம்பந்தப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களுக்கு உதவிக் கடிதம் மூலமாக அறிவிக்கப்படும். நியமங்களிலிருந்து விலகல் காரணமாக நிதி நிலைமைகளிலும் நிதித் தொழிற்பாட்டிலும் கணிசமான மாற்றத்தினை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தில், அடுத்து வெளியிடப்படுகின்ற நிதிக்கூற்றில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்காக சம்பந்தப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களிடமிருந்து அதற்கான மாற்று நடவடிக்கைகள் கோரப்படுகின்றன. விலகல்கள் சட்ட நடவடிக்கைகளை மீறப்பட்டும், இந்த மீறல்கள் கடுமையானதாக கருப்படாத சந்தர்ப்பத்தில்,

செயற்பாடுகளின் மீளாய்வு 2019

சபையினால் வழிகாட்டலொன்று வழங்கப்படும். எனினும், இவ்வாறான விலகல்கள் காரணமாக நிதிக்கூற்றுகள் தவறாகும் பட்சத்தில், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீளாய்வின் முக்கிய விடயங்கள்

2019 டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறு, 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் கட்டளை விதிகளுக்கு இணங்கும் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் என அழைக்கப்படும் 1,608 நிறுவனங்களை சட்டத்தின் கீழ் அவதானிக்கப்படல் வேண்டுமென SLAASMB இனங்கண்டுள்ளது. குறித்த வருடத்தினுள், 1,521 குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் 1,635 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்திருந்ததுடன், அவற்றில் சில நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடங்களுக்குரியவையாக இருந்தன.

குறித்த வருடத்தினுள், ஏனைய கணக்காய்வுக் கட்டுப்பாட்டாளர்களினால் ஏற்றுக்கொள்ளப்படும் 2016 இல் உலகளாவிய நடைமுறைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட கணக்காய்வு கண்காணிப்பிற்கான அணுகுமுறையை SLAASMB தொடர்ந்தும் பயன்படுத்தி வருகிறது.

கணக்காய்வின் அபாயம் மிகுந்த பிரிவுகளை இனங்காணுவதைக் கொண்டு ஆரம்பமாகும் குறித்த அணுகுமுறையானது, அபாயம் மிகுந்த பிரிவுகள் தொடர்பில் ஆழ்ந்த ஆய்வுகளை நடாத்தி வருகின்றது, இதன் விளைவாக கணக்காய்வுகளின் போது கணக்காய்வு நியமங்களில் ஏற்பட்டிருக்கும் விலகல்களை இனங்காண முடிந்துள்ளது. மேற்குறித்த அணுகுமுறையின் சுபாவத்தின் காரணமாகவும் கண்காணிப்பின் கண்டுபிடிப்புக்கள் தொடர்பாக நிறுவனங்களுக்கு விவரமாக அறிக்கையிடலின் காரணமாகவும், 2016 இன் அணுகுமுறைக்கு முன்னைய அணுகுமுறைகளுடன் ஒப்பிடும் போது வழமையான கண்காணிப்பின் முடிவுக்கு கணிசமான நேரம் எடுத்துக்கொள்ளப்படுகிறது. அனுமானத்தின் அடிப்படையில் மீளாய்வு செயற்பாடுகளில் கலந்துகொண்டு செயற்படும் மொத்த பதவியணியினரின் எண்ணிக்கையானது 2013 இல் இருந்து நிலையாகவே காணப்படுகிறது, மெற் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அணுகுமுறையானது தரமான கணக்காய்வு சூழலை ஏற்படுத்தும் நோக்கில் கணக்காய்வை மேற்கொள்ளும் போது அதிக நேரம் எடுப்பதால் பதவியணியினருக்கு நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்ய கிடைக்கும் நேரம் வரையருக்கப்பட்டதாக காணப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமம் SLFRS 15, ஒப்பந்தங்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானத்துடன் வாடிக்கையாளர் மற்றும் SLFRS 9 – எனும் நிதிக் கருவிகளை பயன்படுத்துவதன் பொருத்தப்பாட்டினை மீளாய்வு செய்வதற்காக தேவைப்படும் கூடுதலான நேரத்தினாலும் இவ்விரண்டு நியமங்களும் அமுல்படுத்தப்பட்டு இவ் வருடமே முதல் வருடம் என்பதாலும் இது மேலும் மோசமடைகிறது. தரமான கணக்காய்வானது நிதிக்கூற்றுக்களில் தவறான கூற்றுகளின் அபாயத்தை குறைப்பதால், மற்ற நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு சுழற்சியான அடிப்படையில் முடிக்கப்படும் வேளையில் வருடாந்த அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும் அதிக ஆபத்தான பகுதிகளின் மீது நிதிக்கூற்று மீளாய்வுகளை தெரிவு செய்தலில் கவனம் செலுத்தியது.

பிரதிப் பணிப்பாளர் நாயக வெற்றிடமொன்றை நிறப்புவதற்கான உள் பதவி உயர்வின் விளைவாக, தொழிநுட்ப பணிப்பாளருக்குறிய பதவியொன்று ஆண்டு முழுவதும் வெற்றிடமாகவே காணப்பட்டது. இது, ஏப்ரில் 24, 2019 தொடக்கம் ஓய்வு பெற்றதன் விளைவாக பணிப்பாளர் நாயகப் பதவி வெற்றிடமாக இருப்பதோடு சேர்ந்து ஆகஸ்ட் - செப்டெம்பர், 2019 இல் இராஜினாமாக்கள் காரணமாக இரண்டு துணை தொழிநுட்ப பணிப்பாளர் வெற்றிடங்கள் நிலவியதால், ஆண்டு இறுதியில் நிதிக்கூற்று மீளாய்வு மற்றும் கணக்காய்வு கண்காணிப்பில் செயலாற்ற சபையிடம் 11 தொழிநுட்ப பதவியணியினர் மட்டுமே இருந்தனர்.

அபாயம் மிகுந்த, பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த SBE களின் இணக்கப்பாட்டு நிலையை மேம்படுத்தும் நோக்கில் அபாயம் மிகுந்த SBE களின் நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வதில் கவனம் செலுத்துவதிலேயே SLAASMB வருடத்தை ஆரம்பித்தது. எனினும், நான்கு தொழிநுட்ப பதவிகள் வெற்றிடமாக இருப்பதன் விளைவாக, குறைந்த பட்சம் 2018 இன் மீளாய்வுகளுக்கு இணையாக வருடாந்தம் இலக்கிடப்பட்ட மீளாய்வுகளை அடைவதற்கான அவசியத்தால் இயங்கி, SLAASMB அதன் கவனத்தை சிக்கல்களுடன் கூடிய அபாயம் மிகுந்த SBE களின் மீளாய்வுகளை ஒத்திவைப்பதன் மூலம் மாற்றியது, இவை அதிக நேரம் எடுக்கக்கூடியவை மட்டுமல்லாது தனியார் பிரிவிற்குட்பட்ட SBE களை உள்ளடக்குவதில் கவனமாக இருக்கக் கூடியவையாகும். இதன் விளைவாக, சிக்கல்களுடன் கூடிய பொருளாதார ரீதியாக அதிக முக்கயத்துவம் வாய்ந்த சில பிரிவுகளின் மீளாய்வுகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தும், 3-5 வருட காலப்பகுதிக்குள் மற்ற SBE களின் நிதிக்கூற்றுக்களின் மீளாய்வுகளை நிறைவு செய்வதில் SLAASMB வெற்றிகரமாக இருந்தது.

நான்கு தொழிநுட்ப பதவிகள் வெற்றிடமாக இருந்தும், SBE களின் மாற்றப்பட்ட தேர்ந்தெடுக்கும் அணுகுமுறையின் விளைவாக, இவ் வருடத்திற்காக திட்டமிடப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் 725 தொகுப்புக்களுடன் ஒப்பிடும்போது 699 SBE களுடன் தொடர்பான நிதிக்கூற்றுக்களின் 720 தொகுப்புகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. ஒப்பிடுகையில், 2018 இல் 608 SBE களுடன் தொடர்பான நிதிக்கூற்றுக்களின் 638 தொகுப்புகளை SLAASMB நிறைவு செய்திருந்தது. 40 நாடுகளில் இருந்து 110 பங்கேற்பாளர்கள் கலந்துகொண்ட கொழும்பில் நடைபெற்ற 12 ஆம் IFIAR கண்காணிப்பு செயலமர்வை தொகுத்து வழங்கும் செயற்பாடுகள் தொடர்பில் பதவியணியினர் கணிசமான நேரத்தை செலவிட்டுக் கொண்டிருந்ததால் 2018 இல் மீளாய்வுகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தது.

செயற்பாடுகளின் மீளாய்வு 2019

2.3 சபையின் செயலாற்றல் புள்ளிவிபரங்கள்

		2016	2017	2018	2019
1	**இனங்காணப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளின் எண்ணிக்கை (காலப்பகுதி இறுதியில்)**	1,485	1,559	1,579	1,608
2	**கிடைக்கப் பெற்ற நிதிக்கூற்றுக்கள்**				
	நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை (பலவருட கூற்றுகள் உட்பட)	1,536	1,643	1,566	1,635
	கு.வி. முயற்சிகளின் எண்ணிக்கை	1,412	1,479	1,456	1,521
3	**நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு**				
	மீளாய்வுகளின் எண்ணிக்கை	731	518	638	720
	கு.வி. முயற்சிகளின் எண்ணிக்கை	678	459	606	699
4	**சீராக்க செயற்பாடுகள் / மீளாய்வு கண்டுபிடிப்புக்கள்**				
	இணக்கங்கள்				
	நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை	436	324	430	450
	கு. வி. முயற்சிகளின் எண்ணிக்கை	417	306	413	440
	அவதானிப்புகளுடனான இணக்கங்கள்				
	நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை	291	185	202	270
	கு. வி. முயற்சிகளின் எண்ணிக்கை	262	150	193	256
	இணக்கமின்மைகள் (பணிகள், வழிகாட்டல்கள், மற்றும் எச்சரிக்கைகள்)				
	நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை	4	9	6	3
	கு. வி. முயற்சிகளின் எண்ணிக்கை	4	9	6	3
5	**மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூறிறுக்களின் சதவீதத்திலான கண்டுபிடிப்புகள்**				
	இணக்கங்கள்	61%	66%	68%	62.5%
	அவதானிப்புகளுடனான இணக்கங்கள்	38%	32%	31%	37%
	இணக்கமின்மைகள் (பணிகள், வழிகாட்டல்கள், மற்றும் எச்சரிக்கைகள்)	1%	2%	1%	0.5%

2.4 62.5% SBE கள் இணக்கமாக இருப்பதாகவும், 37% SBE கள் அவதானிப்புகளுடன் இணக்கமாக இருப்பதாக மற்றும் 0.5% இணக்கமில்லாமல் இருப்பதையும் 2019 ஆம் ஆண்டின் மீளாய்வு கண்டுபிடிப்புக்கள் வெளிப்படுத்தியது.

2.5 நிதி நிலைமைகள் மற்றும் நிதித் தொழிற்பாடுகளை கணிசமான அளவில் மாற்றியமைத்திருந்த இலங்கை கணக்காய்வு நியமங்களின் குறித்த தேவைகளிலிருந்து முக்கிய விலகல்கள் பட்டியல்படுத்தப்பட்ட நிறுவனங்களாகிய இரண்டு SBE களின் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டன. அதன் அடிப்படையில், SBE களின் மூலம் கட்டளைகளின் வடிவில் பெற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்கள், ரூபா 988 மில்லியன் பெறுமதியான தேறிய இலாபம் / பங்கிற்கு திருத்தங்களை விளைவித்தது. இக் கட்டளைகள் அடுத்தடுத்த வருடாந்த இறுதி நிதிக்கூற்றுகளில் இணக்கப்பாட்டிற்காக கண்காணிக்கப்படும். (நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு தொடர்பான அவதானிப்புகளுக்காக பக்கம் 17 இனையும் 2019 இல் மேற்கொள்ளப்பட்ட கட்டளைகளுக்காக பக்கம் 19 இனையும் பார்க்க).

2.6 முக்கியமானதாக கருதப்படும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் குறித்த தேவைகளுடன் ஒரு பட்டியலிடப்பட்ட நிறுவனம் இணங்கத் தவறினால், இதன் விளைவாக நிறுவனத்தின் நிதி நிலைமைகள் மற்றும் நிதித் தொழிற்பாடுகளின் மீது குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றின் பார்வை உண்மையாக மற்றும் நியாயமாக பிரதிபலிக்கத் தவறிவிடும் பட்சத்தில், எதிர்காலத்தில் குறித்த நியமங்களுக்கு இணங்குமாறு குறிப்பிடப்பட்ட SBE இற்கு ஒரு எச்சரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டது.

2.7 இனங்காணப்பட்ட ஒரு இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை, நிரூபிக்கப்பட்டும் அது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கும் அளவு முக்கியம் வாய்ந்ததாக இல்லாதவிடத்து, அவ்வாறான இணக்கமின்மைகள் உதவிக் கடிதம் மூலம் அவதானிப்புகளாக அறிவிக்கப்டுகின்றன. வருடத்தினுள், நிதி அறிக்கையிடல் முறைமையினை மேம்படுத்துவதற்காக SBE க்களை ஊக்குவிக்கும் நோக்கில் 270 அவதானிப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

செயற்பாடுகளின் மீளாய்வு 2019

3. கணக்காய்வுப் பரிசோதனை

3.1 வருடத்தினுள் தொழில்துறையில் ஈடுபட்டிருந்த 7 பட்டயக் கணக்காளர் நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த 45 கணக்காய்வுகள் பரீட்சிக்கப்பட்டன, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அவ்வாண்டில் 10 நிறுவனங்களின் மூலம் 50 கணக்காய்வு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. வருடத்தினுள் உள்ளக பதவி உயர்வுகள் மற்றும் ராஜினாமாக்களின் காரணமாக பரிசோதனையில் ஈடுபட்டிருந்த தொழிநுட்ப பதவியணியினர் தொடர்பில் மூன்று பதவி வெற்றிடங்கள் நிலவியதன் நேரடி விளைவாக, பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான தொழிநுட்ப பதவியணியினர் குறைவான எண்ணிக்கையில் இருந்ததனால் 2018 ஆம் ஆண்டை விட வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகள் குறைவாக காணப்பட்டது.

3.2 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 45 கணக்காய்வுப் பரிசோதனைகளில் 33 வழமையான கணக்காய்வு பரிசோதனைகள் மற்றும் 12 கருப்பொருள் சார்ந்த பரிசோதனைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. 2018 மார்ச் 31 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் முடிவடையும் காலப்பகுதிகளுக்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுகளுக்காக நடைமுறைக்கு வந்த இலங்கை கணக்காய்வு நியமங்கள் (SLAS) 701 இன் பின்பற்றுதலை மீளாய்வு செய்வதற்கான ஒரு செயல்திறன் நடவடிக்கையாக வருடத்தினுள், முக்கிய கணக்காய்வு விடயங்களில் (KAM) பிரத்தியேக கவனம் செலுத்தி பரிசோதனைகள் மேற்கொள்ள SLAASMB மேலும் ஒரு நடவடிக்கை எடுத்துள்ளது. அதன் அடிப்படையில், வழமையான பரிசோதனைகளில் உள்ளடங்கியிருக்கும் 10 பரிசோதனைகள் முக்கிய கணக்காய்வு விடயங்களில் (KAM) கவனம் செலுத்தும் பரிசோதனைகளால் ஆனது. ஒப்பிடுகையில், 2018 இல் மேற்கோள்ளப்பட்ட 50 கணக்காய்வு பரிசோனைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த 19 பரிசோதனைகள் கருப்பொருள் சார்ந்த பரிசோதனைகளாகும்.

3.3 எதிர்காலத்தில், குறிப்பிடப்பட்ட நிறுவனங்களை விடாமுயற்சியுடன் மற்றும் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுகளை மேற்கொள்ளும் போது பொருத்தமான கணக்காய்வு நியமங்களின் தேவைகளுக்கு இணக்கமாக செயற்பட வேண்டிய தேவையுடன், வருடத்தினுள், இரண்டு கணக்காய்வாளர்களுக்கு இரண்டு எச்சரிக்கை கடிதங்கள் அனுப்பப்பட்டன.

3.4 வருடத்தினுள், பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோவைகள் அபாயத்தினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையினூடாகத் தெரிவு செய்யப்பட்டன. எனினும், பரிசோதனைகளுக்கு கணக்காய்வுகளை தெரிவு செய்வதற்காக மிகப் பொருத்தமான அபாய அடிப்படையை தீர்மானிக்க 2020 இல் ஒரு செயல்முறையை வடிவமைக்க திட்டங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன.

3.5 2018 இல் 9 நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட 12 கணக்காய்வுகளுடன் ஒப்பிடுகையில் வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட வழமையான பரிசோதனைகள் 6 நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட 15 குறைபாடுகளை அவதானிப்பதில் முடிவடைந்தன. முக்கிய கவனிப்புகள் குறித்த கணக்காய்வு நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளப்பட்டன. (கணக்காய்வு பரிசோதனைகள் பற்றிய விவரங்களுக்காக பக்கம் 20 இனை பார்க்கவும்)

3.6 அபாயத்தினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையிலிருந்து வழமையான கணக்காய்வு பரிசோதனைகளுக்கு அப்பால், வருடத்தினுள் கருப்பொருள் சார்ந்த பரிசோதனைகளையும் SLAASMB தொடர்கிறது. எனினும், வியாபார பரிவர்த்தனைகள் மற்றும் வியாபார வலைபின்னல்களில் இருக்கும் குழப்பங்களினால் நிர்வகிக்கப்படும் கருப்பொருள் தொடர்பான பிரிவுகளில் கவனம் செலுத்துவதில் வருடங்களின் கருப்பொருள் மாற்றப்பட்டது. இதன் அடிப்படையில், வருடத்தினுள் 4 கணக்காய்வு நிறுவனங்களை குறிக்கும் 12 கருப்பொருள் சார்ந்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 2018 இல் ஆட்சிக் குற்றச்சாட்டுனான தொடர்பாடல்கள் எனும் கருப்பொருளில் 5 நிறுவனங்களினால் 19 கணக்காய்வு ஈடுபாடுகளின் மீது மேற்கொள்ளப்பட்ட கருப்பொருள் சார்ந்த பரிசோதனைகளின் அறிக்கைகள் 2020 இன் ஆரம்பத்தில் வெளியாக இருக்கின்றது.

4. புலனாய்வு

அடம் கெப்பிட்டல் PLC

31 மார்ச் 2014 மற்றும் 2015 ஆகிய திகதிகளுடன் முடிவடைந்த ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முறையான நிதியேடுகள் மற்றும் சம்பந்தப்பட்ட அறிக்கைகளை நிறுவனம் பேணிவரத் தவறியமை குறித்து வரையறுக்கப்பட்ட அடம் கெப்பிட்டல் நிறுவனத்தின் முன்னாள் கணக்காய்வாளர் ஒருவர் மறுப்புக் கருத்துத் தெரிவித்துள்ளதன் விளைவாக, 31 மார்ச் 2016 உடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதின்கூற்றுகளின் கணக்காய்வின் மீது தரமற்ற ஒரு கருத்தை தற்போதைய கணக்காய்வாளர் வெளியிட்டிருந்தார். குறித்த தற்போதைய கணக்காய்வாளரினால் கணக்காய்வு நியமங்களுடன் இணக்கமின்மை அவதானிக்கப்பட்டதன் பின்னர், குறித்த நிதிக்கூற்றுகளை மீள் கணக்காய்வு செய்யுமாறு சபையின் மூலம் நிறுவனத்திடம் வேண்டப்பட்டது. மீள் கணக்காய்விற்கான மேலதிக செலவினை நிறுவனம் ஏற்க மறுத்ததன் காரணமாக, அடுத்தடுத்த கணக்காய்வுகளிலும், கணக்காய்வு நியமங்களை மீறிய கணக்காய்வாளருடன் தொடர்ந்து காரணங்களை விசாரிப்பதற்காக நிறுவனத்தின் தலைவர் வரவழைக்கப்பட்டுள்ளார்.

செயற்பாடுகளின் மீளாய்வு 2019

5. பொது வியாபார முயற்சிகள் (COPE) தொடர்பான குழுவின் பரிந்துரைகள் மீதான செயற்பாடு

2014 மற்றும் 2015 ஆகிய வருடங்களில் அனைத்து குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களினதும் (SBEs) நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வதன் மூலம் COPE இற்கு வழங்கப்பட்ட காரியங்களைத் தொடர்ந்து, இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை இணக்கமின்மைகளின் மீதான அவதானிப்புக்களின் தரத்தினை மேம்படுத்தும் ஒரு சிறந்த முறையாக நிதிக்கூற்றுக்களின் மீளாய்வுக்காக அபாயத்தினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைக்கு மாறியது. இதனடிப்படையில், இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை அனைத்து குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களையும் 3-5 வருடங்களில் மீளாய்வு செய்வதற்கு உத்தேசித்துள்ளதுடன், இது முறைப்படுத்தப்பட்ட சகல நிறுவனங்களையும் வருடாந்தம் மீளாய்வு செய்தல், உயர் அபாயத்தினையுடைய தனியார் நிறுவனங்களை 3 வருடங்களுக்கு ஒரு முறை மீளாய்வு செய்தல் மற்றும் குறைந்த அபாயத்தினையுடைய தனியார் நிறுவனங்களை 5 வருடங்களினுள் மீளாய்வு செய்தல் என அமைந்திருக்கும். கணக்கீடு மற்றும் கணக்காய்வு 2015 (ROSC) எனும் தரம் மற்றும் குறியீடுகளின் பயன்பாடு தொடர்பான உலக வங்கி அறிக்கையில் உயர் அபாயத்தினையுடைய தனியார் நிறுவனங்கள் தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆலோசகர்களாலும் இது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும், 2016 ஆம் வருடத்தில் பணிக்குழுவின் திறன் விருத்தி செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த சர்வதேச ஆலோசகர்களினது உலகலாவிய ரீதியில் பயன்படுத்தப்படும் முறையாகவும் இது இனங்காணப்பட்டுள்ளது.

2019 இன் பரிசோதனை முடிவுகள், குறிப்பிட்ட நிதிக்கூற்று மீளாய்வின் அபாயத்தினை அடிப்படையாகக் கொண்ட தெரிவு முறையானது நிதிக்கூற்றுகளினதும் கணக்காய்வினதும் ஒன்றிணைந்த ஆய்வு முறைமையினை வலுப்படுத்தியுள்ளதாக குறிப்பிடுகின்றன. இவ்வாறான நிதிக்கூற்றுக்களின் மீளாய்வினை நடாத்துவதானது, கணக்காய்வில் இணக்கமின்மைகளை இனங்காண்பதற்கு உறுதுணையாக அமைந்துள்ள நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வில் பிரத்தியேகமான விடயங்களை ஆய்வு செய்தல் மீதான கவனத்தினைத் தூண்டியுள்ளது.

6. நியமங்களை தயாரிப்பதற்காக ஒத்துழைப்பு

இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு கணக்காய்வு மதிப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்கு பரிந்துரைகள் வழங்கவும் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களை பின்பற்றவும் நிறுவப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட இரண்டு சபைகளாலும் செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகளில் 2019 இற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் தொகுதியின் சிக்கல், இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் திருத்தங்களில் சில சிக்கல், 2020 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்படவிருந்த இலங்கை கணக்கீட்டு நியமங்களின் திருத்தங்கள் மற்றும் வர்த்தமானிப்படுத்தலில் உள்ள சிக்கல், அப் பிரகடனங்களின் தமிழ் மற்றும் சிங்கள மொழிபெயர்ப்பு உட்பட, வெளிப்பாட்டு வரைவுகள் மற்றும் கலந்துரையாடல் காகிதங்களுக்கு பதிலளித்தல், IFRS குறித்த தெளிவான ஆராய்ச்சி மற்றும் சரவதேச கணக்கீட்டு நியமங்கள் சபை மற்றும் சர்வதேச கணக்காய்வு நியமங்கள் சபை வெளியிட்ட திருத்தங்கள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்தலை உள்ளடக்கியிருந்தது. நிதி மற்றும் பொது ஊடகத்துறை அமைச்சுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒழுங்குமுறைக்கிணங்க, இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை அமுல்படுத்தும் வகையிலும், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்கு வருடாந்தம் ரூபா 4 மில்லியனை வழங்குவதனை தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வந்தது. (கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்களின் மீட்டல் தொடர்பாக குறித்த வருடத்தினுள் (2019) நடத்தப்பட்ட முக்கிய செயற்பாடுகளுக்காக 45 ஆம் பக்கத்தை பார்க்க).

7. சர்வதேச தொடர்புகள்

7.1 சர்வதேச அமைப்புகளுடனான உறுப்புரிமையானது, நிதி அறிக்கையிடல், கணக்காய்வு மற்றும் நியமங்களுடனான இணக்கப்பாட்டினை கண்காணித்தல் தொடர்பான உலகளாவிய ரீதியிலான அபிவிருத்தியுடன் இணைந்து செயலாற்றும் வாய்ப்பை இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபைக்கு வழங்கியுள்ளது. இது ஏனைய கட்டுப்பாட்டாளர்களிடமிருந்து தகவல்களையும் உதவிகளையும் பெறவும் இணைந்த செயற்பாடுகளாக பல கட்டுப்பாட்டாளர்களுக்கு நன்மை விளைவிக்கும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தவும் வழி அமைத்துள்ளது. குறித்த ஆண்டில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை தன் உறுப்புரிமையை பின்வரும் சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்ந்துள்ளது.

அ) சுயாதீன கணக்காய்வு கட்டுப்பாட்டாளர்களின் சர்வதேச அமைப்பு (IFIAR) – 2007 இல் நடைபெற்ற முதல் சந்திப்பிலிருந்து IFIAR இன் உறுப்புரிமையைப் பெற்றுள்ளது.

ஆ) சர்வதேச கணக்காய்வு மற்றும் உத்தரவாத நியமங்கள் சபையின் ஆலோசனைக் குழு (IAASB) – 2007 முதல் உறுப்பினராக உள்ளது.

இ) கணக்காளர்களுக்கான சர்வதேச நியமங்களுக்கான பொறிமுறைகள் சபையின் ஆணைக்குழு (IESBA) – 2009 இல் உறுப்பினராக இணைத்துக் கொள்ளப்பட்டது..

செயற்பாடுகளின் மீளாய்வு 2019

7.2 இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் பணிக்குழுவினர் கணக்கீடு மற்றும் அறிக்கையிடலின் சர்வதேச நியமங்கள் தொடர்பான அரசாங்கங்களுக்கிடையிலான நிபுணத்துவக் குழுக்களின் (ISAR) அமர்வுகளில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தினர்.

7.3 குறித்த ஆண்டில், 9 பணிக்குழுவினர் 7 சர்வதேச சந்திப்புகள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளில் கலந்து கொண்டுள்ளனர். IFIAR இன் முதல் சந்திப்பல்லாமல் இரண்டு ஆலோசனைக் குழுக்களின் சந்திப்புகள், IFIAR நடாத்திய அறிவாற்றலை பரிமாறக் கூடிய ஆய்வு செயலமர்வுகள் மற்றும் அமுலாக்க செயலமர்வுகளில் SLAASMB இன் பணியாளர்கள் பங்கேற்றனர். இவ் அமர்வுகள் உலகளாவிய ரீதியிலுள்ள மற்றைய கணக்காளர்களுடனான கலந்துரையாடலுக்கும் வலையமைப்பொன்றை உருவாக்குவதற்கும் வழியமைத்தது.

ASEAN கணக்காய்வு கட்டுப்பாட்டாளர் குழுவின் (AARG) மேற்பார்வை செயலமர்வு மற்றும் 2019 AOSSG இன் செயலாளர் காரியாலயம் சீன கணக்கீட்டு நியமக் குழு மற்றும் ஷங்காய் தேசிய கணக்கீட்டு நிறுவனம் இணைந்து ஏற்பாடு செய்த IFRS செயலமர்வில் கலந்து கொள்ள SLAASMB க்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

கணக்கீட்டுக் கொள்கை சம்பந்தமான கூட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் கலந்துரையாடல்களில் பங்குபற்றியமையால் SLAASMB ஆனது தனது கணக்கீட்டுக் கொள்கைகளை சர்வதேச தரத்திற்கு திருத்தியமைக்க முடிந்தது. ஆயினும் எதிர்பாராவிதமாக ஆண்டின் இறுதி 03 மாதங்களும் வெளிநாட்டு பயணங்கள் அரசாங்கத்தினால் ரத்து செய்யப்பட்டதால் SLAASMB முதல் முறையாக PCAOB இன் அழைப்பை ஏற்று PCAOB இன் கலந்துரையாடலில் கலந்து கொள்ள முடியாமற் போனது.

8 மனித வளங்கள்

8.1 பதவியணியினர்

2019 இன் இறுதிப் பகுதியில் SLAASMB இன் பதவியணியினர் மொத்தம் 17 ஆக இருந்தனர். அவர்களில் 11 பேர் பட்டயக் கணக்காளர்களாக இருந்தனர். மொத்த தொழிநுட்ப பணிக்குழுவில் பதில் பணிப்பாளர் நாயகம், பிரதி பணிப்பாளர் நாயகம், 05 முகாமையாளர்கள் மற்றும் 04 உதவி முகாமையாளர்கள் அடங்கியிருந்தனர். தொழிநுட்ப பணிக்குழுவில் மூன்று பேர் ஒப்பந்த அடிப்படையிலும் எட்டு பேர் நிரந்தர பணியாளர்களாகவும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

2019 ஏப்ரல் முதல் பணிப்பாளர் நாயகம் ஓய்வு பெற்றதனால் அப் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் மன்றத்தினால் அனுபவமுள்ள, தொழில்நுட்ப அறிவுடைய, போட்டி மனப்பான்மையுள்ள பட்டயக் கணக்காளர் ஒருவரை அமைச்சு சுற்றறிக்கைகளுக்கு கட்டுப்பட்ட சம்பள அளவு கோரும் வகையில் நியமிக்க முடியாமையினால் தொழிநுட்ப முகாமையாளர் பதவி வருடம் முழுதும் வெற்றிடமாகக் காணப்பட்டது. மேலும் அவ் வருடத்தில் இரண்டு உதவி தொழிநுட்ப முகாமையாளர்கள் மற்றும் உதவி முகாமையாளர் (நிதி மற்றும் முகாமைத்துவம்) பதவி விலகியதால் ஆண்டு இறுதியில் மொத்தம் 05 பதவிகள் வெற்றிடங்களாகக் காணப்பட்டன.

மீளாய்வு செயற்பாடுகளில் போட்டித் திறனுள்ள பதவியனியினர் குறைபாட்டினால் SLAASMB திட்டமிட்ட எண்ணிக்கையில் அவ் வருடத்தில் நிதி அறிக்கை மீளாய்வு மற்றும் நடாத்த முடியவில்லை.

எவ்வாறாயினும் 08 பணியணியினரை வருடம் முழுவதும் செயலமர்வுகள் மற்றும் பயிற்சித் திட்டங்களில் கலந்து கொள்ளச் செய்து நிதி அறிக்கையிடல், கணக்காய்வு மற்றும் விதி முறைகள் தொடர்பான சர்வதேச அறிவினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் தொழிநுட்ப திறன்களை வளர்க்க முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டது.

8.2 வெளிக்கள மீளாய்வாளர்களின் குழு

COPE இனது பரிந்துறைகளுக்கிணங்க, SLAASMB மீளாய்வு செய்யும் நிதிக்கூற்றுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் முயற்சியில் நிதிக்கூற்றுகளை மீளாய்வு செய்வதற்காக வெளிக்கள மீளாய்வாளர்களின் சேவையினைத் தொடர்ந்தும் பெற்றுக்கொண்டது. குறித்த ஆண்டில் 05 மீளாய்வாளர்கள் வெளிக்கள மீளாய்வாளர் குழுவில் இணைத்துக் கொள்ளப்பட்டதுடன் வெளிக்கள மீளாய்வாளர்களினால் முன்னெடுக்கப்பட்ட மீளாய்வுகளின் தரத்தின் அடிப்படையில் ஏற்கனவே சேவையில் ஈடுபட்டிருந்த மீளாய்வாளர் ஒருவர் சேவை நிறுத்தம் செய்யப்பட்டார். ஆகவே வருட இறுதியில் SLAASMB பணியணியினர் மொத்தம் 17 பேராக இருந்தது.

குறித்த காலப்பகுதிக்குள் வெளிக்கள மீளாய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பணியணியினர் மீளாய்வாளர்களின் சேவையின் தர மீளாய்வுகளானது, மீளாய்வுகளின் தர விரிவாக்கத்தை எளிதாக்கியது. இது மீளாய்வாளர்களிடம் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்கள் தொடர்பான பரப்புகளை கண்டறியவும், தொடர்பாடவும் உதவும்.

குறித்த ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட நிதிக்கூற்று மீளாய்வுகளில் 99 நிதிக்கூற்றுக் கோவைகளின் ஆரம்பகட்ட மீளாய்வுகள் வெளிக்கள மீளாய்வினரால் மேற்கொள்ளப்பட்டது. குறித்த ஆண்டில் வெளிக்கள மீளாய்வாளர்களினால் 142 கோவைகள் ஆரம்ப கட்ட மீளாய்வுக்குட்படுத்தப்பட்டதுடன் அவர்களின் சேவைக்காக கொடுப்பனவாக ரூபா 2.04 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. வெளிக்கள மீளாய்வாளர்களினால் பூரணப்படுத்தப்பட்ட, மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், திருத்தங்களுக்கான ஒப்பந்தங்களைக் கோரல் மற்றும் அவதானிப்புக்களுக்கான கடிதங்களை வழங்குதல், சட்டத்தின் கீழ் பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் அடங்கிய மீளாய்வு SLAASMBஇன் பணியணியினரால்

செயற்பாடுகளின் மீளாய்வு 2019

மேற்கொள்ளப்படுகிறது. மேலும் குறித்த ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட நிதிக்கூற்று மீளாய்வு மற்றும் 621 நிதிக்கூற்றுகளின் ஆரம்ப கட்ட மீளாய்வு என்பன சபையின் மீளாய்வுக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.

9 நல்லாளுகை

9.1 சட்டத்தின் அடிப்படையில், சபை 03 நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களையும் முன்னால் நிதி திட்டமிடல் அமைச்சினால் இனங்காணப்பட்ட நிறுவனங்களிலிருந்து முன்மொழியப்பட்டு தெரிவு செய்யப்பட்ட 10 உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. 03 நிறைவேற்றுக் குழு அதிகாரிகளும் முறையே கம்பனிப் பதிவாளர் நாயகம், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் மற்றும் பிணையங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஆவர்.

முன்மொழியப்பட்ட உறுப்பினர்களாக இலங்கை மத்திய வங்கி, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் (3 உறுப்பினர்கள்), ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவக் கணக்காளர் பட்டைய நிறுவனத்தின் இலங்கைப் பிரிவு, இலங்கை வழக்கறிஞர் சங்கம், இலங்கை வர்த்தகர் சங்கம், இலங்கை வர்த்தக வாணிப சங்கங்களின் சம்மேளனம், இலங்கை வங்கிகளின் சங்கம் மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஆகியவற்றினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களாகக் காணப்பட்டனர், ஒரு அங்கத்தவரின் பதவிக்காலம் 4 வருடங்களாகும்.

9.2 இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுனர் திரு. ஆர். ஏ.ஏ ஜயலத் அவர்கள் 2019 இல் தொடர்ந்தும் சபையின் தலைவராக பதவி வகித்தார்.) இலங்கை வர்த்தக வாணிக சங்கங்களின் சம்மேளனத்தின முன்மொழிவுகள் கிடைக்கப்பெறாததால் சபையின் ஒரு பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது.

9.3 சட்டரீதியாக சபையின் அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட திரு ஏ. கால்லகே திரு ஏ.டீ.வாஸ் குணசேகர, திரு.என். ஜயசிங்க, திரு. எச். பிரேமரத்ன, திரு. ஏ.பீரிஸ் மற்றும் திரு.என்.சிவப்பிரகாசம் ஆகியோர் சில குறித்த வியாபார நிறுவனங்களில் பணிப்பாளர்களாக அல்லது சிரேஷ்ட அதிகாரிகளாக கடமை புரிந்திருந்தனர். அதேபோன்று, சபையின் மேலும் சில உறுப்பினர்களான திரு ஏ.ஹேரத், திரு. எம். ஜயசிங்க, திரு. ஜே.பெரேரா மற்றும் திரு. எல்.விக்ரமசிங்க ஆகியோர் சில குறித்த வியாபார நிறுவனங்களில் கணக்காய்வினை மேற்கொள்கின்ற தொழிலசார் கணக்காளர்களின் நிறுவனங்களின் பங்காளர்களாக செயற்பட்டுள்ளனர். மேலும், சபையின் கண்காணிப்பாளர்களான திரு. கே.சத்யகுமார், திரு. எஸ். ராஜபக்ஷ, திரு.எம்.ஆர்.வீ.ஆர். மீமுர, மற்றும் திரு.ஜே.எஸ். ராஜகாரிய ஆகியோர் சில குறிப்பிட்ட வியாபார நிறுவனங்களின் பணிப்பாளர்களாக அல்லது சில குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களில் கணக்காய்வினை மேற்கொள்கின்ற தொழில்சார் கணக்காளர்களின் நிறுவனங்களின் பங்காளர்களாக செயற்பட்டுள்ளனர். சபையின் தனித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் குறிப்பிட்ட வியாபார நிறுவனமொன்றோ அல்லது அதன் கணக்காய்வாளரோ சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் குறித்த வியாபார நிறுவனத்துடனோ அல்லது கணக்காய்வாளருடனோ தொடர்புள்ள உறுப்பினர்களுக்கு அனுப்பப்படுவதிலிருந்து தவிர்க்கப்படுகிறது. அவ்வாறான உறுப்பினர்கள் அவ் வியாபார நிறுவனங்கள் தொடர்பான கலந்துரையாடல்களில் கலந்து கொள்வதில்லை.

9.4 சபையினால் மேற்கொள்ளப்பட்ட தொழிநுட்ப பதவி வெற்றிடங்கள் 04 நிரப்பும் முயற்சிகள் வெற்றியளிக்காததால் சபையானது பட்டயக் கணக்காளர்களின் சம்பளம் குறித்த புள்ளிவிபரக் கோவை யொன்றைத் திரட்டியது. இது மீளாய்வு பணிக்கு அனுபவமுள்ள தொழிநுட்ப ரீதியில் போட்டித்தன்மையுள்ள பணியணியினரை ஈர்த்து வேலையில் தக்க வைத்துக் கொள்வதற்காகும். அரசாங்க வழிகாட்டுதல்களைப் பின்பற்றி ரூபா 200,000 செலவில் குறித்த கோவை KPMG Executive Search (Pvt) Ltd இடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. இங்கு சபையின் உறுப்பினர்கள்/ கண்காணிப்பாளர்களாக திரு டப். டப். ஜே. சீ பெரேரா மற்றும் திரு. டீ. ஜே. எஸ். ராஜகாரியர் பங்காளர்களாக உள்ளனர்.

9.5 குறித்த ஆண்டில் சபையின் 10 கூட்டங்கள் நடைபெற்றன. வருடத்தினுள் நடைபெற்ற வாதப் பிரதிவாதங்கள் குறிப்பிட்ட வியாபார நிறுவனங்கள் மற்றும் கணக்காய்வாளர்கள் சம்பந்தப்பட்ட குறிப்பிடத்தக்க தொழில்நுட்பம் சார்ந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அவசியமான ஒட்டுமொத்த செயற்பாட்டுக் குறியீடுகள் மற்றும் நடவடிக்கைகள் சார்ந்த பணியணியினர் செயற்பாட்டினை வருடாந்த நிதிக்கூற்றுக்கள், வருடாந்த வரவு செலவுத் திட்டங்கள் மற்றும் செயற்பாட்டுத் திட்டங்களை அனுமதித்தல் ஆகியவை தொடர்பான சிக்கல்கள் தொடர்பிலும் சபை கவனம் செலுத்தியது. மேலும், தொழில்நுட்ப செயற்பாடுகளுக்கான பொருத்தமான பணியணியினரை கவர்ந்துகொள்ளும் வகையில் பணிக்குழு ஊதியத் திட்டத்தினை திருத்தியமைத்தல் தொடர்பாக பல்வேறு அணுகுமுறைகளை மீளாய்வு செய்வதிலும் சபை ஈடுபட்டது.

9.6 சபையின் அதிகார ஒப்படைத்தல் கொள்கைக்கமைவாக, தகவல் திரட்டல், நிதிக்கூற்றுகள் மற்றும் கணக்காய்வுகளின் மீளாய்வு மற்றும் விசாரணைகள் ஆகிய நியமங்களுடனான இணக்கப்பாட்டினை கண்காணித்தல் தொடர்பான வழமையான செயற்பாடுகள் இரண்டு பிரதி பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வையிலும் வழிகாட்டலிலும் இயங்கும் பணியணியினரால் மேற்கொள்ளப்பட்டன.

செயற்பாடுகளின் மீளாய்வு 2019

10. நிதிச் செயலாற்றல்

குறித்த ஆண்டில் SLAASMB பிரதான நிதி மூலமாக அரசினால் வழங்கப்பட்ட நிதி மூலமே செலவுகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் இதற்குப் பதிலீடாக, சபையின் செலவுப் பரிபாலனத்திற்கான சட்டத்தின் கீழ், நிதி அமைச்சரின் தீர்மாணத்திற்கமைய வரி அறவிடலின் பின்னரான பங்குதாரரின் பங்குப் பெறுமதி அல்லது இலாபம் ஆகியவற்றினடிப்படையில் கணக்கிடப்பட்ட ஒரு வரி குறித்த வியாபார நிறுவனங்களிடமிருந்து அறவிடப்படலாம். எனினும் இந்த முறையினை நிதி அமைச்சு விரும்பாததன் காரணமாக 2008 ஜனவரி 01ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படவிருந்த இவ்வரி அறவிடல் திட்டமானது 2008 ஒக்டோபர் 07ம் திகதி அமைச்சரினால் வாபஸ் பெறப்பட்டது.

கடந்த வருடத்தின் செலவாகிய ரூபா 90,138,101 உடன் ஒப்பிடுகையில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் வருடத்திற்கான தொழிற்பாட்டுச் செலவு ரூபா 78,511,881 ஆகவிருந்தது. ஆண்டின் பெரும்பாலான காலம் 05 முக்கிய பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டமையினால் குறைந்த ஊழியர் செலவு, புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகளுக்கான குறைந்த செலவு, வெளிநாட்டு பயிற்சி மற்றும் அபிவிருத்தி, ஆண்டின் இறுதிப் பகுதியில் நிதி தொடர்பான அரசாங்கத்தின் கடுமையான கட்டுப்பாடு மற்றும் சில சொத்துக்களின் பயன்தகு காலத்தில் ஏற்பட்ட மதிப்பிறக்கம் என்பன தொழிற்பாட்டுச் செலவு வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தன. கடந்த வருடத்தின் செலவாகிய ரூபா 44,084,317 உடன் ஒப்பிடுகையில் வருடத்திற்கான பணியணியினருக்கான செலவு ரூபா 41,487,633 ஆகவிருந்ததுடன், இது 6% வீழ்ச்சியைக் காட்டுகின்றது. இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் கடந்த ஆண்டின் 49% தொழிற்பாட்டுச் செலவுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு 53% பணியணியினருக்கான செலவாகக் காணப்பட்டது.

11. அபிவிருத்தி திட்டங்கள்

குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொழில் முயற்சிகள் அல்லது கணக்காய்வுகளின் நிதிக்கூற்றுகளின் முழுத்தள அளவை இயலச் செய்து மேம்படுத்திக் கொண்டு வருடத்தினுள், மீளாய்வு செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான ஒரு வழிமுறையாக சபையானது கணக்காய்வுகளில் பங்கேற்பதற்காக இரண்டு முக்கிய இயற்கை மூலதன செயற்பாடுகளில் கவனம் செலுத்தியது. SLAASMB ஆனது, மேலதிக பணியணியினரை புதிய அங்கீகரிக்கப்பட்ட சட்டகங்களின் கீழ் பணியில் அமர்த்த வாடகைக்கு எடுக்கப்பட்ட அலுவலகத்தின் முதல் மாடியின் உட்பகுதியை பிரிக்கும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தியது.

இவ் அலுவலக விரிவாக்கல் தேவையானது தற்போதைய பணியணியினர் கட்டமைப்பை மேம்படுத்த உதவுவதுடன் COPE இனால் அறிவுறுத்தியதன் படி SLAASMB கூடிய அளவில் கணக்காய்வாளர்களை ஒழுங்குபடுத்த வசதி அமைத்துக் கொடுத்தது. குறிப்பிடப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தும் தேவையின் காரணமாக SLAASMB ஆனது விரிவான மாடித் திட்டம் மற்றும் உள்ளகப் பகிர்வு வேலைகளுக்கான செலவுகளை இறுதிப்படுத்தியது. எவ்வாறாயினும் வருடத்தின இறுதிப் பகுதியில் கடுமையான மூலதன குறைப்பின் காரணமாக துறைசார் பெறுகைக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டவாறு தகுந்த ஒரு ஒப்பந்தக்காரர் ஒருவரிடம் உள்ளகப் பிரிவு வேலையை கையளித்தலில் மற்றும் மறு ஏலம் விடுத்தலிலும் SLAASMB இனால் வெற்றி காண முடியவில்லை.

2015 ஆம் ஆண்டில், இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை அதன் மீளாய்வுத் தொழிற்பாடுகளை செம்மைப்படுத்துவதற்கான முகாமைத்துவத் தகவல் முறையின் தேவைகளை இனங்கண்டது. இனங்காணப்பட்ட முகாமைத்துவத் தகவல் முறையின் தேவைகளுக்கான MIS சேவை வழங்குனராக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் (ICTA) தெரிவு செய்யப்பட்டதுடன், 2016-2017 இற்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தின் வரவு செலவுத் திட்டத்தினுள் அபிவிருத்திச் செலவுகளை உள்ளடக்கும் பொறுப்பும் வழங்கப்பட்டது. சேவை வழங்குனரிடம் ஒப்பந்தம் கையளிக்கப்படும் வரை இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்துடனும் திட்ட முகாமையுடனும் இணைந்து செயற்பட்டது. எனினும் 2017ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் (ICTA) தனது வரவு செலவுத் திட்டத்தினூடாக குறித்த அபிவிருத்தித் திட்டத்தினை முகாமைப்படுத்த முடியாதென அறிவித்ததன் விளைவாக, இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை தனது வரவு செலவுத் திட்டத்தினுள் நிதி முகாமை செய்ய முடிகின்ற பொழுது வேறொரு சேவை வழங்குனரினூடாக இத்திட்டத்தினை மீண்டும் ஆரம்பிக்க வேண்டியுள்ளது. தற்போது சபையானது SLAASMB இற்கான MIS இன் அபிவிருத்திக்காக தகுந்த முறைகளை திட்டமிட்டுக் கொண்டு இருக்கின்றது.

2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிதிக்கூற்றுகள் தொடர்பான மீளாய்வின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

1. தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்காக பொறுப்பேற்றல்களைப் பெற்றுக் கொள்ளல்

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) நிதிக் கூற்றுகளில் திருத்தங்களைச் செய்ய இரண்டு குறித்துரைக்கப்பட்ட முயற்சிகளிலிருந்து (SBEs) பொறுப்பேற்றல்களைப் பெற்றுக் கொண்டது. இந்த பொறுப்பேற்றல்களின் விளைவாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட தேறிய லாபம்/உரிமை ரூபா 988 மில்லியனால் சீராக்கப்பட்டது.

இணக்கப்பாட்டை பெற்றுக்கொண்ட குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளால் இணக்கப்பட்டை தெரிவிக்காத உருப்படி வகைகள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (முற்சேர்க்கை SLFRS/LKAS) பெற்றுக் கொள்ளப்பட்ட விபரங்கள் பின்வருமாறு,

- முதலீட்டுச் சொத்து என வகைப்படுத்தப்பட்ட கட்டிடங்கள் தொடர்பாக பிற்போடப்பட்ட வரி சொத்து/ பொறுப்பு என்பனவற்றை இனங்காண்பதில் ஏற்பட்ட தவறு (தொடர்பு எல்.கே.ஏ.எஸ் 12 பந்தி 51)

- நிறுவனம் உரிமையையும் இருப்பையும் (AFS) நிறுவக்கூடிய அளவுகளில் விற்பனை மற்றும் கிடைக்கக்கூடிய முதலீடுகளைப் பிரதிபலிக்கத் தவறியுள்ளது. (குறிப்பு எல்.கே.ஏ.எஸ் 32 பந்தி 11 மற்றும் நிதி அறிக்கையிடலுக்கான கருத்தியல் கட்டமைப்பு பந்தி 4.44)

- தொடர்புடைய தரப்பினருக்கு செலுத்த வேண்டிய தொகைகளை அவர்களின் தற்போதைய பொறுப்பின் அளவுகளில் பிரதிபலிப்பதில் ஏற்பட்ட தவறியமை. (குறிப்பு எல்.கே.ஏ.எஸ் 32 பந்தி 11 மற்றும் நிதி அறிக்கையிடலுக்கான கருத்தியல் கட்டமைப்பு பந்தி 4.46)

- தொடர்புடைய தரப்பினரிடமிருந்து மீளப்பெற வேண்டிய தொகைகளின் மதிப்புகளை பிரதிபலிப்பதற்கான கொடுப்பனவை இனங்காண்பதில் தவறியமை. (குறிப்பு எல்.கே.ஏ.எஸ் 39 பந்தி 58)

2. உதவி கடிதங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களிலிருந்து விலகலடைவது கண்டறியப்பட்டது. அவை பொருள் சார்ந்தவை, ஆனால் சட்டரீதியான விதிகளைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல. விரிவான விசாரணைகள் இல்லாமல், கடிதம் மூலம் குறித்துரைக்கப்பட்ட முயற்சிகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. குறித்துரைக்கப்பட்ட முயற்சிகளிற்குச் சொந்தமான அத்தகைய கடிதங்கள் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை SLAASMB ஆல் வழங்கப்பட்ட கட்டளை அல்ல, அவை உதவிக் கடிதங்கள் ஆகும்.

குறித்துரைக்கப்பட்ட முயற்சிகளிலிருந்து (SBE) உதவி கடிதங்கள் எதற்காக அனுப்பப்பட்டன என்பது தொடர்பான முக்கிய விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- 31 குறித்துரைக்கப்பட்ட முயற்சிகளின் (SBE) நிதிக் கருவிகளில் இருந்து எழும் அபாயங்களின் தன்மை மற்றும் அளவைப் பற்றி, அறிக்கையிடல் காலத்தின் முடிவில் போதியளவில் வெளிப்படுத்த செய்யத் தவறியமை. (தொடர்பு: SLFRS 7 பந்திகள் 35, 36 மற்றும் 37)

- 28 குறித்துரைக்கப்பட்ட முயற்சிகளின் பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டு நுட்பங்கள், மதிப்பீட்டு நுட்பங்களுக்கான உள்ளீடுகள், பயன்படுத்த முடியாத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் பற்றிய அளவு தகவல்கள், உள்ளீடுகளில் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்கள் மற்றும் நியாயமான மதிப்பில் அளவிடப்பட்ட ஒவ்வொரு வகை சொத்துக்கள் மற்றும் கடன்களுக்கான நியாயமான மதிப்பு வரிசைமுறை தொடர்பான போதுமான தகவல்களை வெளியிடுவதில் ஏற்பட்ட தவறு (தொடர்பு SLFRS 13 பந்திகள் 91 மற்றும் 93)

- 13 சிறிய மற்றும் நடுத்தர (SME) அளவு பிரிவுகள் உட்பட 42 குறித்துரைக்கப்பட்ட முயற்சிகள் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் அங்கீகரிக்கும் போது வரிப் பொறுப்புக்கள் அனைத்தினதும் தற்காலிக வேறுபாடுகளை கருத்தில் கொள்ளத் தவறியது (தொடர்பு LKAS 12 பந்திகள் 15, 24 மற்றும் 48 மற்றும் எஸ். எம்.இ பிரிவு 29 பந்தி 29.12)

- 10 சிறிய நடுத்தர (SME) அளவிலான பிரிவுகள் உட்பட 34 குறித்துரைக்கப்பட்ட முயற்சிகளின் வரிச் செலவு மற்றும் கணக்கீட்டு இலாபம் என்பனவற்றிற்கு இடையிலான தொடர்பைக் கண்டறியத் தவறியமை மற்றும் வரி

2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிதிக்கூற்றுகள் தொடர்பான மீளாய்வின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

இழப்புகளுக்கு பிற்போடப்பட்ட வரியை இனங்காண்பதற்கான ஆதாரங்களைக் கண்டறியத் தவறியமை
(தொடர்பு LKAS 12 பந்தி 81 மற்றும் சிறிய நடுத்தர அளவு பிரிவு 29 பந்தி 29.32)

- 19 சிறிய நடுத்தர அளவிலான பிரிவுகள் உட்பட 48 குறித்துரைக்கப்பட்ட முயற்சிகளின் தொடர்புபட்ட தரப்பினரின் தொடர்புகளின் தன்மை மற்றும் அவற்றின் தொடர்புபட்ட தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தகவல் என்பனவற்றை இனங்காண்பதற்கான ஆதாரங்களைக் கண்டறியத் தவறியமை -
(தொடர்பு LKAS 24 பந்தி 18 மற்றும் சிறிய நடுத்தர அளவு பிரிவு 33 பந்தி 33.9)

- 25 குறித்துரைக்கப்பட்ட முயற்சிகளின் அளவீட்டு அடிப்படைகள் உள்ளடங்கிய குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுகளை விளங்கிக் கொள்வதற்கு தேவையான ஏனைய கணக்கீட்டுக் கொள்கைகள் என்பனவற்றை இனங்காண்பதற்கான ஆதாரங்களைக் கண்டறியத் தவறியமை
(குறிப்பு LKAS 1 பந்தி 15 மற்றும் 117)

- 5 சிறிய நடுத்தர அளவிலான பிரிவுகள் உட்பட 20 குறித்துரைக்கப்பட்ட முயற்சிகளின் ஒரு நிதிச் சொத்து அல்லது ஒரு தொகுதி நிதிச் சொத்துக்களில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் புறநிலை சான்றுகளை இனங்காண்பதற்கான ஆதாரங்களைக் கண்டறியத் தவறியமை
(தொடர்பு LKAS 36 பந்தி 8 மற்றும் LKAS 39 பந்திகள் 58 மற்றும் 63 மற்றும் சிறிய நடுத்தர பிரிவு 11 பந்தி 11.21)

- 4 குறித்துரைக்கப்பட்ட முயற்சிகளின் பணத்தின் நேர மதிப்பை பிரதிபலிக்கும் வகையில் ஒரு நிதி கருவியின் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளை அளவிடத் தவறியமை
(தொடர்பு SLFRS 9 பந்தி 5.5.17)

- 8 சிறிய நடுத்தர அளவிலான பிரிவுகள் உட்பட 20 குறித்துரைக்கப்பட்ட முயற்சிகளின் ஆதனங்களும் பொறிகளும் மற்றும் உபகரணங்களின் மதிப்பீடு தொடர்பான அனைத்து தொடர்புடைய தகவல்களையும் வெளியிடத் தவறியமை
(தொடர்பு LKAS; 16 பந்தி 77 மற்றும் சிறிய நடுத்தர பிரிவு 17 பந்தி 17.33)

2019 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொண்ட பணிகள் மற்றும் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள்

1. அக்சஸ் என்ஜினியரிங் பி.எல்.சி

அக்சஸ் என்ஜினியரிங் பி.எல்.சி இன் 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் எல்கேஏஎஸ் 12 இன் தேவைப்பாடுகளுக்கு இணங்க முதலீட்டுச் சொத்தாக வகைப்படுத்தப்பட்ட கட்டிடங்கள் தொடர்பாக பிற்போடப்பட்ட வரிச்சொத்து/ பொறுப்பை இணங்கான தவறியமை.

கணக்காய்வாளர் இந்தப் பிரச்சினை தொடர்பில் முனைப்பழியற்ற அபிப்பிராயத்தை வழங்கவில்லை.

SLAASMB ஆல் மேற்கொள்ளப்பட்டட விசாரணைகளுக்குப் பிறகு முதலீட்டுச் சொத்தாக வகைப்படுத்தப்பட்ட கட்டிடங்கள் தொடர்பாக பிற்போடப்பட்ட வரிச்சொத்து / பொறுப்பை 2019 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த இறுதி காலாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் இனங்காண்பதற்கு கம்பனி இணங்கியது. இதன் விளைவாக நிறுவனத்தின் தேறிய சொத்துக்கள் ரூபா 988 மில்லியனால் குறைக்கப்பட்டது.

2. சிட்டி ஹவுசிங் மற்றும் ரியல் எஸ்டேட் கம்பனி பி.எல்.சி

சிட்டி ஹவுசிங் மற்றும் ரியல் எஸ்டேட் கம்பனி பி.எல்.சி,

i. 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி கூற்றுக்களில் அத்தகைய நிதிச் சொத்துக்களின் உரிமையையும் இருப்பையும் உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்கள் இல்லாத நிலையில் ரூபா 23 மில்லியன் விற்பனை முதலீடுகளுக்கு இனங்காணப்பட்டுள்ளது.

ii. கம்பனியால் செலுத்த வேண்டிய ரூபா 30.5 மில்லியன் மற்றும் உப கம்பனியான ட்ரில்லியம் ரெசிடென்சீஸ் லிமிடட் கம்பனியால் செலுத்த வேண்டிய ரூபா 144.6 மில்லியன் அம்மீதிகளில் காணப்படல் மற்றம் முழுமையாக உறுதிப்படுத்தப்படாத தொடர்புடைய தரப்பினருனானது என இணங்காணப்பட்டிருந்தது.

iii. எல்.கே.ஏ.எஸ் 39 இன் தேவைகளுக்கு ஏற்ப 2017 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான தொடர்புடைய தரப்பினரிடம் இருந்து பெறவேண்டிய தொகைகளின் நட்டத்தை மதிப்பிடுவதில் தவறியமை

இதனால் கணக்காய்வாளர் தமது அபிப்பராயத்தை முனைப்பழியுள்ளதாக தெரிவித்திருந்தார்.

SLAASMB ஆல் மேற்கொள்ளப்பட்டட விசாரணைகளுக்குப் பிறகு,

i. 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நிறுவனம் உரிமையையும் இருப்பையும் நிறுவக்கூடியதாக விற்பனைக்குள்ள முதலீடு பிரதிபலிக்கிறது.

ii. 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி கூற்றுக்களில் தொடர்புடைய தரப்பினர்களுக்கு அவர்களின் தற்போதைய கடமையின் அளவுகளில் செலுத்த வேண்டிய தொகைகளை பிரதிபலிக்கிறது.

iii. 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் குறைப்பாட்டிற்கான கொடுப்பனவை அங்கீகரிப்பதன் மூலம் தொடர்புடைய தரப்பினிடமிருந்து அறவிடக் கூடிய பெறுமதிகளில் செலுத்த வேண்டிய தொகையை பிரதிபலிப்பதற்கு நிறுவகம் இணங்கியது.

கணக்காய்வுப் பரிசோதனை – 2019

1. அறிமுகம்

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) நிதிக்கூற்றுக்களின் நம்பகத் தன்மையினை மேம்படுத்தும் நோக்கிலான கணக்காய்வுத் தரச் சூழலினை அபிவிருத்தி செய்யும் தனது முயற்சியில் கணக்காய்வுத் தரத்தினை மேம்படுத்துவதற்கான ஒரு முயற்சியாக 2016 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஆபத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வு மேற்பார்வை அணுகுமுறையினை தொடர்ந்தும் விருத்தி செய்தது.

குறித்த வருடத்தினுள் வழமையான கணக்காய்வுப் பரிசோதனைகள் மற்றும் கருப்பொருள் ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் இலங்கை கணக்கீட்டு நியமத்துடனான இணக்கப்பாட்டினை SLAASMB தொடர்ச்சியாக கண்காணித்து வந்தது. மேலும், எதிர்காலத்தில் நிறுவன ரீதியான பரந்த தர ஆய்விற்கான கணக்காய்வு சந்தை சூழலை உருவாக்குவதற்கான ஒரு முன்னெடுப்பாக, SLAASMB ஆனது, பரிநோதனை மேற்கொள்ளப்படுவதற்கு சுயமாக முன்வந்த நிறுவனங்களின் மீது 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிறுவன பரந்த தர ஆய்வுடன் தொடர்பான வேலைகளை தொடர்ந்தும் முன்னெடுத்தது.

இதற்கு மேலதிகமாக, SLAASMB 2018 ஆம் ஆண்டு இலங்கை கணக்கீட்டு நியமம் 701 இனது பயன்பாட்டுடன் சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கையில் முக்கிய கணக்காய்வு விடயங்களின் தொடர்பின் அளவினை மீளாய்வு செய்வதற்கான ஒரு செயல்திறன் பொறிமுறையாக முக்கிய கணக்காய்வு விடயங்களில் (KAM) கவனம் செலுத்தி கணக்காய்வு பரிசோதனைகளை நடாத்தியது.

இதனடிப்படையில், SLAASMB 2018 ஆம் ஆண்டு 10 நிறுவனங்களின் மூலம் மேற்கொண்ட 50 கணக்காய்வு நடவடிக்கைகளுடன் ஒப்பிடுகையில், குறித்த வருடத்தினுள் 7 கணக்காய்வு நிறுவனங்களின் மூலம் மொத்தமாக 45 கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்டது. கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட 45 பரிசோதனைகளில் முன்னேற்பாடு செய்யப்பட்ட முக்கிய துறைகளினுள் ஆழமான பரிசோதனைக்கான வழிவகுக்கக்கூடிய ஆபத்தை அடிப்படையாகக் கொண்ட 33 முறையான பரிசோதனைகளும், 12 கருப்பொருள் ஆய்வுகளும் உள்ளடங்கியிருந்தன. 33 முறையான பரிசோதனைகளில் 10 பரிசோதனைகள் முக்கிய கணக்காய்வு விடயங்களில் கவனம் செலுத்துபவையாக இருந்தன. வருடத்தினுள் நடைபெற்ற 45 பரிசோதனைகளுடன் ஒப்பிடுகையில், 2018 இல் நடைபெற்ற 50 பரிசோதனைகளுள் 31 முறையான கணக்காய்வுப் பரிசோதனைகளும் 19 கருப்பொருள் ஆய்வுகளும் அடங்கியிருந்தன. வருடத்தினுள் நடைபெற்ற பரிசோதனைகளினுள் சர்வதேச வலையமைப்புகளின் அங்கத்தவர்களான 4 நிறுவனங்களால் நடாத்தப்பட்ட 29 கணக்காய்வுகள் காணப்பட்டன.

2. இணக்கமின்மைகள் மீதான அமுலாக்கம்

பரிசோதனைகளின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளின் தீவிரத்தன்மையின் அடிப்படையில், கணக்காய்வுத் தரச் சூழலை மேம்படுத்தும் நோக்குடன், கணக்காய்வாளர்கள் தம்மை வளப்படுத்திக்கொள்ளும் வகையிலான பல்வேறு செயற்பாடுகளை SLAASMB நடைமுறைப்படுத்தியது.

வருடத்தினுள் எச்சரிக்கைக் கடிதங்குள் மற்றும் அவதானிப்புக் கடிதங்கள் அனுப்புதல் போன்ற நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. கணக்காய்வுத் துறை முழுவதினதும் கணக்காய்வுத் தரத்தினை இச் செயன்முறையில், முன்னேற்றமடைய வேண்டிய துறைகள் தொடர்பான தகவல்கள் குறித்த நிறுவனங்களுக்கு வருடத்தினுள் வழங்கப்பட்டன. இவ்விடயங்களின் முக்கியத்துவத்தின் அடிப்படையில், தேவையான சந்தர்ப்பங்களில், SLAASMB கணக்காய்வுத் தரத்தில் காணப்பட்ட குறைபாடுகளை CA ஸ்ரீலங்கா மற்றும் இலங்கை பாதுகாப்பு பரிமாற்றல் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு வழங்கியது.

2.1 எச்சரிக்கைக் கடிதம்

2019ஆம் ஆண்டில், ஒரு குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்தின் கணக்காய்வினை மேற்கொள்ளும் பொழுது, இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் (SLAuSs) இணக்கப்படாமை மற்றும் தொழில்முறைத் திறன் கொண்ட அடிப்படை நெறிமுறைக் கொள்கைகளை பிரயோகிப்பதற்கும் உரிய கவனம் செலுத்துவதற்கும் தவறியமை காரணமாக SLAASMB இரண்டு கணக்கீட்டு நிறுவனங்களுக்கு எச்சரிக்கை விடுத்து இரண்டு கடிதங்களை அனுப்பியது. இதன்படி KPMG மற்றும் Carter de Costa & Co ஆகிய நிறுவனங்களுக்கு எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வினை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் விடா முயற்சியுடனும் பொருந்தக்கூடிய கணக்காய்வுத் தரங்களின் தேவைகளைக் கருத்தில் கொள்ளுமாறும் வேண்டி எச்சரிக்கைக் கடிதங்களை SLAASMB அனுப்பியது.

கணக்காய்வுப் பரிசோதனை – 2019

2.2 உதவிக் கடிதம்

முறையான கணக்காய்வுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் போது சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அளவு பாரதூரமற்ற இணக்கப்பாடின்மைகள் வெளிப்படும் சந்தர்ப்பங்களில், அவ்வாறான குறைபாடுகள் குறித்த நிறுவனங்களுக்கு "அவதானிப்புக் கடிதங்கள்" என குறிப்பிடப்படுகின்ற உதவிக் கடிதங்கள் மூலம் அறிவிக்கப்படுகின்றன. இவ்வாறான குறைபாடுகள் 6 நிறுவனங்களால் நடாத்தப்பட்ட 15 கணக்காய்வுச் செயற்பாடுகளின் போது அவதானிக்கப்பட்டது.

2.3 முன்னேற்றத்திற்கான ஆலோசனைகள்

கணக்காய்வின் தரத்தினை முன்னேற்றவதற்காக கணக்காய்வில் முன்னேற்றம் தேவைப்படும் சந்தர்ப்பங்களில், அவ்வாறான முன்னேற்றத்திற்கான ஆலோசனைகளாக முன்வைக்கப்படுகின்றன. குறித்த வருடத்தினுள் 2 நிறுவனங்களுக்கு 6 கணக்காய்வுச் செயற்பாடுகள் தொடர்பிலான முன்னேற்றத்திற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. குறித்த நிறுவனங்களின் கணக்காய்வாளர்கள் எதிர்காலத்தில் கணக்காய்வு நடவடிக்கைகளின் போது இனங்காணப்பட்ட துறைகளில் முன்னேற்றமடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

3. முறையான கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்

அவதானிப்புக் கடிதங்கள் ஊடாக அறிவிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க குறைபாடுகளாவன

3.1 ஒரு பொருத்தமான கணக்காய்வுக் கருத்தினை முன்வைக்கத் தவறியமை

கணக்காய்வாளரினால் ஒரு பொருத்தமான கணக்காய்வுக் கருத்தினை முன்வைக்கத் தவறிய பின்வரும் சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டன

- நிதிக்கூற்றுக்களில் பரவலான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய தவறான கூற்றுகள் காணப்பட்ட சந்தர்ப்பங்களில் பாதகமான கருத்தை வெளிப்படுத்தாமை.
- ஒரு பொதுப் பட்டியல்படுத்தப்பட்ட கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் மீது தகுதிவாய்ந்த கருத்தினை வெளிப்படுத்துவதற்கான அடிப்படையினை பொருத்தமான முறையில் நிறுவாமை
- ஒரு பொதுப் பட்டியலிடப்பட்ட கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு ஆலோசனைகளை முன்வைக்கின்ற பொழுது, நிதிக் கூற்றுக்களின் உண்மையான மற்றும் நியாயமான நோக்கிற்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய, கண்டறியப்பட்டதும் கண்டறியப்படாததுமான கருத்தினை வெளிப்படுத்தாமை.
- ஒரு பொதுப் பட்டியல்படுத்தப்பட்ட கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் மீதான முனைப்பழியற்ற அபிப்பிராயங்களை முன்வைக்கும் போது முன்னைய வருடத்தின் கணக்காய்வுத் தகைமைகள் முறையாகத் தீர்க்கப்படாமை.
- ஒரு பொதுப் பட்டியல்படுத்தப்பட்ட கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் உண்மையான மற்றும் நியாயமாக காணப்பட்ட மற்றும் கணக்காய்வாளரினால் போதிய பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில், நவீனமயப்படுத்தப்பட்ட ஒரு அபிப்பிராயத்தை முன்வைக்காமை.

3.2 போதிய பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளத் தவறியமை

கணக்காய்வாளர் கட்டுப்பாட்டுப் பரீட்சைகள் மூலமும் மற்றும் கணிசமான செயன்முறைகள் மூலமாகவும் நிதிக் கூற்றுக்களின் வலியுறுத்தல்களுக்கு உதவக்கூடிய போதிய பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளத் தவறியமை பின்வருமாறு அவதானிக்கப்பட்டது.

- மேற்கொள்ளப்பட்ட பதிலீட்டுக் கணக்காய்வுச் செயன்முறைகள் மூலம் உண்மையிலேயே திட்டமிடப்பட்ட கணக்காய்வுச் செயன்முறையின் நோக்கங்களை அடைய முடிந்ததா என்பதை கணிப்பிடாமை.
- பொருட்கள்/சேவைகளின் ஆபத்துக்களும் வெகுமதிகளும் நுகர்வாளருக்கு மாற்றப்பட்ட புள்ளியைக் கருத்திற்கொண்டு, வருமானம் கண்டறியப்பட்ட புள்ளியின் பொருத்தப்பாட்டினை இனங்காண்பதற்கு தவறியமை.
- முதலீடாகவும் இருப்பாகவும் கொண்டுசெல்லப்பட்ட இரத்தினக்கல் தொகையின் அங்கீகாரம் மற்றும் அளவீட்டினை பரிசீலிப்பதற்கான சரியான கணக்காய்வு செயன்முறைகள் பின்பற்றப்படாமை.
- கணக்காய்வாளர் கம்பனியின் தொகை மதிப்புக் கட்டுப்பாட்டு முறைமையின் மீது தங்கியிருக்காத நிலையிலும் ஒன்றிணைந்த ஆபத்துக் கணிப்பீட்டில் தொகை மதிப்பானது ஒரு ஆபத்து மிக்க துறையாகக் கருதப்பட்ட நிலையிலும் அறிக்கையிடல் காலத்தின் இறுதியில்

கணக்காய்வுப் பரிசோதனை – 2019

உள்ளவாறான தொகை மதிப்பின் பெறுமதியின் துள்ளியத் தன்மையினை மதிப்பிடத் தவறியமை.

- செலவுகளுடன் தொடர்பான போதிய சரியான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்காக திட்டமிட்ட கணக்காய்வு முறைமையினை செயற்படுத்தாமை.
- செலவுகள் மற்றும் விற்பனைக் கிரயத்துடன் தொடர்பான கணிசமான பகுப்பாய்வு முறைமைக்காக பயன்படுத்தப்பட்ட தரவுகளின் நம்பகத்தன்மை மற்றும் ஒப்பீட்டுத்தன்மை ஆகியன மதிப்பீடு செய்யப்படாமை.
- செலவுகள் மற்றும் விற்பனைக் கிரயத்துடன் தொடர்பான விபரப் பரீட்சையாக கணிசமான பகுப்பாய்வு முறைமை மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், போதிய சரியான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பொருத்தமான கணிசமான பகுப்பாய்வு முறைமைகள் வடிவமைக்கப்படாமை.

3.3 ஆளுகையுடன் குற்றம் சாட்டப்பட்டவர்களுடன் தொடர்புகொள்ளத் தவறியமை

நிதிக்கூற்றுக்கள் மீதான ஒரு கணக்காய்வின் போது வினைத்திறனான இருவழித் தொடர்பு பேணப்படாமை தொடர்பான கீழ்வரும் விடயம் அவதானிக்கப்பட்டது.

- பொதுப் பட்டியல்படுத்தப்பட்ட கம்பனியொன்றின் கணக்காய்வுச் செயன்முறை தொடர்பில் கணக்காய்வுக் குழுவுடன் வினைத்திறனான இருவழித் தொடர்பு பேணப்பட்டமைக்கான ஆதாரங்கள் காணப்படாமை.

3.4 ஆபத்து மதிப்பீட்டுடன் தொடர்பான போதிய கணக்காய்வுச் செயன்முறைகளை மேற்கொள்ளத் தவறியமை

நிறுவனத்தின் உள்ளார்ந்த கட்டுப்பாடுகள் உட்பட அந் நிறுவனம் மற்றும் அதன் சூழல் என்பவற்றை அறிந்துகொள்வதனூடாக, நிதிக் கூற்றுக்களில் காணப்படும் பொருள் சார் பிழையான கூற்றுக்களின் ஆபத்துக்களை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்தல் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றாமை தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு

- செயற்படுத்த வேண்டிய கட்டுப்பாட்டுச் சோதனைகள் தொடர்பில் தீர்மாணம் மேற்கொள்ளும் போது, மட்டுப்படுத்தப்பட்ட ஆபத்தின் அளவு தொடர்பில் கணக்காய்வாளர் தீர்மாணித்திருக்கும் சந்தர்ப்பத்தில், இனங்காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஆபத்தினைக் குறைப்பதற்குப் பொருத்தமான கட்டுப்பாடுகளான முக்கிய கட்டுப்பாடுகளை இனங்காணாமை.
- வருமானங்களுடன் தொடர்பான கட்டுப்பாட்டு ஆபத்தினை மதிப்பீடு செய்யும் பொழுது, உள்ளகக் கட்டுப்பாடுகளை மதிப்பீடு செய்யாமை. முறையான ஒரு ஆபத்து மதிப்பீடு காணப்படாத சந்தர்ப்பத்தில், வடிவமைக்கப்பட்ட மற்றும் செயற்படுத்தப்பட்ட கணக்காய்வுச் செயன்முறைகள் நிதிக்கூற்றுக்களில் பொருள்சார் பிழையான கூற்றுக்கள் மற்றும் வலியுறுத்தல் மட்டம் ஆகியவற்றின் ஆபத்து மீது ஏற்படுத்திய தாக்கம் மதிப்பீடு செய்யப்படவில்லை.
- கம்பனியுடனான கடந்த கால அனுபவங்கள் காணப்பட்ட போதும், கணக்காய்வாளர் தொகை மதிப்பின் தன்மைக்கேற்ப அதாவது மாணிக்கக் கற்களின் தொகைக்கேற்ப பொருத்தமான கணக்காய்வுச் செயன்முறையினைத் திட்டமிடத் தவறியிருந்தார். இதற்கமைய, கணக்காய்வாளர் தொகை மதிப்பின் அளவுகள் மற்றும் விலை மதிப்பீடு செய்யப்பட்ட திகதி ஆகியவற்றை சரிபார்க்கத் தவறியமை காரணமாக, தொகை மதிப்பின் விலை மதிப்பு மற்றும் முழுமைத்தன்மையின் வலியுறுத்தல்களை உறுதிசெய்ய முடியவில்லை.
- கணக்காய்வாளரினால் ஒன்றுக்கு மேற்பட்ட வருமானம் சார்ந்த கட்டுப்பாடுகள் பொருத்தமான கட்டுப்பாடுகள் என இனங்காணப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில், குறித்த கட்டுப்பாடுகளின் செயற்பாட்டு வினைத்திறனைப் பரீட்சிப்பதற்கான கட்டுப்பாட்டுப் பரிசோதனைகளை திட்டமிடவும் செயற்படுத்தவும் தவறியமை.
- வருமானத்துடன் தொடர்பான முக்கிய கட்டுப்பாடுகள் என கணக்காய்வாளரினால் இனங்காணப்பட்ட கட்டுப்பாடுகளின் செயற்பாட்டு வினைத்திறனைப் பரிசீலிக்கத் தவறியமை.
- வருமானத்துடன் தொடர்பான கட்டுப்பாடுகளின் செயற்பாட்டு வினைத்திறனைப் பரிசீலிப்பதன் மூலம் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் பெறுபேறுகளை மதிப்பீடு செய்யத் தவறியமை.

3.5 நியாயமான பெறுமதியான கணக்கீட்டு மதிப்பீடுகள் உள்ளிட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொடர்பான போதிய கணக்காய்வுச் செயன்முறைகளைச் செயற்படுத்தத் தவறியமை மற்றும் ஏனைய விடயங்கள்.

நியாயமான பெறுமதியான மதிப்பீடுகள் தொடர்பான போதிய பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதில் கணக்காய்வாளர் தவறு விட்ட சந்தர்ப்பங்கள் வருமாறு.

கணக்காய்வுப் பரிசோதனை – 2019

- ஒரு முதலீட்டின் மீளப்பெற முடியுமான பெறுமதியினை மதிப்பீடு செய்தலுடன் தொடர்பான குறிப்பிடத்தக்க அனுமானங்கள் ஏற்படக்கூடிய சாத்தியப்பாட்டினை மதிப்பீடு செய்யாமை மற்றும், முதலீட்டின் மீளப்பெற முடியுமான பெறுமதியின் மொத்தக் கணக்கீட்டில் தாக்கம் செலுத்தும் ஒரு முக்கிய அனுமானமாகிய முதலீட்டாளரின் மூலதனக் கட்டமைப்பின் மறுசீரமைப்பு மீதான உறுதியான அர்ப்பணிப்பு தொடர்பான போதிய பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளத் தவறியமை.
- மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள், ஆலைகள் மற்றும் கருவிகளின் நியாயமான பெறுமதியின் நியாயத்தன்மையினை உறுதிசெய்யத் தவறியமை.
- கடன் இலாகாக்களுக்கான குறைபாட்டுக் கொடுப்பனவினை மதிப்பீடு செய்யும் போது, வங்கியினால் இயல்புநிலை வீதம் வழங்கப்பட்ட பொருத்தமற்ற ஒரு நட்டத்தினுடைய பிரயோகத்தினை இனங்காணத் தவறியமை மூலம், வங்கியொன்றின் கணக்கீட்டு மதிப்பீட்டினை கணக்காய்வு செய்யும் பொழுது தொழில்சார் சந்தேகங்கள் பேணப்படாமை.

3.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வில் மோசடிகள் தொடர்பான ஆபத்துக்களை போதியளவு சுட்டிக்காட்டத் தவறியமை.

கணக்காய்வாளர்களால் மோசடி தொடர்பான ஆபத்துகள் தொடர்பில் போதிய கவனம் செலுத்தாமை தொடர்பிலான அவதானிப்புகள்.

- விற்பனை ஒப்பந்தங்கள் உண்மையற்றவை என கணக்காய்வாளரை நம்பச்செய்த நிபந்தனைகளை கணக்காய்வாளர் இனங்கண்டிருந்த போது, வருமான அங்கீகாரத்துடன் தொடர்பான மோசடிகள் தொடர்பான ஆபத்துக்களை முறையாக சுட்டிக்காட்டத் தவறியமை.
- மோசடிகள் தொடர்பான ஆபத்துக்களை சுட்டிக்காட்டுவதற்காக மோசடியான நாளேட்டுப் பதிவுகள் மற்றும் பொதுப் பேரேட்டில் ஏனைய சரிசெய்தல்கள் என்பனவற்றில் கவனம் செலுத்தி பொருத்தமான கணக்காய்வு செயன்முறைகளை செயற்படுத்தத் தவறியமை.

4. முக்கிய கணக்காய்வு விடயங்களின் பரிசோதனையின் மீது (KAM) மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்

2018 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த இலங்கைக் கணக்காய்வுத் தரம் 701 ஆனது, கணக்காய்வாளரின் அறிக்கையில் முக்கிய விடயங்களை வெளிக்காட்டுவதற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகளை விளக்குகின்றது. இது கணக்காய்வாளரின் அறிக்கையில் என்ன விடயத்தை வெளிக்காட்டுவது என்பது தொடர்பான கணக்காய்வாளரின் தீர்மானத்தையும், அவ் விடயங்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கம் ஆகிய இரண்டு விடயங்களையும் சுட்டிக்காட்டுகிறது. இப் புதிய விஸ்தரிக்கப்பட்ட கணக்காய்வாளர் அறிக்கையானது, கணக்காய்வாளரின் துறைசார் தீர்மானத்தின் அடிப்படையில் குறித்த காலப்பகுதியின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு மிகவும் சரியானவை என்ற கருத்தினை எதிர்பார்த்த பாவனையாளர்களுக்கு வழங்கவும் அவற்றின் உள்ளடக்கத்தினை விளங்கவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. முக்கிய கணக்காய்வு விடயங்களை வெளிக்காட்டுவதானது கணக்காய்வுச் செயன்முறையின் முக்கிய துறைகளாகக் காணப்படுவதன் காரணமாக, இவை நிதிக்கூற்றுப் பாவனையாளர்களுக்கு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் முக்கியமான முகாமைத்துவத் தீர்மாணங்களையும் நிறுவனங்களையும் விளங்கிக்கொள்ள உதவுகின்றன.

முக்கிய கணக்காய்வு விடயங்களின் பரிசோதனைச் செயன்முறையில், அறிக்கையிடலின் முதல் வருடத்தில், அதாவது 2018 இல், இலங்கையில் முக்கிய கணக்காய்வு விடயங்களின் தொடர்புகொள்ளல் தொடர்பான நிலையினை மீளாய்வு செய்வதற்கான ஒரு செயற்திறன் பொறிமுறையுடன் சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கையிலிருந்த முக்கிய கணக்காய்வு விடயங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இச் செயன்முறையின் நோக்கம் புதிய விஸ்தரிக்கப்பட்ட கணக்காய்வாளர் அறிக்கையின் நோக்கத்தினை அடைந்துகொள்ளும் வகையில், முக்கிய கணக்காய்வு விடயங்களின் எதிர்கால பிரயோகத்தினை இலங்கை கணக்காய்வு நியமம் 701 இற்கு சமாந்தரமாக முன்னேற்றுவதாகும். முக்கிய கணக்காய்வு விடயங்களின் பிரயோகத்தில் பின்வரும் குறைபாடுகள் காணப்பட்டதுடன் அவை கணக்காய்வாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

- கணக்காய்வாளர் ஒரு பொதுப் பட்டியல்படுத்தப்பட்ட கம்பனியின் கணக்காய்வு அறிக்கையில் முக்கிய கணக்காய்வு விடயங்களுக்கான ஒரு பந்தியை இணைத்திருக்கவில்லை. இதனடிப்படையில், கணக்காய்வாளர் கணக்காய்வு அபிப்பிராயங்களை வழங்கும் பொழுது தொழில்சார் தேர்ச்சியையும் தேவையான கவனத்தையும் செலுத்தத் தவறியிருந்தார்.
- முக்கிய கணக்காய்வு விடயங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுச் செயன்முறையினை செயற்படுத்தத் தவறியமை.

கணக்காய்வுப் பரிசோதனை – 2019

- காணியின் பெறுமதியை மதிப்பீடு செய்வதன் நியாயத்தன்மையினை மதிப்பிடுகையில், கணக்காய்வுச் செயன்முறையானது ஒத்த பல சொத்துக்களின் பெறுமதிகள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதெனக் குறிப்பிட்டிருந்த போதும், ஒரு சொத்தினது பெறுமதி தொடர்பான தகவல்களை மாத்திரமே கணக்காய்வாளர் கருத்தில் எடுத்துள்ளார்.

- FV இனது சரியான தன்மையினை மதிப்பீடு செய்வதில், இவ்வாறான கணக்காய்வு செயன்முறைகள் முக்கிய கணக்காய்வு விடயங்களில் அடங்கியிருந்த போதும், அருகருகே அமைந்திருந்த ஒரேமாதிரியான இரு கட்டிடங்கள் விற்கப்பட்டிருந்த விலைகள் கணக்காய்வாளரினால் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

5. கருப்பொருள் ஆய்வு

தனிப்பட்ட கணக்காய்வுகளின் முறையான பரிசோதனைகளின் வருடாந்தச் செயற்பாடுகளின் ஒரு அங்கமாகிய, 2017ஆம் ஆண்டிலிருந்து நடாத்தப்பட்ட கருப்பொருள் ஆய்வுகள், கணக்காய்வின் முறையான பரிசோதனைகளில் வழமையாக சாத்தியமாக இருப்பதை விட, வேண்டுமென்றே குறைந்த வாய்ப்புள்ளதாகவும், கணக்காய்வின் ஒரு குறிப்பிட்ட விடயத்தில் ஆழமான கவனம் செலுத்துவதாகவும் இருந்தன. இதனடிப்படையில், ஒரு கருப்பொருள் ஆய்வானது, நல்ல செயற்பாடுகளையும் பொதுவான பலவீனமான துறைகளையும் இனங்காணும் நோக்கத்துடன் கணக்காய்வு நிறுவனங்களுக்கிடையில் ஒப்பீட்டினை ஏற்படுத்துவதற்காக, SLAASMB இனால் தெரிவு செய்யப்பட்ட கணக்காய்வின் குறிப்பிட்ட அம்சங்கள் அல்லது துறைகள் சார்ந்த நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளின் பிரயோகத்தில் கவனம் செலுத்துகிறது.

2018 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட கருப்பொருள் ஆய்வுகள்

வருடத்தினுள், ஆளுகையுடன் குற்றமிழைக்கப்பட்டவர்களுடனான தொடர்புகள் மீதான, 5 நிறுவனங்களால் நடாத்தப்பட்ட 19 கணக்காய்வு செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட கருப்பொருள் ஆய்வுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன், அறிக்கை தயாரித்தலுடன் தொடர்பான செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

மேற்குறிப்பிட்ட கருப்பொருள் ஆய்வுகளின் நோக்கம் நிறுவனங்களின் ஆளுகையுடன் குற்றமிழைக்கப்பட்டவர்களுடனான தொடர்புகளையும் தொடர்புகளின் எல்லையையும் உறுதி செய்வதாகும். இத் தொடர்பு கொள்ளளானது கணக்காய்வாளரின் ஆளுகையுடன் குற்றமிழைக்கப்பட்டவர்களுடனான வளர்ச்சிகரமான தொழிலாற்றல் உறவினை வளர்த்துக்கொள்ள உதவுகின்ற அதேவேளை, கணக்காய்வாளரின் சுதந்திரத்தையும் நோக்கத்தினையும் பேணிக்கொள்ளவும் உதவுகிறது. மேலும் இத் தொடர்பு கொள்ளளானது ஆளுகையுடன் குற்றமிழைக்கப்பட்டவர்களுக்கு தமது நிதி அறிக்கையிடல் செயன்முறையினை மேற்பார்வை செய்யும் பொறுப்பினை நிவர்த்தி செய்வதற்கு உதவும். எனவே, நாட்டின் கணக்காய்வுத் தரச் சூழலை வலுப்படுத்தும் நோக்கில், கணக்காய்வாளருக்கும் ஆளுகையுடன் குற்றமிழைக்கப்பட்டவர்களுக்கும் இடையில் வினைத்திறனான தொடர்பாடல் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகு தொடர்பாடலின் வினைத்திறனை உறுதி செய்வதில், SLAASMB ஒரு படி முன்னேறியுள்ளதுடன், ஆய்வுசெய்யப்பட்ட SBE க்களின் கணக்காய்வுக் குழு உறுப்பினர்களுடனும் ஆளுகையுடன் குற்றமிழைக்கப்பட்டவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளது.

இம் முன்னெடுப்பானது SLAASMB கணக்காய்வாளர்களுடனான வினைத்திறனான தொடர்புகொள்ளலை மேற்கொள்வதன் மீது ஆளுகையுடன் குற்றமிழைக்கப்பட்டவர்களினால் வைக்கப்பட்ட முக்கியத்தின் அளவினை மதிப்பீடு செய்ய உதவுகிறது. இக் கலந்துரையாடல்கள் கணக்காய்வாளர்களுடனான வினைத்திறனான தொடர்புகொள்ளலின் முக்கியத்துவததினையும் நிறுவனத்தின் சட்டரீதியான கணக்காய்வாளரைத் தெரிவு செய்வதிலும் மதிப்பீடு செய்வதிலும் கணக்காய்வாளர் குழு உறுப்பினர்கள் மீது உள்ள பொறுப்புகளையும் வெளிப்படுத்தவும் SLAASMB இற்கு உதவியதுடன் கணக்காய்வாளரினால் வழங்கப்பட்ட கணக்காய்வு சேவையின் தரத்தினை மதிப்பீடு செய்யவும் உதவியது.

கருப்பொருள் ஆய்வுகளின் முடிவுகள் கணக்காய்வுத் துறையில் காணப்படும் சிறந்த செயற்பாடுகளை ஒப்பீடு செய்வதற்கான ஒரு அடித்தளத்தை உருவாக்குகிறது. மேலும், எதிர்காலத்தில் வினைத்திறனான கணக்காய்வினை நடாத்தல் தொடர்பான தமது பொறுப்புகளை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கான அடித்தளத்தினை உருவாக்குவதற்காக

கணக்காய்வுப் பரிசோதனை – 2019

கணக்காய்வாளர் குழு உறுப்பினர்களால் கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கிய துறைகள் தொடர்பில் SLAASMB கவனம் செலுத்தியுள்ளது. இப்பரிசோதனைளின் கண்டுபிடிப்புக்களை SLAASMB's website://slaasmb.gov.lk இல் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

2019 இல் நடாத்தப்பட்ட கருப்பொருள் ஆய்வுகள்

சிக்கலான வியாபார கட்டமைப்புகள் குழப்பமான தொடர்பு வலையமைப்புகளையும் கொடுக்கல் வாங்கல்களையும் சம்பந்தப்பட்ட பிரிவினரிடையே உருவாக்குவதன் காரணமாக SLAASMB 2019 இல் கருப்பொருளுடன் தொடர்பான துறைகளில் கவனம் செலுத்தியது. SLAASMB குறித்த கருப்பொருளின் மீது 4 கணக்காய்வு நிறுவனங்களால் நடாத்தப்பட்ட 12 கணக்காய்வுச் செயற்பாடுகளின் மீதான கருப்பொருள் ஆய்வினை நடாத்தியது. 2019 இல் நடாத்தப்பட்ட கருப்பொருள் ஆய்வு தொடர்பிலான அறிக்கைகள் முடிவடையும் செயற்பாட்டில் உள்ளது.

6. பரந்த அளவிலான கணக்காய்வு தர மீளாய்வுகள் (AQR)

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் இயற்றப்பட்ட சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்ற தேவை உணரப்பட்டதன் காரணமாகவும், அரசாங்கத்தின் மூலதனச் சந்தை அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு அங்கமாகவும், 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தினை திருத்தியமைப்பதற்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. குறித்த திருத்தமானது குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் (SBEs) நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்யும் கணக்காய்வாளர்களுக்கான தரக் கட்டுப்பாடு 1 மீதான இலங்கை தரக் கட்டுப்பாட்டிற்கான நியமங்களை கட்டாயமாக்கும் (SLSQC1) திருத்தத்தினையும் உள்ளடக்கியிருந்தது.

1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டம் திருத்தியமைக்கப்படும் செயன்முறையில் இருந்த போது, SLSQC1 இனது எதிர்பார்ப்புகளுடனான தமது இணக்கப்பாட்டினை ஆராய்வதற்காக சுயமாக முன்வருமாறு கணிசமான எண்ணிக்கையான குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களின் கணக்காய்வினை மேற்கொள்கின்ற கணக்காய்வு நிறுவனங்களுக்கு SLAASMB வேண்டுகோள் விடுத்தது. இத் தரத்தினை மையமாகக் கொண்ட ஆய்வு உத்தியின் மூலம் நிறுவனத்தின் கணக்காய்வுத் தரத்தினை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

நான்கு நிறுவனங்களுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோலுக்கான பதிலாக ஏர்னஸ்ட் அன்ட் யங் மற்றும் KPMG ஆகிய நிறுவனங்கள் முன்வந்து SLAASMB இன் நிறுவனம் சார்ந்த தர ஆய்விற்காக சுயமாக ஒத்துழைத்தன. நிறுவனம் சார்ந்த தர ஆய்வினை அமுல்படுத்துவதன் முதல் கட்டமாக, இரண்டு நிறுவனங்களும் "உயர்ந்த குரலும் கணக்காய்வுத் தரமும்" எனும் தலைப்பின் கீழ் ஆய்வு செய்யப்பட்டன. 2018 இல் ஆரம்பமான ஆய்வானது தரவு திரட்டல் மற்றும் பகுப்பாய்வுகளுடன் 2019 இலும் தொடர்ச்சியாக நடைபெற்றது. எவ்வாறாயினும் ஆய்வுகளின் களச் செயற்பாடுகள் யாவும் நிறைவடைந்துள்ளதுடன், அறிக்கைகள் 2020 இல் வெளியிடப்படுவதற்கான ஆயத்த நிலையில் உள்ளன.

7. எதிர்காலக் குறிக்கோள்

SLAASMB கணக்காய்வுச் சந்தையின் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில், அவதானிப்புக் கடிதங்கள் மற்றும் கருப்பொருள் ஆய்வுகள் மீதான அறிக்கைகளினூடாக தொடர்பு கொள்வதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வினை மேம்படுத்துவதற்காக நிறுவனங்களை ஊக்குவிக்கும் நோக்கில் முறையான கணக்காய்வு செயன்முறையையும் கருப்பொருள் ஆய்வுகளையும் தொடர்ச்சியாக மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

IFIAR இனால் மேற்கொள்ளப்படும் வருடாந்த ஆய்வில், கணக்காய்வு தொடர்பான அளவீட்டு மாற்றங்கள், அவதானிப்புகள் தொடர்பால் முன்வைப்பதற்கும், 2019லிருந்து 4 வருடங்களுக்கு 25%க்கும் குறைவான அவதானிப்புகள் தொடர்பிலும் SLAASMB வெளிப்பாடுகளை முன்வைக்க தீர்மானித்துள்ளது.

இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபையின் செயலாற்றலை மேம்படுத்துவதற்காக பின்பற்றப்பட வேண்டிய குறுங்கால மற்றும் நடுத்தர கால நடவடிக்கைகள்

நிறுவன செயலாற்றல் மற்றும் அதன் தொடர்பான சிக்கல்கள்	திட்டமிடப்பட்ட குறுங்கால நடவடிக்கைகள்	திட்டமிடப்பட்ட நீண்டகால நடவடிக்கைகள்
1. சிறிய வியாபாரம் என்ற வரைவிலக்கனத்திற்குரிய சகல நிறுவனங்களும் மேவுகை செய்யப்படக்கூடிய வகையில் விரிவுபடுத்துவதற்காக நிதிக்கூற்றுக்களைப் பெற்றுக்கொள்ளல்	• சிறிய வியாபாரங்களை இனங்காண்பதற்காக ஒவ்வொரு ஒழுங்கமைப்பாளர்களினால் வெளியிடப்பட்ட பின்தொடர் பட்டியல் • வியாபார நிறுவனங்கள், சிறிய வியாபார நிறுவனங்களுக்கான நியதிகளை நிறைவேற்றியுள்ளதா என ஆராய்ந்து இனங்காணப்பட்ட நிறுவனங்கள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளை எடுத்தல். • இணை ஒழுங்குபடுத்துனர்களின் அக்கறை செலுத்தும் தரப்பினருக்கு நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்கும் தேவைப்பாடு தொடர்பாக தெரியப்படுத்தல் • பத்திரிகைகளிலும் இணையத்தளத்திலும் அன்றாடம் வெளியீடுகளை பிரசுரித்தல்	அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய சட்டத்தின் ஊடாக இது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.
நிதிக்கூற்றுக்களை மீளாய்வு மேவுகையை விரிவுபடுத்தல்	• நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக ஆரம்ப மீளாய்வொன்றை நடாத்துவதற்காக கூடுதலாக வெளிவாரி மீளாய்வாளர்களை தொடர்புபடுத்தல். • நிதிக்கூற்றுக்கள் மீளாய்வினை பூர்த்தி செய்வதற்காக தற்போதைய பதவியணியினருக்கு உதவி புரிவதற்காக ஈடுபடுத்துதல் • குறைந்த ஆபத்துள்ள நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கருப்பொருள் ரீதியான நிதிக்கூற்றுக்கள் மீளாய்வு மேற்கொள்ளல்	• மீளாய்வு செய்வதற்கு மிகவும் பொருத்தமான நிதிக் கூற்றுக்கள் அளவினை பரிந்துரைப்பதற்கு மற்றும் சர்வதேச ரீதியாக சிறந்த பயன்பாட்டினைக் கருத்திற் கொண்டு மிகவும் சிறந்த நிதிக்கூற்றுக்கள் மீளாய்வு பொறிமுறையொன்றை பரிந்துரைப்பதற்கு மதியுரையாளர் ஒருவரை பரிந்துரைத்தல் • கணக்காளர்கள் கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக சிறந்த அறிவுள்ள பட்டயக் கணக்காளர்களை ஆட்சேர்ப்பதற்காக உரித்தாகும் ஆட்சேர்ப்பு நடைமுறையின் சம்பள அளவுகள் மற்றும் அனுபவம் தொடர்பாக உள்ள சிக்கல்கள் தொடர்பாக நிதி அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் என்பற்றுட்ன கலந்துரையாடி காணப்படும் அனைத்து வெற்றிடங்களையும் திறமை மற்றும் அனுபவமுள்ள பதவியணியினரை ஆட்சேர்த்தல்
திட்டமிடப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளை நடாத்துதல்	• கணக்காய்வு பரிசோதனைகளின் கவனத்தை செலுத்தும் துறைகளைக் குறைத்தல • கணக்காய்வு பரிசோதனைகளை நடாத்துவதற்காக காலத்தை குறைப்பதற்காக குறைந்த அளவிலான நிதிக்கூற்றுக்கள் மீளாய்வு செய்தல	• கணக்காளர்கள் கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக சிறந்த அறிவுள்ள பட்டயக் கணக்காளர்களை ஆட்சேர்ப்பதற்காக உரித்தாகும் ஆட்சேர்ப்பு நடைமுறையின் சம்பள அளவுகள் மற்றும் அனுபவம் தொடர்பாக உள்ள சிக்கல்கள் தொடர்பாக நிதி அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் என்பன செயற்பட்டு காணப்படும் அனைத்து வெற்றிடங்களையும் திறமை மற்றும் அனுபவமுள்ள பதவியணியினரை ஆட்சேர்த்தல்

இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபையின் செயலாற்றலை மேம்படுத்துவதற்காக பின்பற்றப்பட வேண்டிய குறுங்கால மற்றும் நடுத்தர கால நடவடிக்கைகள்

நிறுவன செயலாற்றல் மற்றும் அதன் தொடர்பான சிக்கல்கள்	**திட்டமிடப்பட்ட குறுங்கால நடவடிக்கைகள்**	**திட்டமிடப்பட்ட நீண்டகால நடவடிக்கைகள்**
அனுபவமுள்ள பதவியணியினரை சேர்த்துக் கொள்வதில் பலவீனங்கள் புதிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 7 வெற்றிடங்கள் தவிர காணப்படும் ஊழியர் எண்ணிக்கையில் 05 வெற்றிடங்கள் காணப்படுகின்றது.	பொருத்தமான சம்பள அளவொன்று அங்கீகரிக்கப்படும் வரை பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கும் தரித்து வைப்பதற்கும் செயற்பாடொன்றாக 2009 ஆம் ஆண்டின் போது சம்பள மற்றும் ஊழியர் ஆணைக்குழுவனால் அங்கீகரிக்கப்பட்டதன் பிரகாரம் தொழில் தகைமையுள்ள பதவியணினருக்கு அதிகரித்த ஊக்குவிப்பு படிகளை செலுத்துவதற்கு நிதி அமைச்சினதும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது.	• சிறந்த பட்டயக் கணக்காளர்களை ஆட்சேர்ப்பதற்கும் தரித்து வைப்பதற்கும் புதிய சம்பளக் கட்டமைப்பொன்றுக்காக நிதி அமைச்சின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல் உலக வங்கியால் விநியோகிக்கப்பட்ட நியமங்கள் மற்றும் குறியீடுகள் (ROSC) கணக்கீடு மற்றும் கணக்காய்வு 2015 தொடர்பான அறிக்கையினதும் ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் 2020 யூன் மாதத்தின் போது வழங்கப்பட்ட இலங்கை மூலதன சந்தைகளின் மதிப்பீட்டு அறிக்கையின் துறைசார் பதவியணியினருக்கு புள்ளிகள் அடிப்படையில் சம்பளம் வழங்கும் முறையின் தேவைப்பாடு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
முகாமைத்து தகவல் முறைமையொன்று (MIS) மற்றும் தொடர்ச்சியான வியாபாரத் திட்டமொன்று இல்லாமை	தகவல் தொடர்பான முறையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மீண்டும் பெற்றுக் கொள்ளும் நடைமுறையுடன் எக்செல் மற்றும் மைக்ரோசொப்ட் நழைவினுள் சரியாக பேணிச் செல்லல	தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ தகவல் முறைமையின் அபிவிருத்தி தொடர்பில் இலங்கை தகவல் மற்றும் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனம் (ICTA) மதியுரையாளராக செயற்படுத்துதல்

செயலாற்றல் புள்ளிப் படிவம்

இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை செயலாற்றல் புள்ளிப் படிவத்தை அதன் வருடாந்த செயலாற்றல் திட்டத்தை தயாரிப்பதற்கு பயன்படுத்துகின்றது. 2019 ஆம் ஆண்டின் திட்டம், 2019 ஆம் ஆண்டின் உள்ளவாறான மற்றும் 2020ஆண்டிற்கான திட்டம் கீழே தரப்பட்டுள்ளன

நிதிக்கூற்றுக்களைப் பயன்படுத்துவோர் : *எமது தொலை நோக்கை அடைய, நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோர் எம்மை எவ்வாறு நோக்குவர்?*

இலக்கு	அளவீடுகள்	2019 திட்டம்	2019 உள்ளவாறான		2020 திட்டம்
			எண்ணிக்கை	திட்டத்தின் சதவீதமாக %	
குறித்துரைக் கப்பட்ட வியாபார முயற்சி களில் உண்மையானதும் நியாயமானதுமான நிரூபணம் பிரதிபலிக்கப்படுதல்	இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வு செய்யப்பட்டதா என உறுதிப்படுத்துவதற்காக நிதிக்கூற்றுக் களை மீளாய்வு செய்தல்	725 நிதிக்கூற்றுத் தொகுதிகள்	720 நிதிக் கூற்றுத் தொகுதிகள் (குறிப்பு 1)	99	725 நிதிக்கூற்றுத் தொகுதிகள் (குறிப்பு 2)
		- 50 கணக்காய்வு கள் (15 கருப் பொருள் ஆய்வுகள் உள்ளடங்களாக)	- 45 கணக்காய்வுகள் (12 கருப் பொருள் ஆய்வுகள் உள்ளடங்களாக) (குறிப்பு 1)	90	50 கணக்காய்வுகள் (20 கருப் பொருள் ஆய்வுகள் உள்ளடங்களாக) (குறிப்பு 2)
	இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய கணக்காய்வு செய்யப்பட்டதா என உறுதிப்படுத்து வதற்காக பரீட்சித்தல்	- 2 நிறுவனங்களின் விரிவான கள ஆய்வுகள	- 2 நிறுவனங்களின் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. 2018 இல் நடாத்தப்பட்ட விரிவான கள ஆய்வுகள் (குறிப்பு 3)		

ஒழுங்குபடுத்தலுக்கு உட்பட்ட நிறுவனத்தின் நோக்கு: *எமது இலக்கை நிறைவேற்றிக்கொள்வதற்காக ஒழுங்குபடுத்தலுக்காக உட்பட்ட நிறுவனங்களை நாம் எவ்வாறு நோக்க வேண்டும்?*

இலக்கு	அளவீடுகள்	2019 திட்டம்	2019 உள்ளவாறான		2020 திட்டம்
			எண்ணிக்கை	திட்டத்தின் சதவீதமாக %	
நிதிக்கூற்றுக்களை சேகரித்தல்	கிடைக்கப் பெற்ற நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை	1,579	1,635 (குறிப்பு 4) (1,521 குறிப்பான தொழில் முயற்சிகள்)	103	1,608

செயலாற்றல் புள்ளிப் படிவம்

உள்ளக செயற்பாட்டு நோக்கு: எமது தரப்பினரைத் திருப்திப்படுத்துவதற்காக எவ்வாறான உள்ளக செயற்பாடுகளை தொடர்புபடுத்தப்பட வேண்டும்?

இலக்குகள்	அளவீடுகள்	2019 திட்டம்	2019 உள்ளவாறான		2020 திட்டம்
			எண்ணிக்கை	திட்டத்தின் சதவீதமாக %	
ஊழியர் செயலாற்றல்	ஆண்டிற்காக இலக்கிடப்பட்ட செயலாற்றுகைப் புள்ளிகளை அடைந்து கொள்ளல்	27,858	27,253 (குறிப்பு 5)	98	24,492
அறிவை மேம்படுத்துவதன் மூலம் தற்போதைய செயற்பணி இலக்குகளை அடைவதற்கான தடைகளை நீக்குதல்	வாராந்த கற்கைச் செயற்பாடுகள் (உள்ளக ரீதியாக)	48 நியமங்கள் தொடர்பாக சமர்ப்பணங்கள்	41 (குறிப்பு 1)	85	48
உரிய காலத்தில் பதிலிறுக்கல்	கிடைத்த முறைப்பாடுகள், கோரப்பட்ட தெளிவு படுத்தல்கள் மற்றும் பெறப்பட்ட தகவல்கள் தொடர்பாக கவனம் செலுத்துதல்	பெற்ற திகதி மற்றும் பொறுப்பேற்றல் திகதி நீங்கலாக 5 நாட்களுக்குள்	கிடைக்கப்பெற்ற திகதி மற்றும் பதிலளிக்கப்பட்ட திகதி அல்லாமல் 5 நாட்கள்	-	கிடைக்கப் பெற்ற திகதி மற்றும் பதிலளிக்கப் பட்ட திகதி அல்லாமல் சராசரியாக 5 நாட்கள்

குறிப்பு 1

2019 இல், கல்வி தொழிநுட்ப பணிப்பாளர் பதவியொன்று வெற்றிடமாக காணப்பட்டதுடன் இரண்டு உதவி தொழிநுட்ப பணிப்பாளர் பதவிகள் ஆண்டின் கடைசி மூன்று மாதங்கள் வெற்றிடங்களாக காணப்பட்டன. அதன் அடிப்படையில், மீளாய்வுகளிற்காக குறித்துரைத்த வியாபாரங்களை (SBE) தெரிவு செய்வதில் சிக்கல்கள் குறைந்த தனியார் நிறுவனங்களின் மீது அதிக கவனம் செலுத்தப்பட்டது. பதவியணியினர் குறைபாட்டின் காரணமாக இலக்குகளை அடைவதில் இருக்கும் சிரமங்கள் காரணமாக இரண்டு பிரதி பணிப்பாளர் நாயகங்களும் மீளாய்வு செயற்பாடுகளை மேற்கொள்வதில் ஈடுபட்டிருந்ததோடு மேலும் சிக்கலான மீளாய்வுகள் அடுத்த ஆண்டிற்கு பிற்போடப்பட்டது.

குறிப்பு 2

தற்பொழுது வெற்றிடமாக காணப்படும் மூன்று தொழிநுட்ப பதவிகளும் 2020 ஏபரல் மாதத்தின் போது நிறப்பப்பட்டிருக்கும் எனும் எதிர்பார்ப்பில் 2020 இன் இலக்குகள் அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த் வெற்றிடங்களை நிறப்புவதற்கு இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை SLAASMB தவறினால், இலக்கானது விகிதாசாரமாக குறைவடையும்.

குறிப்பு 3

பதவியணியினர் பற்றாக்ககுறை காரணமாக நிறுவன ரீதியான விரிவான பரிசோதனைகளை மேற்கொள்வது 2018 ஆம் ஆண்டின் அறிக்கைகளைத் தயாரிப்பதால் மட்டுப்படுத்தப்பட்டது.

குறிப்பு 4

பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தினால் முன்னைய ஆண்டுகளுக்கான வெளியிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கிடைத்தன

குறிப்பு 5

செயற்றிறன் புள்ளிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வேலைகளின் தன்மை மற்றும் அளவை அடிப்படையாகக் கொண்டவை. பிரச்சினைகளின் சிக்கல் தன்மை மற்றும் சாத்தியமான பிரச்சினைகள் இனங்காணப்பட்டன. இதன் விளைவாக தொழிநுட்ப கலந்துரையாடல்களுக்கு அதிக அளவு காலம் செலவிட நேர்ந்தது.

2019 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கக்கூடிய குறித்துரைக்கப்பட்ட வணிக நிறுவனங்களின் (SBE's) பட்டியல்

	குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகள்	நிதியாண்டு முடிவில்
1	ஏ பீ ஒட்டோமேஸன் (பிரை) லிமிடட்	2018 மார்ச் 31
2	ஏ.எப். ஜோன்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் சிலோன் (பிரை) லிமிடட்	2018 மார்ச் 31
3	ஏ எஸ் சதூர் அன்ட் கம்பனி (பிரை) லிமிடட்	2018 மார்ச் 31
4	அபான்ஸ் என்வயர்மன்டல் சேவிஸ் (பிரை) லிமிடட்	2017 திசெம்பர் 31
5	அக்சஸ் சிவிமெக் (பிரை) லிமிடட்	2018 மார்ச் 31
6	ஏஸ் கொன்டேனர் ரெபயார்ஸ் (பிரை) லிமிடட்	2018 மார்ச் 31
7	ஏஸ் கொன்டேனர் டேமினல் (பிரை) லிமிடட்	2018 மார்ச் 31
8	ஏஸ் எக்ஸ்போட்ஸ் (பிரை) லிமிடட்	2018 மார்ச் 31
9	ஏசீஎல் மெடல்ஸ் அன்ட் அலோய்ஸ் (பிரை) லிமிடட்	2019 மார்ச் 31
10	ஏசீஎல் பிளாஸ்ரிக் பீஎல்சீ	2019 மார்ச் 31
11	ஏசீஎம்ஈ பிரின்டிங் அன்ட் பெக்கேஜிங் பீஎல்சீ	2019 மார்ச் 31
12	அகுவா பெக்கேஜிங் (பிரை) லிமிடட்	2019 மார்ச் 31
13	அகியுவிடி ஸ்டொக் புரோகர்ஸ் (தனி) லிமிடட்	2018 திசெம்பர் 31
14	அடம்ஜீ மார்க்கட்டிங் (தனி) லிமிடட்	2018 மார்ச் 31
15	அடம்ஜீ மார்க்கட்டிங் (தனி) லிமிடட்	2019 மார்ச் 31
16	அட்வான்டிஸ் பிரைட் (தனி) லிமிடட்	2018 மார்ச் 31
17	அகிஓ டுபேக்கோ புரொசெசிங் கம்பனி (தனி) லிமிடட்	2018 திசெம்பர் 31
18	ஏஜஏ இன்சூரன்ஸ் லங்கா பீஎல்சீ	2018 திசெம்பர் 31
19	ஏயாபோட் ஏவியேஷன் சேர்விசஸ் (சிரிலங்கா) லிமிடட்	2017 திசெம்பர் 31
20	எயார்போட் அன்ட் காரட்ன் லெஷர் (பிரை) லிமிடட	2018 மார்ச் 31
21	எய்கன் ஸ்பென்ஸ் அபெரல்ஸ் (பிரை) லிமிடட்	2018 மார்ச் 31
22	எய்கன் ஸ்பென்ஸ் ஏவியேஷன் (பிரை) லிமிடட்	2019 மார்ச் 31
23	எய்கன் ஸ்பென்ஸ் சீ அன்ட ரீ இன்வெஸ்மன்ட் (பிரை) லிமிடட்	2018 மார்ச் 31
24	எய்கன் ஸ்பென்ஸ் கார்கோ (பிரை) லிமிடட்	2019 மார்ச் 31
25	எய்கன் ஸ்பென்ஸ் ஹொட்டெல் ஹோல்டிங் பீஎல்சீ	2018 மார்ச் 31
26	எய்கன் ஸ்பென்ஸ் ஹொட்டெல் ஹோல்டிங் பீஎல்சீ	2019 மார்ச் 31
27	எய்கன் ஸ்பென்ஸ் ஹொட்டெல்ஸ் லிமிடட்	2018 மார்ச் 31
28	எய்கன் ஸ்பொன்ஸ் பீஎல்சீ	2019 மார்ச் 31
29	எய்கன் ஸ்பென்ஸ் போட்ஸ் இன்டர் நஷனல் லிமிடட்	2019 மார்ச் 31
30	எய்கன் ஸ்பென்ஸ் பிரின்டிங் அன்ட் பெக்கேஜிங் (பிரை) லிமிடட்	2019 மார்ச் 31
31	எய்கன் ஸ்பென்ஸ் ஷிபிங் லிமிடட்	2019 மார்ச் 31
32	அல்கொ இன்டஸ்ரீஸ் (பிரை) லிமிடட்	2019 மார்ச் 31
33	அலியன்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட்	2018 திசெம்பர் 31
34	அலுமெக்ஸ் பீஎல்சீ	2019 மார்ச் 31
35	அமானா கன்டொர் ஷரீயா பலன்ஸ்ட் பன்ட்	2018 திசெம்பர் 31
36	அமானா கன்டொர் ஷரீயா இன்கம் பன்ட்	2017 திசெம்பர் 31
37	அமானா கெப்பிட்டல் லிமிடட்	2017 திசெம்பர் 31
38	அமானா தகாபுல் லைப் பிஎல்சீ	2018 திசெம்பர் 31
39	அமானா வெல்த் லிமிடட்	2017 திசெம்பர் 31
40	அமாயா லெஷர் பிஎல்சீ	2019 மார்ச் 31
41	அனொரிச் லங்கா (பிரை) லிமிடட்	2019 மார்ச் 31
42	ஆர்பிகோ ஆட்டரக்ஷியா கேஷ் மனேஜ்மன்ட் டிரஸ்ட் பண்ட்	2018 மார்ச் 31
43	ஆர்பிகோ ஆட்டரக்ஷியா எஸ் அன்ட் பீ எஸ்எல் 20 இன்டெக்ஸ் பன்ட்	2018 மார்ச் 31
44	ஆர்பிகோ ஆட்டரக்ஷியா ஸ்ரீலங்கா பொன்ட் பன்ட்	2018 மார்ச் 31
45	ஆர்பிமோல்ஸ் டிவொலப்மன்ட் கம்பனி (பிரை) லிமிடட்	2018 மார்ச் 31
46	ஆர்பிடலியன் கம்பக்ட் சோல்ஸ் (பிரை) லிமிடட்	2018 மார்ச் 31

2019 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கக்கூடிய குறித்துரைக்கப்பட்ட வணிக நிறுவனங்களின் (SBE's) பட்டியல்

	குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகள்	நிதியாண்டு முடிவில்
47	அஸ்கொட் ஹோல்டிங் பீஎல்சீ	2018 மார்ச் 31
48	ஏசியா கெப்பிட்டல் பீஎல்சீ	2018 மார்ச் 31
49	ஏசியன் ஹொட்டெல் அன்ட் புரொபட்டீஸ் பீஎல்சீ	2019 மார்ச் 31
50	ஏசியன் பெயின்ட்ஸ் (லங்கா) லிமிடட்	2018 மார்ச் 31
51	ஏசியன் டயர்ஸ் (பிரை) லிமிடட்	2018 மார்ச் 31
52	அஸ்ரு அல்பா பன்ட்	2018 மார்ச் 31
53	அஸ்ரு மணி மார்கட் பன்ட்	2018 மார்ச் 31
54	பன்செய் ரோயல் ரிசோட்ஸ் ஹிக்கடுவ பீஎல்சீ	2018 மார்ச் 31
55	பெர்ஜயா மௌன்ட் ரோயல் பீச் ஹொட்டெல் லிமிடட்	30 ஏப்ரல் 18
56	போகல்ல கிரபைட் லங்கா பீஎல்சீ	2018 திசெம்பர் 31
57	பீபிபிஎல் ஹோல்டிங்ஸ் பீஎல்சீ	2019 மார்ச் 31
58	பிரென்டிக்ஸ் டெக்டைல்ஸ் லிமிடட்	2018 மார்ச் 31
59	பிரேபுரூக் ரெசிடன்ஷல் டவர்ஸ் (பிரை) லிமிடட்	2018 மார்ச் 31
60	புரூக் பொன்ட் சிலோன் (பிரை) லிமிடட்	2018 திசெம்பர் 31
61	பிரவுன்ஸ் பீச் ஹொடேல்ஸ் பீஎல்சீ	2019 மார்ச் 31
62	பிரவுன்ஸ் குரூப் இன்டஸ்ரீஸ் (பிரை) லிமிடட்	2019 மார்ச் 31
63	பிரவுன்ஸ் இன்டஸ்ரியல் பார்க் லிமிடட்	2019 மார்ச் 31
64	பிரவுன்ஸ் இன்வெஸ்மன்ட பீஎல்சீ	2016 மார்ச் 31
65	பிரவுன்ஸ் இன்வெஸ்மன்ட பீஎல்சீ	2017 மார்ச் 31
66	பிரவுன்ஸ் இன்வெஸ்மன்ட பீஎல்சீ	2018 மார்ச் 31
67	பிரவுன்ஸ் தேமல் இன்ஜினியரிங் (பிரை) லிமிடட்	2019 மார்ச் 31
68	பெய்ரு வோடஸ் கன்சிமர் புரொடக்ட் சேர்விசஸ் லங்கா (பிரை) லிமிடட்	2018 திசெம்பர் 31
69	சீ ரீ புரொபட்டீஸ் ஜீ எஸ் (பிரை) லிமிடட்	2018 மார்ச் 31
70	சீ.டப். மக்கீ பீஎல்சீ	2018 மார்ச் 31
71	கெல் எக்ஸ்போட்ஸ் லங்கா (பிரை) லிமிடட்	2018 மார்ச் 31

	குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகள்	நிதியாண்டு முடிவில்
72	கம்சோ டிரேடிங் (பிரை) லிமிடட்	2018 மார்ச் 31
73	கன்டொர் அசட் மனேஜ்மன்ட் (பிரை) லிமிடட்	2017 திசெம்பர் 31
74	கன்டொ இக்விட்டீஸ் லிமிடட்	2018 திசெம்பர் 31
75	கன்டெர் கீரோத் பன்ட்	2017 திசெம்பர் 31
76	கன்டெர் மணி மார்கட் பன்ட்	2017 திசெம்பர் 31
77	கன்டெர் ஒபர்சுனிட்டி பன்ட்	2018 திசெம்பர் 31
78	கபிடல் அலையன்ஸ் பாட்னர்ஸ் லிமிடட்	2019 மார்ச் 31
79	கபிடல் அலையன்ஸ் பலன்ஸ் பன்ட்	2018 மார்ச் 31
80	கபிடல் அலையன்ஸ் கோப்பரேட் டெபிட் அன்ட் கில்ட் டிரேடிங் பன்ட்	2018 மார்ச் 31
81	கபிடல் அலையன்ஸ் கோப்பரேட் டிரெஷரி பன்ட்	2018 மார்ச் 31
82	கபிடல் அலையன்ஸ் கில்ட் பன்ட்	2018 மார்ச் 31
83	கபிடல் அலையன்ஸ் கில்ட் மார்கட் பன்ட்	2018 மார்ச் 31
84	கபிடல் அலையன்ஸ் கில்ட் டிரேடிங் பன்ட்	2018 மார்ச் 31
85	கபிடல் அலையன்ஸ் ஹை யீல்ட் பன்ட்	2018 மார்ச் 31
86	கபிடல் அலையன்ஸ் இன்கம் பன்ட்	2018 மார்ச் 31
87	கபிடல் அலையன்ஸ் இன்வெஸ்ட்மன்ட் லிமிடட்	2018 மார்ச் 31
88	கபிடல் அலையன்ஸ் இன்வெஸ்ட்மன்ட் கிரேட் பன்ட்	2018 மார்ச் 31
89	கபிடல் அலையன்ஸ் மீடியம் ரிஸ்க் டெப்ட் பன்ட்	2018 மார்ச் 31
90	கபிடல் அலையன்ஸ் வென்டிடேடிங் இகுயிட்டி பன்ட்	2018 மார்ச் 31
91	கபிடல் அலையன்ஸ் செக்கியுரிட்டீஸ் (பிரை) லிமிடட்	2018 மார்ச் 31
92	கபிடல் அலையன்ஸ் செக்கியுரிடீஸ் (பிரை) லிமிடட்	2019 மார்ச் 31
93	கபிடல் சுசெய் ஏசியா லிமிடட்	2018 திசெம்பர் 31
94	கபிடொ கிரெசென்டஸ் (பிரை) லிமிடட்	2019 மார்ச் 31

2019 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கக்கூடிய குறித்துரைக்கப்பட்ட வணிக நிறுவனங்களின் (SBE's) பட்டியல்

	குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகள்	நிதியாண்டு முடிவில்
95	கபிடெல் ஹொட்டெல்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடட்	2019 மார்ச் 31
96	கார்பொடெல்ஸ் (பிரை) லிமிடட்	2018 மார்ச் 31
97	கார்கில்ஸ் பூட் புரொசெசர்ஸ் (பிரை) லிமிடட்	2019 மார்ச் 31
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்கொன்றாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை



சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுகள் கணக்காய்வாளரின் அறிக்கையின் திகதி வரை பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகள் அடிப்படையில் ஆகும்.எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அடிப்படையில் தொடர்ந்தியங்கும் நிலையினை முடிவுறுத்தப்படலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாக தரப்பினருடன் தொடர்புடைய தரப்பினர் தெரியப்படுத்தப்பட்டனர்.

கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையின் போது வெளிப்படுதப்பட்ட வகையில் உரிய நிதி அறிக்கைகள் சபையினால் பேணப்பட்டிருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன எனவும்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது

பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டதன் மூலம் கீழே காட்டப்பட்டவற்றை குறிப்பிடுவதற்கு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் ஆளுகை சபை உறுப்பினர் சபையுடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமை அல்லாமல் தொடர்புட்டுள்ளதாக

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது சபையின் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகாதுள்ளமையை

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சபையின் அதிகாரங்கள் கடமைகள், மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளதாக.

1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் சட்டத்தின் கீழ் நிறுவகத்தினால் பின்பற்றப்படுகின்ற நியமங்கள், சட்டத்தின் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ள அனைத்து வியாபார நிறுவனங்களுக்கு பொருந்தும். இதன் பிரகாரம் சபையின் பிரதான செயற்பாடு குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க செயற்படுகின்றதா என்பது தொடர்பாக அவதானிப்பதாகும். எவ்வாறாயினும் சபையினால் பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2007 இன் 07 ஆம் இலக்க சட்டம் அமுலாக்கப்பட்டதன் பின்னர் குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகளை இனங்காண்பதற்கு முறையான பொறிமுறையொன்றை சபையினால் அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்திவில்லையெனவும்

3 ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள் விடயங்கள்

(அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இனங்காணப்பட்ட 1,608 குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகளிமிருந்து முன்னைய ஆண்டிற்குரிய 548 நிதிக்கூற்றுக்களுடன் 1,635 நிதிக்கூற்றுக்கள் சபைக்கு கிடைத்திருந்தன. எவ்வாறாயினும் எஞ்சிய 87 குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து நிதிக்கூற்றுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2019 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற நிதிக்கூற்றுக்களுக்கு இடையே சபையால் 44 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 699 குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகளிடமிருந்து கிடைத்த 720 நிதிக்கூற்றுக்களை மாத்திரம் மீளாய்வு செய்திருந்தன. எவ்வாறாயினும் சபையினால் மீளாய்வு செய்யப்பட்ட 26 நிதிக்கூற்றுக்கள் சபையால் இனங்காணப்பட்ட

கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை

குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் அட்டவணையுன் இணங்கவில்லை. அதன் பிரகாரம் தமது விடயப்பரப்பிற்கு கீழ் வரும் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களை சபையால் இனங்காண தவறியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) நியமங்களுக்கு இணங்கவில்லையென்பதற்குரிய குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களுக்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதும் பிரதானமாக ஆலோசணைகளை வழங்குவதற்கு சபைக்கு சட்டரீதியான அதிகாரமொன்று இல்லாமை காரணமாக சில குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் முகாமைத்துவம் அவற்றை சரி செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கவில்லை. ஆதலால் சபையின் கண்காணிப்பு செயற்பாடு இலாபத்தன்மை சிக்கலுக்குரியதாகும்.

(ஈ) இனங்காணப்பட்ட 1,608 குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களில் மீளாய்வாண்டில் 45 கணக்காய்வுப் பரிசோதனைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது இனங்காணப்பட்ட நிறுவனங்களில் 3% சதவீதத்த பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அது முன்னைய ஆண்டு மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளில் 50 மற்றும் 100 உடன் ஒப்பிடும் போது பரிசோதனையின் அளவு குறைவடைந்திருந்தது.

(உ) குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் கணக்காய்வில் ஈடுபட்டுள்ள கணக்காய்வு கம்பனியால் தரக்கட்டுப்பாட்டு தேவைப்பாடுகளுடன் இணங்குதல் தொடர்பாக கண்காணிப்பதற்கு சபையால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபைக்கான முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை (எம்ஐஎஸ்) திட்டமிடல் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் 2020 இறுதி வரை மீளாய்வு செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு சபையால் பொருத்தமான நடைமுறையொன்று செயற்படுத்தியிருக்கவில்லை.

(எ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 20 வெற்றிடங்களும் ஒப்பந்த அடிப்படையில் 03 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன் (அதில் 04 வெற்றிடங்கள் சிரேஷ்ட நிலைக்குரியதுடன் தொடர்புடையதாக இருந்தன. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்பட்ட சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலை பதவிகள் 03 இற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.



டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான தற்போதைய நிலைமை

2021 பெப்ரவரி 21 ஆந் திகதி கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள்	**முகாமைத்துவத்தின் பொறுப்பேற்றல்**
2 ஆம் பிரிவு	
1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் சட்டத்தின் கீழ் நிறுவகத்தினால் பின்பற்றப்படுகின்ற நியமங்கள், சட்டத்தின் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ள அனைத்து வியாபார நிறுவனங்களுக்கு பொருந்தும். இதன் பிரகாரம் சபையின் பிரதான செயற்பாடு குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க செயற்படுகின்றதா என்பது தொடர்பாக அவதானிப்பதாகும். எவ்வாறாயினும் சபையினால் பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2007 இன் 07 ஆம் இலக்க சட்டம் அமுலாக்கப்பட்டதன் பின்னர் குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகளை இனங்காண்பதற்கு முறையான பொறிமுறையொன்றை சபையினால் அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.	சட்ட விதிகள் இல்லாத போதிலும், இலங்கையின் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை கிடைக்கக்கூடிய சிறந்த வசதிகளுக்குள் உண்மையிலேயே குறிப்பிட்ட வணிக நிறுவனங்களை அடையாளம் காணும் செயல்முறையை செயல்படுத்தியுள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் வரைவு அவதானிப்புகளுக்குரிய எங்களால் பதில் அளிக்கும் போது இச்செயற்பாடு தெளிவுபடுத்தப்பட்டது. அதன் பிரகாரம் 2021 பெப்ரவரி 21 ஆந் திகதி கணக்காய்வு அறிக்கையின் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரை உண்மையாவே சரியானதல்ல *(தொடர்புக்குரிய குறிப்பு அ)*
3 ஆம் பிரிவு	
(அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இனங்காணப்பட்ட 1,608 குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகளிடமிருந்து முன்னைய ஆண்டிற்குரிய 548 நிதிக்கூற்றுக்களுடன் 1,635 நிதிக்கூற்றுக்கள் சபைக்கு கிடைத்திருந்தன. எவ்வாறாயினும் எஞ்சிய 87 குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து நிதிக் கூற்றுக்களைப் பெற்றுக் கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்க வில்லை.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரை வரைவு அவதானிப்புக் கடிதத்திற்கு பதிலாக மேற்கூறிய அண்மித்த பின்தொடர் பொறிமுறையின் மூலம் மீதமுள்ள 87 குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகளிமிருந்து நிதிக்கூற்றுக்களைப் பெற இலங்கையின் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. எனவே, மீதமுள்ள 87 குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகளிடமிருந்து கணக்காய்வு அவதானிப்பாக நிதி கூற்றுக்களைப் பெற சபை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது உண்மையாகவே சரியானதல்ல *(தொடர்புக்குரிய குறிப்பு அ)*
(ஆ) 2019 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற நிதிக் கூற்றுக்களுக்கு இடையே சபையால் 44 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 699 குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகளிடமிருந்து கிடைத்த 720 நிதிக்கூற்றுக்களை மாத்திரம் மீளாய்வு செய்திருந்தன. எவ்வாறாயினும் சபையினால் மீளாய்வு செய்யப்பட்ட 26 நிதிக்கூற்றுக்கள் சபையால் இனங்காணப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் அட்டவணையுள் இணங்கவில்லை. அதன் பிரகாரம் தமது விடயப்பரப்பிற்கு கீழ் வரும் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களை சபையால் இனங்காண தவறியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	அதன் மூலம் மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் அறிக்கைகள் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவையாகவும் என்றும், தற்போதுள்ள குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் தகவல்கள் புதுப்பிக்கப்படவில்லை என்றும், குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களை அடையாளம் காண சபை தவறிவிட்டது என்று குறிப்பிடப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரை உண்மையாகவே சரியானதல்ல *(தொடர்புக்குரிய குறிப்பு அ)*

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான தற்போதைய நிலைமை

(இ) நியமங்களுக்கு இணங்கவில்லை யென்பதற்குரிய குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களுக்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதும் பிரதானமாக ஆலோசணைகளை வழங்குவதற்கு சபைக்கு சட்டரீதியான அதிகாரமொன்று இல்லாமை காரணமாக சில குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் முகாமைத்துவம் அவற்றை சரி செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கவில்லை. ஆதலால் சபையின் கண்காணிப்பு செயற்பாடு இலாபத்தன்மை சிக்கலுக்குரியதாகும்.	இந்த குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களுக்கு எதிராக சட்டரீதியாக கட்டளை வழங்குவதற்கு எந்தவொரு தேவைப்பாடும் இல்லாததால் பிரதானமாக ஆலோசணை வழங்குவதற்கு சபையின் சட்டரீதியான அதிகாரம் இல்லாத காரணத்தினால் சரிசெய்யம் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென குறிப்பிட்டமை உண்மையாகவே சரியானதல்ல மேலும் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனமொன்று தொடர்பாக மாத்திரம் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபைக்கு அறிவிக்கும் போது முகாமையால் சரிசெய்யும் செயற்பாடுகள எடுக்காத மேலும் சில குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் உள்ளதாக கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடுதல் சரியானதல்ல. *(தொடர்புக்குரிய குறிப்பு அ)*
(ஈ) இனங்காணப்பட்ட 1,608 குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களில் மீளாய்வாண்டில் 45 கணக்காய்வுப் பரிசோதனைகள் மாத்திரம் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் அது இனங்காணப்பட்ட நிறுவனங்களில் 3% சதவீதத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. அது முன்னைய ஆண்டு மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளில் 50 மற்றும் 100 உடன் ஒப்பிடும் போது பரிசோதனையின் அளவு குறைவடைந்திருந்தது.	கணக்காய்வு பரிசோதனை எண்ணிக்கை குறைவடைவதற்கு நியாயமான காரணமொன்று இல்லாத காரணமாக கணக்காய்வு அவதானிப்பில் அக்குறைவு காரணங்கள் குறிப்பிடாமல் அவற்றில் குறைவு இடம்பெற்றுள்ளது என்பது பொருத்தமல்ல. இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையால் ஒட்டுமொத்த கணக்காய்வு சந்தையில் சூழலை மேலும் மேம்படுத்துதல், கருப்பொருள் கணக்காய்வு பரிசோதனை அறிக்கைகளை வழங்குதல், சுயாதீன அடிப்படையில் நிறுவனமொன்றாக தரமான பரிசோதனைகளை மேற்கொள்ளல், கணக்காய்வாளர்களுக்கு தமது தரத்தை மேம்படுத்தும் பொருட்டு கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் தொடர்பாக துண்டுப்பிரசுரங்களை வழங்குதல் போன்ற கணக்காய்வு சந்தையை மேம்படுத்துவதற்கு காரணமாக இருந்ததுடன் வரையறுக்கப்பட்ட கணக்காய்வு பாரியளவு எண்ணிக்கையொன்று மீளாய்வு செய்வது இதன் மூலம் செயற்திறனாக இருக்கும். மேலும் அனைத்து குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் கணக்காய்வு மீளாய்வு செய்தல் நடைமுறை ரீதியில் மேற்கொள்ள முடியாமல் இருப்பதுடன் ஒட்டுமொத்த கணக்காய்வு சந்தையை மேம்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு மிகவும் செயற்திறனாக இருப்பதால் கணக்காய்வு பரிசோதனை 3% அளவினை குறிப்பிடுவது நியாயமான கருத்து தெரிவித்தல் அல்ல *(தொடர்புக்குரிய குறிப்பு அ)*
(உ) குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் கணக்காய்வில் ஈடுபட்டுள்ள கணக்காய்வு கம்பனியால் தரக்கட்டுப்பாட்டு தேவைப்பாடுகளுடன் இணங்குதல் தொடர்பாக கண்காணிப்பதற்கு சபையால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு நடவடிக்கைகளின் போது தர கட்டுப்பாட்டு தேவையை நிறைவேற்றுவதற்காக இலங்கையின் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபைக்கு சட்டத்தால் அதிகாரமளிக்கப்படாத போதும் எதிர்காலத்தில் (அதிகாரங்கள் வழியாக) தற்போது (தன்னார்வ அடிப்படையில்) தரக் கட்டுப்பாட்டு மீளாய்வினை மேற்கொள்வதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ள வேலையில் குறிப்பிட்ட வணிக நிறுவனங்களைத் கணக்காய்வு செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள கம்பனிகளால் தரக் கட்டுப்பாட்டுத் தேவைகளின் இணக்கத்தை மேற்பார்வையிடுவதற்காக சபையால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக் குறிப்பிட்டதில் எந்தவிதத்திலும் உள்ளவாறாக சரியானதல்ல. *(தொடர்புக்குரிய குறிப்பு அ)*

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான தற்போதைய நிலைமை

(ஊ) சபைக்கான முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை (எம்ஐஎஸ்) திட்டமிடல் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் 2020 இறுதி வரை மீளாய்வு செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு சபையால் பொருத்தமான நடைமுறையொன்று செயற்படுத்தியிருக்கவில்லை.	முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை இதுவரை செயல்படுத்தப்படவில்லை என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். எவ்வாறாயினும் வரைவு கணக்காய்வு அவதானிப்புக்குரிய இலங்கையின் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையினால் தெரிவிக்கப்பட்ட கருத்து தெரிவிப்பின் பிரகாரம் அத்தாமதம் இலங்கையின் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையின் கட்டுபாட்டிற்கு அப்பால் மேற்பட்ட காரணங்களால் இடம்பெற்றது. மேலும் முகாமைத்துவ தகவல் முறைமையொன்றாக அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் மீண்டும் ஆரம்பிப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை இது தொடர்பில் அக்கரை செலுத்தியுள்ளதுடன் அக்கரை இது தொடர்பாக ஆர்வமுள்ள அபிவிருத்தியாளர்களின் சம்மதத்தைப் பெறுவதற்கான செயற்பாட்டில் உள்ளது. *(தொடர்புக்குரிய குறிப்பு அ)*
(எ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 20 வெற்றிடங்களும் ஒப்பந்த அடிப்படையில் 03 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன் (அதில் 04 வெற்றிடங்கள் சிரேஷ்ட நிலைக்குரியதுடன் தொடர்புடையதாக இருந்தன. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்பட்ட சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலை பதவிகள் 03 இற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.	வரைவு கணக்காய்வு அறிக்கைக்கு இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையின் பொறுப்பேற்றலின் விளக்கத்தின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொண்ட அங்கீகாரத்தின் பேரில் இலங்கையின் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையினால் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், ஆதலால் 2019 சனவரி 17 ஆந் திகதி கடிதத்தின் மூலம் அவ்வாறான மூலம் அவ்வாறான ஆட்சேர்ப்பிற்காக இடமளிக்கப்பட்டிருக்கையில் அங்கீகாரமொன்று இல்லாமல் ஒப்பந்த அடிப்படையில் பதவியணியினர் நியமிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடுதல் உள்ளவாறாக சரியானதல்ல. *(தொடர்புக்குரிய குறிப்பு அ)*

குறிப்பு அ : *அதற்கு இணங்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்களுடன் கருத்துரைகளை உள்ளடக்குமாறு 2021 பெப்ரவரி 19 ஆந் திகதி கடிதமொன்று மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் கேட்கப்பட்டது.*

நிதி நிலைமைக் கூற்று

உள்ளவாறு	குறிப்பு	31-திசெ-19 ரூபா	31-திசெ-18 ரூபா
சொத்துக்கள்			
நடைமுறையல்லாத சொத்துக்கள்			
ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்	3	**11,318,497**	14,392,976
வைப்புக்கள்	4	**6,979,736**	6,979,736
		18,298,233	21,372,712
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்புக்கள்	5	**642,810**	698,514
பெறவேண்டிய கணக்ககுள்	6	**3,899,093**	3,029,089
காசு மற்றும் காசுக்கு சமமானவை	7	**1,128,025**	39,328
		5,669,928	3,766,931
மொத்த சொத்துக்கள்		**23,968,161**	25,139,643
பொறுப்புக்கள்			
நடைமுறையல்லாத பொறுப்புகள்			
பிற்போடப்பட்ட வருமானம் - அரச மானியம்	8	**16,259,927**	18,653,237
நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் கடப்பாடு	9	**2,038,306**	1,187,774
		18,298,233	19,841,011
நடைமுறைப் பொறுப்புகள்			
பிற்போடப்பட்ட வருமானம் - அரச மானியம்	10	**922,064**	-
செலுத்த வேண்டிய கணக்குகள்	11	**4,747,864**	5,298,632
		5,669,928	5,298,632
மொத்தப் பொறுப்புக்கள்		**23,968,161**	25,139,643

பக்கங்கள் 57 இலிருந்து 63 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களைப் பூரணப்படுத்துவதற்கான முக்கியமானதொரு பகுதியாகும்.

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்புச் சபையின் சபை அங்கத்தவர்கள் பொறுப்பாளிகளாவர்.

சபை உறுப்பினர்களுக்காகவும் அவர்கள் சார்பாகவும். இந்த நிதிக் கூற்றுகளுக்கான அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

தலைவர்

உறுப்பினர்

பதில் பணிப்பாளர் நாயகம்

பதில் பணிப்பாளர் நாயகம்
(நிதி மற்றும் நிருவாகம்)

திகதி: 13 மார்ச் 2020

நிதிச் செயலாற்றல் கூற்றும் விரிவான வருமானக் கூற்றும்

திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது	குறிப்பு	2019 ரூபா	2018 ரூபா
வருமானம்			
அரச மானியங்கள்	12	82,511,881	94,138,101
கழி: இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்திற்கு விடுவிக்கப்பட்ட மானியங்கள்		4,000,000	4,000,000
		78,511,881	90,138,101
தொழிற்பாட்டு செலவினங்கள்			
சபை உறுப்பினர் படிகள்		(1,327,500)	(1,360,500)
கணக்காய்வாளர் ஊதியம்	13	(240,100)	(193,200)
பதவியணியினர் கிரயம்	14	(41,487,633)	(44,084,317)
எரிபொருளும் உராய்வு நீக்கிகளும்		(1,544,609)	(1,869,995)
அச்சீட்டு குறிப்புக்கள்		(897,161)	(551,356)
வாடகையும் கட்டிட சேவைக் கட்டணங்களும்		(11,871,631)	(11,692,318)
பெறுமானத்தேய்வும் காலக்கழிவு செலவினங்களும்	3	(3,141,970)	(10,174,715)
மின்சாரம்		(1,214,982)	(1,304,175)
மீளாய்வாளர்களுக்கான தொழில்சார் கட்டணங்கள்		(1,879,000)	(2,438,000)
சர்வதேச அங்கத்துவம்		(2,240,195)	(2,595,809)
புத்தகங்களும் சஞ்சிகைகளும்		(944,722)	(1,341,583)
வெளிநாட்டு பிரயாணம்		(4,990,384)	(4,675,184)
பயிற்சியும் அபிவிருத்தியும்		(717,362)	(2,402,223)
அனுமதிப்பத்திரமும் காப்புறுதியும்		(1,081,768)	(1,014,334)
எழுது கருவிகள்		(853,151)	(677,056)
ஏனைய நிர்வாகச் செலவினம்	15	(4,079,713)	(3,763,336)
		-	-
ஏனைய விரிவான வருமானம்			
நிர்ணயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகளின் மீள் அளவிடல் (நட்டம்) / இலாபம்		(648,735)	19,574
நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் கடப்பாட்டில் மீளஅளவீடுகள் தொடர்பான அரச மானியம்		648,735	(19,574)
		-	-
ஆண்டின் போதான தேறிய மிகை / (குறைவு)		-	-

பக்கங்கள் 57 இலிருந்து 63 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களைப் பூரணப்படுத்துவதற்கான முக்கியமானதொரு பகுதியாகும்.

தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று

	திரண்ட நிதி ரூபா
2017 திசெம்பர் 31 இல் மீதி	-
ஆண்டிற்கான தேறிய மிகை / (பற்றாக்குறை)	-
2018 திசெம்பர் 31 இல் மீதி	-
ஆண்டிற்கான தேறிய மிகை / (பற்றாக்குறை)	-
2019 திசெம்பர் 31 இல் மீதி	**-**

பக்கங்கள் 57 இலிருந்து 63 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களைப் பூரணப்படுத்துவதற்கான முக்கியமானதொரு பகுதியாகும்.

காசுப்பாய்ச்சல் கூற்று

திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது	குறிப்பு	2019 ரூபா	2018 ரூபா
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்			
ஆண்டின் போது தேறிய மிகை / (குறைவு)		-	-
சீராக்கங்கள்			
இவ்வாண்டுப் பகுதியில் பெறப்பட்ட அரச மானியங்கள்		81,689,370	81,391,000
பிற்போடப்பட்ட அரச மானியம் விரிவான வருமானத்திற்கு மாற்றப்பட்டது	12	(83,160,616)	(94,118,527)
பெறுமானத்தேய்வு	3	3,141,970	10,174,715
அலுவலக உபகரண விற்பனையால் நட்டம்		-	3
பணிக்கொடை நிதியத்தின் முதலீடுகள் மீது பெறப்பட்ட வட்டி		(338,870)	(425,339)
நிர்ணயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாடு	14.1	1,350,531	696,349
செலவிலும் கூடிய வருமானம் / (வருமானத்திலும் கூடிய செலவினம்)			
தொழிற்படு மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்		2,682,385	(2,281,799)
வைப்புக்களில் ஏற்பட்ட (அதிகரிப்பு)/வீழ்ச்சி		-	-
இருப்புக்களில் ஏற்பட்ட (அதிகரிப்பு)/வீழ்ச்சி		55,705	(181,683)
பெறத்தக்க கணக்குகளில் ஏற்பட்ட (அதிகரிப்பு) வீழ்ச்சி		(870,004)	347,335
கொடுபடத்தக்க கணக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பு/(வீழ்ச்சி)		(550,769)	1,321,334
பெறப்பட்ட பதிவுக் கட்டணங்கள் செயலமர்வு IFIAR		-	(6,719,098)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்		1,317,317	(7,513,911)
முதலீட்டு நடவடிக்கைகளிளான காசுப்பாய்ச்சல்			
ஆதனங்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் கொள்வனவு		(67,490)	-
பணிக்கொடை நிதியத்தில் முதலீடு		(500,000)	(800,000)
பாதுகாப்பறை பணிக்கொடை நிதியத்தின் முதலீடுகள் மீதான பெறத்தக்க வட்டி		338,870	425,339
தேறிய காசுப்பாய்ச்சல்		1,088,697	(7,888,572)
நிதியீட்டல் நடவடிக்கைகளினான காசுப்பாய்ச்சல்		-	-
காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு (குறைவு)		1,088,697	(7,888,572)
ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்		39,328	7,927,900
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்	7	1,128,025	39,328

பக்கங்கள் 57 இலிருந்து 63 வரை காணப்படும் குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களைப் பூரணப்படுத்துவதற்கான முக்கியமானதொரு பகுதியாகும்.

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1. கூட்டுத் தகவல்கள்

2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் நிதிக்கூற்றுக்களை வெளியிடுவதற்கு 2020 மார்ச் 13 ஆம் திகதி சபையின் உறுப்பினர்களது தீர்மானமொன்றின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டது. இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையானது 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டது.

சபையின் தொழிற்பாடு 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொழில் முயற்சிகளின் நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல், சமர்ப்பித்தல் மற்றும் கணக்காய்வு என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்களுடன் இணங்கிச் செல்கின்றமையினைக் கண்காணிப்பதேயாகும்.

2019 திசெம்பர் 31 இல் சபையானது 13 நிரந்தர ஊழியர்களையும் 3 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களையும் 1 தற்காலிக ஊழியர்களையும் உள்ளடக்கியுள்ளது. (2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 14 நிரந்தர ஊழியர்களும் 5 ஒப்பந்த மற்றும் 2 தற்காலிக ஊழியர்களும் இருந்தனர்)

2. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

தயாரிப்பிற்கான அடிப்படை

சபையின் நிதிக்கூற்றுக்கள் கணக்கீடுகளின் அட்டுறு அடிப்படையிலான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் வரலாற்று ரீதியிலான செலவு மரபுகளின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம் முழுவதும் கொள்கைமாறாத அடிப்படையில் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன

அறிக்கையிடல் திகதிக்கு பின்னரான நிகழ்வுகள்

நிதி நிலைமைக் கூற்றுக்களின் திகதிக்குப் பின்னரான அனைத்து பொருண்மையான நிகழ்வுகளும் பரிசீலிக்கப்பட்டு தேவையானவிடத்து நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான தேவையான சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டன

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பன திரட்டிய பெறுமானத்தேய்வு கழித்துக் காட்டப்பட்டுள்ளன. தேய்மானம் நிதிச் செயலாற்றல் கூற்றில் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தின் அடிப்படையில் நேர்கோட்டு அடிப்படையில் பின்வருமாறு விதிக்கப்படுகின்றன

விபரம்	மதிப்பிடப்பட்ட பயன்படு ஆயுட்காலம்
மோட்டர் வாகனங்கள்	10 ஆண்டுகள்
அலுவலக உபகரணங்கள்	4 ஆண்டுகள்
தளபாடங்கள், பொருத்திகள்	6-10 ஆண்டுகள்
தகங்களும் வெளியீடுகளும்	3 ஆண்டுகள்

ஆண்டிற்கு பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்படுவதுடன் விற்பனை செய்யப்படும் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட காலத்திற்கு மாத்திரம் தேய்மானம் மேற்கொள்ளப்படுவதுடன் விற்பனை செய்யும் மாதத்தில் தேய்மானம் மேற்கொள்ளப்படமாட்டாது.

கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கேற்ப நூல்கள் மற்றும் வெளியீடுகள் தவிர்ந்த ரூபா 7,500/- செலவினை விஞ்சாத அனைத்துப் பொருட்களினதும் கொள்வனவுகளும் ரூபா 1,000/- இனை விஞ்சாத ஏனைய வெளியீடுகளின் கொள்வனவுகளும் ஆண்டின் செலவினமாகக் கருதப்படும்.

இருப்புக்கள்

ஐஇருப்புக்கள் கிரயம் அல்லது தேறிய கைக்கொடும் பெறுமதியில் குறைந்த அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன. இருப்புக்களின் செலவு முதலில் வருவது முதலில் செல்லும் (FIFO) என்பதன் அடிப்படையினைப் பயன்படுத்தி பெறப்பட்டது.

பெற வேண்டிய கணக்குகள்

பெற வேண்டிய கணக்குகளில் பெறப்பட வேண்டிய தொகைகளில் தேறக்கூடிய மதிப்பிடப்பட்ட பெறுமதியே காட்டப்படுவதுடன் தேவையானவிடத்து ஐயக் கடனும் மற்றும் அறவிட முடியாத கடனுக்கான ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காசு மற்றும் காசுக்கு சமமானவை

கையிலுள்ள மற்றும் வங்கியிலுள்ள காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள் கிரயத்தில் காட்டப்படுகின்றன. காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கங்களுக்காக, காசு மற்றும் காசிற்குச் சமனானவைகள் கையிலுள்ள காசு மற்றும் செலுத்த வேண்டிய வங்கி மேலதிகப் பற்று, வங்கியிலுள்ள வைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

செலுத்தப்பட வேண்டிய கணக்குகளுக்கான பொறுப்புக்கள் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற காசு மற்றும் காசுக்குச் சமமான தொகைகளில் கொண்டு செல்லப்படுகின்றன.

நிர்ணயிக்கப்பட்ட நன்மைகளின் கிரயம்

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் கொடுபடத்தக்க ஓய்வு பெறுகின்ற பணிக்கொடைகளுக்கான நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் கடப்பாடு, நிதிக் நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியினைக் காட்டுகிறது. அனைத்து வருடாந்த இலாபங்களும் இழப்புக்களும் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய விரிவான வருமானம் மற்றும் நிதிச் செயலாற்றுகை கூற்று என்பவற்றில் உடனடியாக அங்கீகரிக்கப்படுகின்றன.

அரசாங்க மானியம்

இலங்கை அரசாங்கத்தின் திறைசேரியிலிருந்து பெறப்படும் கொடைகள் தொடர்பான செலவுகள் அங்கீகரிக்கப்படுகின்ற காலப்பகுதியின் வருமானமாக அங்கீகரிக்கப்படும்.

அடுத்துவரும் காலப்பகுதியில் செலவினமாகக் கருதப்படக் கூடிய அரச மானியங்களைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் பிற்போடப்பட்ட வருமானமாக அங்கீகரிக்கப்படும். பொறுப்புக்களைக் கழித்த, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் உட்பட ஏனைய பொறுப்புக்களினால் பிரதிபலிக்கப்படும் அரச கொடைகள் (பெறப்பட்ட கொடைகளின் கணக்கு மீதான பொறுப்புக்கள் தவிர்ந்தவை) பொறுப்புக்களாக இனங்காணப்படுகின்றன

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

3. ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	மோட்டார் வாகனங்கள்		அலுவலக உபகரணங்கள்		தளபாடங்களும் பொருத்திகளும்		நூலகப் புத்தகங்கள்		மொத்தம்	
உள்ளவாறு	2019.திசெ.31 ரூ.	2018.திசெ.31 ரூ.	2019.திசெ.31 ரூ.	2018.திசெ.31 ரூ.	2019.திசெ.31 ரூ.	2018.திசெ.31 ரூ.	2019.திசெ.31 ரூ.	2018.திசெ.31 ரூ.	2019.திசெ.31 ரூ.	2018.திசெ.31 ரூ.
கிரயம்										
ஆண்டின் ஆரம்பத்தில்	51,160,000	51,160,000	12,333,211	12,507,865	11,420,413	11,496,914	3,198,399	3,198,399	78,112,023	78,363,178
சேர்த்தல்கள்	-	-	67,490	-	-	-	-	-	67,490	
கைதவிர்ப்புக்கள்	-	-	-	(174,654)	-	(76,501)	-	-	-	(251,155)
ஆண்டின் இறுதியில்	51,160,000	51,160,000	12,400,701	12,333,211	11,420,413	11,420,413	3,198,399	3,198,399	78,179,513	78,112,023
தீரண்ட தேய்மானம்										
ஆண்டின் ஆரம்பத்தில்	40,474,665	32,042,665	9,539,015	8,316,247	10,517,081	10,273,314	3,188,285	3,163,257	63,719,046	53,795,483
ஆண்டிற்கான தேய்மானம்	1,601,271	8,432,000	1,252,027	1,397,420	280,111	320,267	8,561	25,028	3,141,970	10,174,715
கைதவிர்த்தலுக்கான தேய்மானம்	-	-	-	(174,652)	-	(76,500)	-	-	-	(251,152)
ஆண்டின் இறுதியில்	42,075,936	40,474,665	10,791,042	9,539,015	10,797,192	10,517,081	3,196,846	3,188,285	66,861,016	63,719,046
குறைத்தெழுதிய பெறுமதி ஆண்டின் இறுதியில்	9,084,064	10,685,335	1,609,659	2,794,196	623,221	903,332	1,553	10,114	11,318,497	14,392,976

மோட்டார் வாகனங்கள் 5 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்துவதை கடந்தகால அனுபவமாகக் கொண்டு முகாமைத்துவம் மோட்டார் வாகனங்களின் பயன்படு ஆயுட்காலத்தை 5 ஆண்டிலிருந்து 10 ஆண்டுவரை மாற்றியிருந்தது. இம்மாற்றங்களில் உள்ளவாறான மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பெறுமானத்தேய்வு செலவினங்களைப் பின்வருமாறு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்துது.

	2019 ரூபா	2020 ரூபா	2021 ரூபா	2022 ரூபா	2023 ரூபா	பின்னர் 2023
குறைவு/(மிகை) தேய்மான செலவில்	6251	(123)	(246)	(1601)	(1601)	(2679)

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

இல் உள்ளவாறு	31-திசெ-19 ரூபா	31-திசெ-18 ரூபா
4. வைப்புக்கள் (நடைமுறையல்லாத)		
வாடகை வைப்புக்கள்	6,879,736	6,879,736
வைப்புக்கள் பாதுகாப்பு காப்பறை	100,000	100,000
	6,979,736	6,979,736
5. இருப்புக்கள்		
எழுது கருவிகள்	642,810	698,514
6. பெறவேண்டிய கணக்குகள்		
முற்கொடுப்பனவுகள்	2,499,794	2,739,670
மதியுரையாளருக்கான பகுதிக் கொடுப்பனவு	1,369,299	259,419
வைப்புக்கள்	30,000	30,000
	3,899,093	3,029,089
7. காசு மற்றும் காசுக்கு சமமான		
கையிலும் வங்கியிலுமுள்ள காசு	1,128,025	39,328
	1,128,025	39,328
8. பிற்போடப்பட்ட வருமானம் - அரச மானியம் (நடைமுறையல்லாத)		
வருட ஆரம்பத்தில் உள்ளவாறு மீதி	20,184,938	30,256,006
நடைமுறையல்லாத சொத்துக்களை கையேற்க அரசின் மானியங்கள்	67,490	-
மானிய பெறுவனவும் பணிக்கொடையில் முதலீடும்	500,000	800,000
ஆண்டிற்கான பெறுமானத்தேய்வும் காலக்கழிவும்	(3,141,970)	(10,174,715)
பணிக்கொடை நிதியத்திற்கான வட்டி பெறுவனவு	338,870	425,339
அலுவலக உபகரணங்கள் கைதவிர்ப்பு நட்டம்	-	(3)
ஆண்டிற்கான கடப்பாடுகளுக்கான நன்மை	(1,689,401)	(1,121,689)
ஆண்டின் இறுதியில் மீதி	16,259,927	20,184,938
பிற்போடப்பட்ட வருமானத்திற்கு மாற்றல் அரச மானியங்கள் (நடைமுறை)	-	(1,531,701)
	16,259,927	18,653,237
பிரதிநிதித்துவப்படுத்துபவை		
ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகள்	11,318,497	14,392,976
வைப்புக்கள் (நடைமுறையல்லாத)	6,979,736	6,979,736
(பணிக்கொடை ஏற்பாடு) / பணிக்கொடை மிகை	(2,038,306)	(1,187,774)
	16,259,927	20,184,938
பிற்போடப்பட்ட வருமானத்திலிருந்து மாற்றல் - அரச மானியங்கள் (நடைமுறை)	-	(1,531,701)
	16,259,927	18,653,237

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

இல் உள்ளவாறு	31-திசெ-19 ரூபா	31-திசெ-18 ரூபா
9. நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் கடப்பாடுகள் / (சொத்துக்கள்)		
ஆண்டின் தொடக்கத்தில் மீதி	5,047,793	6,358,156
ஆண்டிற்கான கட்டணம்	576,197	613,847
ஆண்டிற்கான வட்டி	464,469	527,415
உள்ளவாறான பெறுகைகள் / நட்டம்	648,735	(19,574)
	6,737,194	7,479,844
ஆண்டின் போதான கொடுப்பனவுகள்	(397,001)	(2,432,051)
	6,340,193	5,047,793
பணிக்கொடை நிதியம் (குறிப்பு 9.1)	(4,301,887)	(4,022,968)
ஆண்டின் இறுதியில் மீதி	2,038,306	1,024,825
பணிக்கொடை மீது செலுத்த வேண்டியவை உ.போ.செ.வரி	-	162,949
ஆண்டின் இறுதியில் மீதி	2,038,306	1,187,774
கடப்பாடுகள் நடப்பு பெறுமதி பின்வரும் எடுகோள்களைப் பயன்படுத்தி அளவிடப்பட்டது.		
எதிர்பார்க்கப்பட்ட சம்பள உயர்வு	10%	10%
கழிவு / வட்டி விகிதம்	10.23%	12.23%
ஊழியர் புரள்வு காரணி	9%	9%
பணிக்கொடைக்கான பொறுப்பு பகுதியளவில் நிதியிடப்பட்டது.		
9.1 பணிக்கொடை நிதியம்		
ஆண்டின் ஆரம்பத்தில் மீதி	4,022,968	5,066,731
ஆண்டின் போதான முதலீடு	500,000	800,000
ஆண்டின் போதான வட்டி பெறுவனவு	338,870	425,339
ஆண்டின் போதான கொடுப்பனவுகள்	(559,951)	(2,269,102)
ஆண்டின் இறுதியில் மீதி	4,301,887	4,022,968
10. பிற்போடப்பட்ட வருமானம் - அரச மானியம் (நடைமுறை)		
ஆண்டின் தொடக்க மீதி	(1,531,701)	1,124,758
இருப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு/(வீழ்ச்சி) மற்றும் பெறவேண்டிய கணக்குகள்	814,300	(165,651)
காசு மற்றும் சமமானவைகளில் அதிகரிப்பு/(வீழ்ச்சி)	1,088,697	(7,888,572)
செலுத்த வேண்டிவைகள் மற்றும் பிற்போடப்பட்ட வருமான (அதிகரிப்பு)/வீழ்ச்சி	550,768	5,397,764
ஆண்டின் இறுதியில் மீதி	922,064	(1,531,701)
பிற்போடப்பட்ட வருமான மாற்றல் - அரச மானியம் (நடைமுறையல்லாத)	-	1,531,701
	922,064	-
பிரதிநிதித்துவப்படுத்துபவை		
இருப்புக்கள்	642,810	698,514
பெறவேண்டிய கணக்குகள்	3,899,093	3,029,089
காசும் காசிற்கு சமமானவைவகளும்	1,128,025	39,328
கழி. செலுத்த வேண்டிய கணக்குகள்	(4,747,864)	(5,298,632)
ஆண்டின் இறுதியில் மீதி	922,064	(1,531,701)
பிற்போடப்பட்ட வருமான மாற்றல் - அரச மானியம் (நடைமுறையல்லாத)	-	1,531,701
	922,064	-

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

இல் உள்ளவாறு	31-திசெ-19 ரூபா	31-திசெ-18 ரூபா
11. செலுத்த வேண்டிய கணக்குகள்		
கணக்காய்வாளர் ஊதியம்	560,100	320,000
இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்திற்கு பங்களிப்பு செலுத்த வேண்டியது	2,000,000	2,000,000
செலுத்த வேண்டிய மீளாய்வாளர் கட்டணங்கள்	567,000	735,000
பதவியணியினர் ஊக்குவிப்பு படிகள்	754,000	949,000
ஏனைய செலுத்த வேண்டியவை	866,764	1,294,632
	4,747,864	5,298,632
12. அரசாங்க மானியங்கள்		
இவ்வாண்டில் பெறப்பட்ட அரசாங்க மானியங்கள்	81,689,370	81,391,000
பணிக்கொடை நிதியத்தில் முதலீடு செய்யப்பட்டவை கிடைத்த மானியங்கள்	(500,000)	(800,000)
மூலதனச் செலவினத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட மானியங்கள்	(67,490)	-
தேறிய நடைமுறைச் சொத்துக்களில் நிதியிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டவை	(2,453,765)	2,656,459
ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவுச் செலவுகள்	3,141,970	10,174,715
பணிக்கொடை நிதியம் மீது பெறப்பட்ட வட்டி	(338,870)	(425,339)
அலுவலகச் சாதனங்களின் விற்பனை மீதான நட்டம்	-	3
ஆண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நன்மைப் பொறுப்புக்களின் ஏற்பாடு	1,040,666	1,141,262
நிதிச்செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்ட மானியங்கள்	82,511,881	94,138,101
விரிவான வருமானக் கூற்றில் காட்டப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் மானியம்	648,735	(19,574)
காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்ட மொத்த மானியங்களும் விரிவான வருமானக் கூற்றிற்கு மாற்றப்பட்டது.	83,160,616	94,118,527
13. கணக்காய்வாளர் ஊதியம்		
நடப்பாண்டு	200,000	160,000
(மிகை)/ முன்னைய ஆண்டிற்கான குறை ஒதுக்கீடு	40,100	33,200
	240,100	193,200

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது	31-திசெ-19 ரூபா	31-திசெ-18 ரூபா
14. பதவியணியினர் கிரயம்		
பதவியணியினர் சம்பளம்	20,442,737	21,858,386
ஊழியர் சேமலாப நிதி	2,602,828	2,780,709
ஊழியர் நம்பிக்கை நிதி	651,615	695,177
நிர்ணயிக்கப்பட்ட கடப்பாட்டு நன்மை (குறிப்பு 14.1)	701,796	715,923
ஏனைய வெளியக சேவை	1,401,215	1,218,240
அலுவலர் ஊக்குவிப்பு	10,473,666	12,002,683
உடல்நல காப்புறுதி	654,872	483,101
அலுவலர் நலன்புரி	956,547	780,029
ஏனைய அலுவலர் நலன்புரிகள்	3,602,357	3,550,068
	41,487,633	44,084,317
14.1 நிர்ணயிக்கப்பட்ட கடப்பாட்டு நன்மை		
ஆண்டிற்கான கட்டணங்கள்	576,197	613,847
ஆண்டிற்கான தேறிய வட்டி	125,599	102,076
	701,796	715,923
விரிவான வருமான் கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட உள்ளவாறான நட்டங்கள்	648,735	(19,574)
காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட மொத்த கடப்பாட்டு நன்மைகள்	1,350,531	696,349
15. ஏனைய நிர்வாக செலவினம்		
ஆண்டறிக்கை	430,000	397,605
கணனி பராமரிப்பு	79,494	104,385
உபகரண பராமரிப்பு	272,691	154,360
தொலைபேசி	696,587	764,274
வாகன பராமரிப்பு	959,409	881,546
அலுவலக செலவினம்	329,514	401,445
செயலாளர் கட்டணங்கள்	-	90,000
சட்ட மற்றும் துறைசார் கட்டணங்கள்	220,500	128,628
உள்ளகக் கணக்காய்வுக் கட்டணங்கள்	193,100	170,000
நானாவித செலவினம்	898,418	671,093
	4,079,713	3,763,336

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது	31-திசெ-19 ரூபா	31-திசெ-18 ரூபா
16. IFIAR 2018 - செயலமர்வின் வருமானம் மற்றும் செலவினம்		
வருமானம்		
பங்குபற்றுனர் கட்டணங்கள்	-	11,584,015
திறைசேரி நிதியம்	-	1,175,000
அழைப்பு வைப்பு வட்டி	-	60,924
	-	12,819,939
செலவினங்கள்		
நிகழ்ச்சி முகாமை கட்டணங்கள்	-	1,099,414
இடம் தொடர்பான செலவினங்கள்	-	4,851,312
செவிப்புலன் தொடர்பான செலவினங்கள்	-	2,201,410
ஏனைய	-	3,502,217
	-	11,654,353
செலவினத்தை விஞ்சிய வருமானம்	-	1,165,586
கழி: திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்ட மிகை பணம்	-	(1,165,586)
	-	-

SLAASMB 2018 பெப்ரவரியில் சுதந்திர கணக்காய்வு 2018 ஆம் ஆண்டின் மீளாய்வாளர்களுக்கான சர்வதேச மன்றத்தின் (IFLAR) வெளிக்கள செயலமர்வை நடாத்தியது

17. மூலதன கடப்படுகளுக்கு உட்படல்

செயற்பாடுகளை இலகுவாக்குவதற்காக வாடகைக்கு பெற்றுக்கொண்ட கட்டிடத்தின் முதலாம் மாடியின் அறைளை ஒதுக்குவதற்கு நிர்மாண திட்டமிடல் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. எவ்வாறாயினும் நிதியத்தை பெற்றுக்கொள்வதில் தடைகள் காணப்பட்டமையால் 2019 ஆம் ஆண்டின் போது நிர்மாண வேலைகள் இடம்பெறவில்லை. அதன் பிரகாரம் முதலாவது மாடியின் உள்ளக திட்டமிடலுக்காக ரூபா 288,327.67 மதியுரை செலவினமாக கொடுப்பனவு செய்வதற்கு கடப்பாடு 2019 திசெம்பர் 31 இல் காணப்பட்டது. மேலும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை களஞ்சிய வசதிகளுக்காக மேலதிக மூலதனச் செலவினத்திற்காக ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதும் 2019 திசெம்பர் 31 வரை நிதி வழங்கப்படாத தொகை ரூபா 650,000 ஆக இருந்தது (2018 திசெம்பர் 31 வரை கடப்பாடுகள் காணப்படவில்லை.)

18. தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்

ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பட்டயக் கணக்காளர்கள கவர்வதற்கும் வைத்துக்கொள்வதற்கும் உரியதாக நடவடிக்கைகளை எடுத்து ஆரம்பிப்பதற்காக கேபீஎம்ஜி சேர்விஸ் தனியார் கம்பனியிடமிருந்து ரூபா 200,000 கிரயத்திற்கு பட்டயக் கணக்காளரகளின் சம்பள புள்ளவிபர பதிவேடு தொடர்பாக அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. சபையின் உறுப்பினர் டப்ளியு. டப்ளியு. ஜே. சீ. பெரேரா கேபீஎம்ஜீ இன் பங்காளராவார்.

19. நிகழகத்தக்க பொறுப்புக்கள்

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எவ்வித நிகழகத்தக்க பொறுப்புக்களும் காணப்படவில்லை. (2018 திசெம்பர் 31 இல் - இல்லை).

20. நிதி நிலைமைக் கூற்றின் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் நிலைமைக் கூற்றின் திகதிக்குப் பின்னர் நிதிக் கூற்றுக்களில் ஏதேனும் சீராக்கத்தினை அல்லது வெளிப்படுத்துகையினை அவசியமாக்கும் பொருண்மை வாய்ந்த நிகழ்வுகள் எதுவும் இடம் பெறவில்லை.

குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் - SBEs

சட்டரீதியாகவும், நிதிமுறைகளுக்கும் இணங்க குறித்துறைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள்.

- அனுமதிப்பத்திர வங்கிகள்
- காப்புறுதித் தொழிலில் ஈடுபட அதிகாரமளிக்கப்பட்ட கம்பனிகள்
- குத்தகை தொழிலில் (Leasing) ஈடுபட்டுள்ள கம்பனிகள்.
- காரணிகர் கம்பனிகள்
- நிதிக் கம்பனிகள்
- பங்கு தரகர் கம்பனிகளில் ஈடுபட அனுமதித்தவை.
- நம்பிக்கை நிதிய கம்பனிகள்
- நிதி முகாமைத்துவ கம்பனிகள்
- பங்கு பதிவர்த்தனை கம்பனிகள்
- பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகள்
- ஏனைய கம்பனிகள், அவை

  (அ) வருடாந்தம் ரூபா 500 மில்லியனுக்கு மேல் புரள்வை கொண்டன

  (ஆ) முந்தய நிதி வருட முடிவிற்கு முன் பங்குதாரின் உரிமை ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்டவை

  (இ) முந்தய நிதி வருட முடிவிற்கு முன், ரூபா 300 மில்லியனுக்கு மேற்பட்ட மொத்த சொத்தை கொண்டவை.

  (ஈ) வங்கிகளுக்கும், நிதிநிறுவனங்களுக்கும் முந்தைய நிதிவருட முடிவில் பொறுப்பு ரூ. 100 மில்லியனுக்கு மேற்பட்டவை.

  (உ) 1,000 பேரை விஞ்சுகின்ற பணியாட்டொகுதியினரைக் கொண்டுள்ளதுமான கம்பனிகள்.

- பொருட்கள், சேவைகள் விற்பனைகளில் ஈடுபடும் பொது கூட்டுத்தாபனங்கள்.
- கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட தாய், சேய் கம்பனிகள், தொகுதிகள், அவற்றின் கணக்குகளுடன் இணைக்கப்பட்டவை உள்ளடக்கும்.

நிறுவனத்தின் பெயர்

இலங்கை கணக்கியல் மற்றும்
கணக்காய்வு நியமங்கள்
கண்காணிப்பு சபை

சட்டக் கோவை

நியதிச் சபையானது 1995ஆம்
ஆண்டின் 15ஆம் இலக்க
இலங்கை கணக்கியல் மற்றும்
கணக்காய்வு நியமங்கள்
சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது.

கூட்டிணைக்கப்பட்டுள்ள நாடு

இலங்கை

தலைமை அலுவலகம்

3ஆம் மாடி,
293, காலி வீதி,
கொழும்பு 3.
தொலைபேசி: 011 2301210
தொலைநகல்: 011 2301211
மின்னஞ்சல்: slaasmb@sltnet.lk

வெப்தளம்

www.slaasmb.gov.lk

கணக்காய்வாளர்கள்

வெளியக கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
இல. 306/72, பொல்துவ வீதி
பத்தரமுல்ல

உள்ளக கணக்காய்வாளர்

எதிரிசிங்க அன்ட் கம்பனி
45, பிரேபுறுக் வீதி
கொழும்பு 02

வங்கியாளர்கள்

இலங்கை வங்கி

சட்ட ஆலோசகர்கள்

சட்டமா அதிபர்
சட்டமா அதிபர் திணைக்களம்
கொழும்பு 12